# கலைமுகம்

காலாண்டு கலைஇலக்கிய இதழ்



தை - பங்குனி / சித்திரை - ஆனி



# ஜனனமும். . .

# மரணமும். . .

ஜனனம்... ஜனனம்... ஜனனம்...
மரணம்... மரணம்... மரணம்...

ஒட்டிப் பிறந்த இரட்டைப் பிள்ளைகள்
ஓடி விளையாடுது கூடி விளையாடுது
ஒன்று ஒரு திசையில் ஒன்று மறு திசையில்
நின்று போராடுது என்றும் தீராதது.

ஜனனம் பிறக்கையிலே மரணம் அழுகிறது
மரணம் பிறக்கையிலே ஜனனம் அழுகிறது
மரணமும் வாழ்வுதான்
அஞ்சினால் மரணந்தான்
இரண்டும் நிற்காதது
இயற்கை விளையாட்டிது.

ஆறிலும் நூறிலும் மரணம் வரட்டுமே
அன்பினில் மட்டும் உலகம் உயிர்க்குமே
மரணம் வருமென்றெண்ணித்
தினமும் மனங்கலங்கின்
துயரம் போயாகுமோ கலகம் நின்றாகுமோ?

மரணத்திற்கஞ்சின்
கொடுமை அரசாட்சிதான்
மிஞ்சி எழுவோமெனின்
நீதி அரசாட்சிதான்
கோழைக்குணம் மாறட்டும்
கொள்கைத் தேரோட்டட்டும்
வாழ்க்கைப் போராட்டமே
வெற்றிக்கொடி நாட்டட்டும்.

- இலக்கியா -

2004


காலாண்டுச் சஞ்சிகை

# கலைமுகம்

கலை இலக்கிய சமூக இதழ்

கலை: 15 முகம் : 01/02



பிரதம ஆசிரியர்
நீ. மரியசேவியர் அடிகள்

பொறுப்பாசிரியர்
செல்வி ஜெ. தாரிணி

அட்டைப்பட வடிவமைப்பு
இரா. ரஜனி

கணணி அச்சு
செல்வி அ. குயின் ஜான்சி
செல்வன் யோக. ரஜனீஸ்



பக்க வடிவமைப்பு, அச்சுப்பதிவு
Lanka Publishing House
No. 340-1/6, Trust Complex, Sea Street,
Colombo-13. Sri Lanka.
Tel : 0094 11 2520447



தொடர்புகளுக்கு
Centre for Performing Arts
19-5/6 Milagiriya Avenue,
Colombo-04, Sri Lanka.
Tel : 2597245 Fax : 2556712
E-mail : saveri@dynanet.lk
web site: www.cpartsteam.org

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம், இலங்கை
தொலைபேசி : 021-2222393
E-mail: cpajaffna@eureka.lk

# உள்ளே...

## கட்டுரைகள்




சிந்தனையை நிறுத்திக்கொண்ட படைப்பாளி

பிடித்த கூலி கூக்குரலிடுகிறது

சாதியம் பற்றிய புத்தரின் கருத்தியல் ஒரு கண்ணோட்டம்

குறியீட்டரங்கு

சூறாவளியாகும் சூழல்பிரச்சனை

இலக்கியச்சிந்தனை: ஒரு புன்னகையிலிருந்து

சமாதானத்தைச் சாத்தியமாக...

மௌனநாடகங்கள் - சில குறிப்புக்கள்


## சிறுகதைகள்




ஜீவகாருண்யம்

எச்சங்கள்

சொல்லப்படாத ரகசியம்


## கவிதைகள்




சமநிலை அமைதி

அமைதியின் விரிப்பு

அந்த கணப்பொழுதுகள்

கவிதைக் கொலுசு

என் இறுதிப் போர்க்களம்

இணக்கத்தை நோக்கி

போர்தான் உன் கவிதை

பேனாக்கள் உறங்கட்டும்

ஜனனமும் ... மரணமும்...

வாங்கிக்கட்டு

மரணத்தைக் கொன்று

பாதை திறந்திடு


## நேர்காணல்




நந்தினி சேவியர்

# வணக்கம்

"வீடு எரிகின்றது, நாம் வேறுபக்கம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கண்களைத் திறக்கும் காலம் வந்துவிட்டது" - **சிறக்**

" சூழலை வறுமைப்படுத்தி அதன் தகைமைக்குப் பங்கம் விளைப்பதை நிறுத்தாவிடின் நாம் பேரழிவினைச் சந்திக்க நேரிடும்" - **ப்ளெயர்**


"இன்று பெரும் கேள்விக் குறியாக நிற்பது: நமது பூகோளத்தின் சூழலிருப்பு"

— **ஷ்றேடர்**


நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளின் அரசுத் தலைவர்கள், அறுபதாயிரம் பிரதிநிதிகள், சிறப்புப் பார்வையாளர்கள் கலந்து கொண்ட ஒரு மாநாடு. நடந்த தினம்: 2002 செப்ரெம்பர் இரண்டு. இடம் : தென்னாபிரிக்க நாட்டின் தலைநகரான ஜொஹான்னஸ்பேர்க் நகர். அதன் நோக்கம்: 1993ன் றீயோ மாநாட்டை நினைவுபடுத்தி அம்மாநாட்டில் எடுக்கப்பட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதத்தைப் பற்றி ஆராய்வது. அவ்வரங்கிலேயே தொடக்கத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் ஒலித்தன.

நமது பூகோளத்தின் சமநிலை இருப்புப் பற்றிய அச்சம் இன்று வளர்ந்து கொண்டு வருகின்றது. முன்னேற்றத்தின் பெயரால் நாமே நமது எதிர்காலத்தைக் குழிதோண்டிப் புதைக்கின்றோம் என்ற கருத்து நிலை வலுப்பெற்று வருகின்றது.

இப்பகைப்புலத்தில், சூழல் பற்றி எழும் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் சிலர் தீவிரமாக செயற்படத் தொடங்கி உள்ளனர். "பூகோளத்தைக் காப்போம்" என்னும் விருதுவாக்குடன் "சூழல் குடிமக்கள்" என்னும் இயக்கம் ஒன்று கடந்த சில ஆண்டுகளாகச் சூழல்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. பல்துறைசார் உலகப் புகழ் படைத்தோர் அதன் உறுப்பினர்களாக உள்ளனர். ஐக்கிய நாடுகள்சபைப் பொதுச்செயலர் கோவி அனான், இங்கிலாந்தின் இளவரசர் சாள்ஸ், ஜோர்தான் நாட்டின் அரசி நூர், முன்னாள் ரஷ்யத் தலைவர் மைக்கெல் கோபச் சொவ், நடிகர்களான றொபெட் றெட்வொட், லெயொனார்டோ டி காப்றியோ (ரைற்றானிக்) எழுத்தாளர்களான எட்வட் கோல்ட்ஸ்மித், உம்பேர்த்தோ பெலிசாறி, ஜாக்பெறின், விஞ்ஞானத்துறை சேர்ந்த ஹியூபேட் றீவ்ஸ், ஊடகத்துறை சேர்ந்த சி.என்.என் நிறுவனத்து றெட் ரேணர், முற்போக்குச் செயற்திறனார் அருந்ததி றொய், வந்தனா சிவா போன்றவர்கள் பலர் இவ்வியக்கத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். இவ்வியக்கத்தினர் சாற்றும் செய்தி: நாம் வாழும் பூமியின் இருப்புக்குத் தீமை விளைக்காது, வருங்காலச் சந்ததியினரும் அதில் நல்லபடியாக வாழும் இடமாக அதைப் பேணிக் காக்க வேண்டும்.



மனிதர்களின் பேராசைச் செயல்களினால் இப்பூகோளம் மாசுபடுத்தப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் மத்தியதரைக் கடலினுள் அறுபது இலட்சம் பொருட்கள் வீசி எறியப்படுகின்றன. இவைகளுள் அறுபது வீதமானவை ப்ளாஸ்ரிக் பொருட்கள். நீரிலும் சரி, நிலத்திலும் சரி நீண்டகாலத்துக்கு அழியாதிருக்கும் தன்மை இப்பொருட்களுக்கு இருக்கின்றமையின், நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினங்களுக்கு அவைகளால் ஆபத்துள்ளது.



இந்தோனேஷியா, பிறேசில் போன்ற நாடுகளின் பெருங்காட்டு மரங்கள் அழிக்கப்படுவதனால், வெப்ப தட்ப சமநிலை பாதிப்படைந்து, மண்சரிவுகள், வரட்சி நிலைகள் போன்றவை ஏற்படுகின்றன.

பல நாடுகளில், குறிப்பாக ஆபிரிக்க கண்டத்தில், கோடானு கோடி மக்களுக்குக் குடிநீர் இல்லை. ஆடுமாடுகளை மேய்ப்பதற்கும் பயிர் பச்சைகளை வளர்ப்பதற்கும் போதிய அல்லது அறவே நீர் இல்லை. எரிபொருள்களிலிருந்து வெளியேறும் (சீ ஓ இரண்டு) நச்சுப்புகையின் விளைவாக ஓஸோன் மண்டலத்தில் ஓட்டைகளும், பூகோள வெப்ப தட்ப நிலைகளில் பாரிய மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. உலகின் வெப்பம் அண்மைக் காலத்தில் 0.6 பாகை கூடியுள்ளது. இதனுடைய விளைவுகளே புயலும், வெள்ளப் பெருக்கும் வரட்சியும். இவ்வெப்பம் இன்னும் 1.4 பாகை கூடுமாகில், உணவுப் பஞ்சமும், பெரியளவிலான நன்னீர்ப் பற்றாக்குறையும் உருவாகும் என்பது ஆய்வாளர்களின் காத்திரமான கருத்து.

இப்படி, சூழல் மாசடைவதையும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் முடிவுறாப் பட்டியல் ஒன்றைப் போட்டுச் சொல்லலாம். ஆக நம்மத்தியில் சூழல்பற்றிய விழிப்புணர்வு உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும். இப் பூகோளம் இக்காலத்தில் வாழும் நமக்கு மட்டும் உரியது அன்று; வருங்காலத்தினருக்கும் அது சொந்தமானது என்ற கருத்து எல்லா மட்டங்களிலும் மக்கள் அனைவருக்கும் ஊட்டப்பட வேண்டும். கீழ்ப்புலத்து, குறிப்பாக இந்திய, பாரம்பரியக் கொள்கைநிலை, மேற் கூறிய கருத்தை வலியுறுத்த துணை நிற்கின்றது. இப்பாரம்பரியக் கண்ணோட்டத்தில், மனிதன் இயற்கையுடன் இணைந்து வாழ்கின்றான்; அவனுக்கும் இயற்கை அனைத்துக்கும் பிடிக்க முடியாத உயிருறவு உள்ளது; அண்டகோள ஒன்றிப்பு உணர்வுடன் அனைத்து உயிர்களும் வாழுகின்றன.

இத்தகைய உணர்வை நமது மரபணுக்களுள் கொண்டுள்ள நாம், கண்ணைப் பறிகொடுத்தபின் சூரியவணக்கம் செய்யாது, வருமுன் காப்பரண்களை எழுப்புபவர்களாகச் செயற்படுவோம். அதுவே அறம் சார்ந்த நெறியுமாகும்!

பே. மரிய சேவியர் அடிகள்

# மரணத்தைக் கொன்று...

இப்பொழுது சில நாள்கள்
இந்த மண்ணில் அமைதி,
இராணுவக் கெடுபிடிகள்
ரோந்து சுற்று நடவடிக்கை
தளர்த்தப் பட்டுள்ளன.

யாருடனோ யார் யாரோ
பேச்சு வார்த்தை அமர்க்களம்,
பேச்சு வார்த்தை முடிவறிய
திறந்த வாய் மூடாது
மறந்தவனாய் நீ உள்ளாய்.

உன் வயிற்றுப் பசி போக்க
நீயேதான் சாப்பிடுக!
நீயேதான் உழைத்திடுக!
உனது கைகள் உள்ளவரை
உனது கால்கள் உள்ளவரை
உனது பலம் உள்ளவரை
உனது உயிர் உள்ளவரை
நீ பிறந்த மண்ணினிலே
உனக்காக உழை! சாப்பிடு!
அடுத்தவன் உழைத்தா
சாப்பிடக் கொடுப்பான்!

திறந்த வாய் மூடாமல்
மறந்தா நீ பார்த்திருப்பாய்
பேச்சு வார்த்தை நடக்கட்டும்
பேசாமல் நீ உழைப்பாய்!

அமைதி வரும் என்றெண்ணி
குமைகின்ற மனத்தவனே
இந்த மண் நாய்களின்
ஊழையினை நீ கேட்பாய்
மரணத்தின் வாடையினை
முன் சொல்லும் எச்சரிக்கை,
யமன் மூலைத் திசையினிலே
சத்தமிடும் பல்லியைக் கேள்
முற்றத்து வேலியிலே
வீற்றிருந்து கத்துகின்ற
அண்டங் காக்கையைக் கேள்
கொடுமைகளின் வருகையினை
கட்டியம் கூறுவதை.

மரணத்தின் வருகையினை
மரணத்தால் தடு!
மரணத்தைத் தடுக்கும்
மரணத்தை நிகழ்த்து!
மாதங்கள் வருடங்கள்
வரையறைகள் செய்யாதே!
மனுதர்மம் உயிர்க்கும்வரை
மரணத்தின் வருகையினை
மரணத்தால் தடு!
மரணத்தைக் கொன்று
சுடுகாட்டில் இடு!

- பர்ஜனன் -



அமரர் ராஜ ஸ்ரீகாந்தன்

# சிந்தனையை நிறுத்திக் கொண்ட சிறந்த படைப்பாளி

அமரர் ராஜஸ்ரீகாந்தன் என்ற சிறந்த படைப்பாளியை நான் நன்கு அறிவேன். திருமறைக் கலாமன்றம் 1993 இல் கொழும்பில் "அசோகா" என்ற மௌன நாடகத்தை அரங்கேற்றியிருந்தது. அந்த நாடகத்தைப் பற்றிய ஒரு விமர்சனத்தை ராஜஸ்ரீகாந்தன் பத்திரிகை ஒன்றில் எழுதியிருந்தார். அந்த விமர்சனப்பாங்கு என்னை மிகவும் கவர்ந்திருந்தது. அத்தோடு கூடவே அவரைசந்திக்க வேண்டும் என்ற ஆவலும் என்னுள் முளைவிட்டிருந்தது.

ஒரு நாள், கொழும்பில், கொட்டாஞ்சேனையில் அவர் குடியிருந்த இல்லத்தில் அவரைச் சந்திக்கும்படி, கலைத்தூது என்.எம். மரிய சேவியர் அடிகளார் என்னை அனுப்பியிருந்தார். என்னை அன்புடன் வரவேற்று உபசரித்து உரையாடிய அவரது இனிய சுபாவம் என்னை மிகவும் கவர்ந்தது. அன்று தொட்டு அவருக்கும் எனக்குமிடையில் ஒரு நெருக்கமான உறவு மலர்ந்தது. கலைஞர்களை, படைப்பாளிகளைத் தட்டிக்கொடுத்து, தைரியப்படுத்தும் நல்ல பண்பு அவரிடம் இருந்தது. மின்னாமல் முழங்காமல் மழைகொட்டியதுபோல, அவர் திடிரென்று இயற்கை எய்திய செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் துயரும் அடைந்தவர்களுள் நானும் ஒருவன்.

கொழும்பில் டவர்மண்டப அரங்கில், திருமறைக் கலாமன்ற அனுசரணையுடன் நடத்தப்பட்ட கலைநிகழ்வில் திருகோணமலை கீழைத்தென்றல் கலாமன்றத்தினால் எனது 'அஸ்திரம்' என்னும் இலக்கிய நாடகம் அரங்கேற்றப் பட்டது. அந்த இலக்கிய நிகழ்விற்கு திரு. ராஜஸ்ரீகாந்தன் வந்திருந்ததையும், 'அஸ்திரம்' என்ற நாடகம் முடியும் வரை இருந்து பார்த்துவிட்டு, அவரும் அவரது நண்பர் ஒருவரும் கால் நடையாகவே தமது இல்லத்திற்குச் சென்றார்கள் என்பதையும் நான் அறியவில்லை.

அந்த கலைநிகழ்வின் ஒரு வாரத்தின் பின் நான் அவரைச்சந்தித்த போதுதான் அவர் இந்த செய்தியை என்னிடம் கூறினார். நாடகம் தொடங்குமுன்பு வெளியே போகவேண்டிய அவசியத்தினால் நாடகத்தைப் பார்ப்பதா, சென்று விடவா என்று மனதில் போராடிக் கொண்டிருந்த வேளை நாடகம் ஆரம்பமானதாகவும், அந்த நாடகம், வெளியே செல்ல வேண்டிய அவசியத்தை தன்னிடமிருந்து அகற்றி விட்டதாகவும், இறுதிவரை இருந்து நாடகத்தைப் பார்த்துவிட்டுசென்றதாகவும் என்னிடம் தெரிவித்தார். "வெளியே சென்றிருந்தால் ஒரு நல்ல நாடகத்தைப் பார்க்கும் சந்தர்ப்பத்தை இழந்திருப்பேன்" என்று அவர் சொன்னார். நாடகக்கலைமேல் அவருக்கிருந்த அளப்பரிய ஈடுபாட்டையே இதுகாட்டுகிறது.

இலங்கையின் ஆக்க இலக்கியப் படைப்பாளியாகவும், பத்திரிகையாளராகவும், விழிப்புலன், செவிப்புலன் இழந்தோருக்கு ஆசிரியராகவும் விளங்கியவர்

ராஜஸ்ரீகாந்தன். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினை தனது கருத்தியல் முகவரியாகக் கொண்டிருந்த அவர், 70 களின் ஆரம்பத்தில் 'விவேகி' சஞ்சிகையில் வெளிவந்த முதலாவது கவிதை மூலம் ஆக்க இலக்கியப் படைப்பாளியாக அறிமுகமானார்.

இவருடைய சிறுகதைகள் தேசிய, வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் மற்றும் சஞ்சிகைகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை ஆங்கிலம், ரஷ்யன், உக்ரேனியன், சிங்களம் ஆகிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. 1987இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பத்திரிகையியல் பாடநெறியைக் கற்றுத் தேர்ந்த இவர் சோவியத்நாடு, சோஷலிசம் - தத்துவமும், நடைமுறையும் 'புதிய உலகம்' ஆகிய சஞ்சிகைகளிலும் **'சக்தி'** பத்திரிகையினதும் ஆசிரிய பீடங்களில் சிறப்பாகப் பணியாற்றினார். அதன்பின் 'தினகரன்' தேசிய நாளிதழின் பிரதம ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

ராஜஸ்ரீகாந்தன் அவர்கள் மொழிபெயர்ப்புத்துறையிலும் தனது ஆற்றல்களை வெளிப் படுத்தியிருந்தார். சோவியத் இலக்கிய கர்த்தாக்கள், கலீல்ஜிப்ரான், மற்றும் அழகு சுப்பிரமணியம் போன்றவர்களின் அற்புதமான ஆக்கங்கள் இவருடைய மொழி பெயர்ப்பில் தமிழுக்குகிடைத்துள்ளன. அவருடைய மொழி பெயர்ப்பு நூலான 'நீதியின் மைந்தன்', சிறுகதைத்தொகுதியான 'காலச்சாளரம்' ஆகிய இரண்டு வெளியீடுகளும் இலங்கை சாஹித்திய மண்டலப் பரிசுகளையும், வடக்குக் கிழக்கு மாகாண இலக்கிய விருதுகளையும் பெற்றுள்ளன.

வடமராட்சியின் வதிரி என்னும் கிராமத்தில் 1948.06.30இல் இராஜரட்ணம், ஜீவரட்ணம் தம்பதிகளில் சிரேஷ்ட புதல்வரான ராஜஸ்ரீகாந்தன், தமது சம காலத்தில் வாழ்ந்த, ஆங்கில இலக்கிய மேதை அழகுசுப்பிரமணியத்தின், இதுவரை வெளிவந்த அனைத்துச் சிறு கதைகளையும், வெளியிடப்படாத 'மிஸ்ர மூன்' நாவலையும் தமிழுக்குத் தந்துள்ளார்.


இறுதியாக வடமராட்சியைச் சேர்ந்த சைவப்பெரியாரும் தேவரையாளி இந்துக் கல்லூரியின் தாபகருமான சூரன் என்பவருடைய சுய சரிதையை 'சூரன் கதை' என்ற பெயரில் பதிப்பித்துள்ளார்.

இவருடைய இழப்பால் துயருறும், இவரது குடும்பத்தினர்க்கும் உறவினர்கள், நண்பர்களுக்கும் திருமறைக் கலாமன்ற சார்பிலும், என்சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வி. ஜெகநாதன்

---

## அப்பாவுக்கு...



எம் இனிய அப்பாவுக்கு
உடல் ரீதியான பிரிவுதான் எம்மிடையே
உங்கள் ஆத்மா ஏதேனும் ஒருருவில்
எம்மோடு இருப்பதை உணரமுடிகிறது
ஆனாலும்
போகும்வழியில் தந்தையுடன் பெண்குழந்தைகள்
செல்லும் போது மட்டும்
ஏனோ அடிவயிற்றிலிருந்தெழுகிறது
பெருமூச்சு
உயிர்பிரிந்த பின் உங்கள்
இமையோரம் கண்ணீர்வந்த அடையாளம்
நாம் அழப்போகிறோமே என நினைத்து
நீங்களும் அழுதீர்களா அப்பா ?
உங்களோடு வாழ்ந்த வசந்தகால
நினைவுகளோடு இனி எங்கள் எதிர்காலம்
அப்பா......
உங்களால் விட்டுச் செல்லப்பட்ட அத்தியாயங்கள்
எங்களால் தொட்டுத் தொடரப்படும்

அன்பு மகள்
அனோஜா ஸ்ரீகாந்தன்

# பிடித்த கூலி கூக்குரலிடுகிறது



விவிலியதாஸ்

நாளொன்றுக்கு எட்டு மணிநேரவேலைக்காக, சிக்காக்கோ நகரின் ஆலைத்தொழிலாளர்கள் ஒன்றுபட்டு நடத்திய போராட்டம், சொரிந்த கண்ணீர், சிந்திய இரத்தம் அவர்களுக்கு மட்டுமல்ல, அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தினருக்கும் ஒரு நாளைக்கு எட்டு மணிநேர வேலையை உத்தரவாதம் செய்தது. தொழிலாளர்களின் இந்த வெற்றியின் நாள்தான் மே 1ஆம் திகதி.

சமய இலக்கியங்களுக்குள், சமுதாயம் பற்றிய, உழைப்பவர்பற்றிய புரட்சிமுழக்கத்தைக் கேட்பது வியப்பைத் தருகிறது. ஆனால் அத்தகைய புரட்சிமுழக்கத்தை விவிலியத்தில் ஒலிக்கக் கேட்பது விவிலியத்தின் சிறப்பு அம்சமாகும்.

கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டு காலகட்டங்களில், பலஸ்தீனத்தில் நிலமானிய சமுதாய அமைப்பு முறை அமலிலிருந்தது. நிலவுடைமையாளர்கள் தமது வயலில் வேலை செய்த உழைப்பவரை, மிகவும் கொடுமையாக வருத்தி வேலை வாங்கியது மட்டுமல்ல, அவர்களது கூலியையும் பிடித்துக்கொண்டார்கள். இதை கண்டு நெஞ்சங்குமுறிய யேசுவின் சீடர்களில் ஒருவரான புனித யாகப்பர் பணக்கார விவசாயிகளுக்கு எதிராக குரல் எழுப்பினார்.

“ செல்வர்களே, சற்றுக் கேளுங்கள்! உங்களுக்கு வரப்போகும் இழிநிலையை நினைத்து அலறி அழுங்கள். உங்கள் செல்வம் மங்கிப் போயிற்று. உங்கள் ஆடைகள் பூச்சிகளால் அரிக்கப்பட்டுவிட்டன. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்து விட்டன. அந்தத் துருவே, உங்களுக்கு எதிராகச் சான்றாக இருக்கும். அது நெருப்பைப்போல் உங்கள் தசையை அழித்துவிடும். அந்த இறுதிநாளுக்காக செல்வத்தைக் குவித்து வைத்திருக்கிறீர்களே! உங்கள் வயலில் அறுவடை செய்த வேலையாள்களுக்குரிய கூலியைப் பிடித்துக் கொண்டீர்கள். அது (பிடித்தகூலி) கூக்குரலிடுகிறது. அறுவடை செய்தவர்களின் கூக்குரல் படைகளின் ஆண்டவருடைய செவிக்கு எட்டியுள்ளது. இவ்வுலகில் ஆடம்பரமாகவும் இன்பமாகவும் வாழ்ந்தீர்கள். கொல்லப்படும் நாளுக்காக உங்கள் உள்ளங்களைக் கொழுக்க வைத்துள்ளீர்கள்.”

(யாகோ 5:1-5)

இது ஒரு தார்மீகக் குரலாக இருந்தாலும் மிகவும் கோபாவேஷமானது. சுரண்டப்படும் தொழிலாளருக்காக மனங்குமுறும் ஒரு புனிதனின் குரல் இது. முதலில் பிடித்த கூலி என்பது ஓர் உயிரின் குரலாக உருவகப் படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவதாக பிடித்த கூலி அறுவடையாளர்களின் குரலாகக் காட்டப்பட்டுள்ளது. பிடித்த கூலியும் அறுவடையாளர்களின் கூக்குரலும் ஒன்றிணைந்து திசைகளில் மோதி எதிரொலிக்கிறது. தொழிலாளர்களைச் சுரண்டும் கொடுமையை இவ்வளவு எளிமையாக, ஆனால் மிகவும் அழுத்தமான உரத்தக்குரலில் இலக்கிய நயத்தோடு சொல்வதற்கு மனித நேயம்மிக்க, புரட்சிகர சிந்தனையாளனால்தான் முடியும்.

“கூலி” என்பது சில உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது. தொழிலின் தன்மை, தொழில் செய்யும் இடத்தின் சூழல், தொழில் நிபந்தனைகளின் தன்மை, நேரத்தின் அளவு இவைகளை அடிப்படையாக கொண்டது. இந்தக் கூலி என்பது ஒரு தொழிலாளியின்குடும்பத்திற்கு அன்றைக்குத் தேவையான வாழ்வாதாரங்களைக் கொள்வனவு செய்யப் போதுமானதாக இருக்கவேண்டும்.

ஏனெனில், ஒரு பொருளின் மதிப்பு என்பது உழைப்பினால் நிர்ணயிக்கப்படுகிறது. உழைப்பு இல்லாமல் ஒரு பொருளை உற்பத்தி செய்ய முடியாது. மூலப்பொருளை முடிவுப் பொருளாக்குவது

உழைப்புத்தான். மரம் இருந்தாலும், கருவிகள் இருந்தாலும், கதிரையோ, மேசையோ அல்லது இதர பொருள்களோ உருவாகிவிடாது. ஒருவனுடைய உழைப்பே அதைச் சாத்தியமாக்குகிறது. எனவே, ஒரு பொருளின் மதிப்பு என்பதும், உபரிலாபம் என்பதும் உழைப்பினால் ஈட்டப்படுகிறது.

இத்தகைய உற்பத்திக்குரிய கூலி நேரடியாகவும் மறைமுகமாகவும் பிடிக்கப்படுகிறது அல்லது சுரண்டப்படுகிறது. இது மிகவும் தண்டனைக்குரியகுற்றம். அதுவும் கடவுள் பார்வையில் இது மிகவும் தண்டனைக்குரிய குற்றம். இதைக் கண்டிக்கிறார் யாகப்பர்.

இன்று கூட இந்தப் பிடித்த கூலிப்பிரச்சனை ஓய்ந்தபாடாக இல்லை. திறந்த பொருளாதாரக் கொள்கை இன்று நடைமுறையில் உள்ளது. இலங்கை போன்ற நாடுகளில் சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழிலாளர்கள் கடுமையான தொழில் நிபந்தனைகளுக்கு உட்பட்டும்,குறைந்த கூலிக்கும் வேலை செய்கிறார்கள். சுதந்திரமாகச் சுரண்டப்படுகிறார்கள். இளம் பெண்கள் மலிவான கூலிக்கு மாடாக உழைத்து ஓடாகத் தேய்கிறார்கள். முதலாளிகளின் முகவர் நிலையங்களாகச் செயற்படும் தொழிற் சங்கத்தையேனும் இங்கு அமைக்க அனுமதிக்கப் படுவதில்லை. இந்தக் கொடுமைகளைப்பற்றி யார் என்ன பேசினாலும், எழுதினாலும் கண்டுகொள்ளாத அரசும், தலைசாய்க்காத முதலாளிகளும் கைகோர்த்துக் கொள்ளுகிறார்கள்.

ஆன்மீகம் என்பது உள்ளரங்கத்துள் விடுதலைத் தேடி அமைதியடைவதல்ல. புற உலகில் நிகழும் அநீதியுடனான இடையறாத போராட்டத்திலேயே அது உயிர் பெற வேண்டும். கூலியைப் பிடிப்பது யாகப்பரின் கடவுளுக்கு பிடிக்கவில்லை. கூலியைப் பிடிப்பது அவருக்கு கோபாவேஷத்தை மூட்டுகிறது. சுரண்டுவது யாகப்பரின் கடவுளின் திருவுளத்திற்கு ஏற்புடையதல்ல.

அரசியல் வாதிகளும், தொழிற்சங்கவாதிகளும், ஆன்மீகவாதிகளும்இதைநன்கு உணரவேண்டும்.

ஆனால், இன்று மேதினக் கொண்டாட்டம் ஒரு பிறந்த நாள் கொண்டாட்டமாகத் தரம் தாழ்ந்து விட்டது. கேளிக்கை விளையாட்டாகிவிட்டது. தொழில் சங்கவாதிகள் தங்களின் நலன்களிலிருந்தே தொழிலாளர்களின் பிரச்சனைகளை அணுகும் நிலைமை உருவாகியுள்ளது. தொழிலாளர்களின் நலமென்று சொல்லி மேலோட்டமாக அவர்களின் பிரச்சனைகளை ஆற்றுப்பார்க்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். மனித நேயத்தையும், நீதியையும் ஆடையாக உடுத்திய தியாகிகள் மண்ணில் உருவாகவேண்டும்.

***எத்தனைகாலம் பேய் ஆட்சிசெய்யும்?***
***எத்தனை காலம்***
***சாஸ்திரங்கள் பிணம் தின்னும்?***


# பெண்களே! எழுதுக!



பெண்களே! எழுதுக! பகுத்தறிவின் ஒலி பேரண்டம் முழுவதிலும் எதிரொலித்து வருகிறது. நீங்கள் உங்களுடைய உரிமைகளைப் பற்றி அறிந்து கொள்ள முன் வரவேண்டும். இயற்கையின் ஆற்றல் மிக்க பேரரசைச் சூழ்ந்திருந்த காழ்ப்பு, வெறி, மூட நம்பிக்கைகள், பொய்ப்பித்தலாட்டங்கள் ஆகிய கருமேகங்கள் விலகத் தொடங்கியுள்ளன.

— ஒலிம்ப் தெ கூஷ்.

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்.
வெள்ளத்தின் பெருக்கைப்போல்
கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் விழுந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வர்"

எனவே, உங்கள் பிரச்சனைகளைக் கதைகள், கட்டுரைகள் கவிதைகள் மூலம் "கலைமுகம்" இலக்கிய சஞ்சிகைக்கு அனுப்பிவையுங்கள்.

கலைமுகம்
திருமறைக் கலா மன்றம்
19, 5/6 மிலாகிரிய அவினிய,
பம்பலப்பிட்டி, கொழும்பு 04.
இலங்கை.

### எழுத்தாளர்

# நந்தினி சேவியருடன்

## ஒரு நேர்காணல்

— இன்பராஜன்

- ***தங்களது இலக்கிய பிரவேசப் பின்னணிபற்றிக் கூறமுடியுமா?***

கதை கேட்கும் பழக்கம் சிறுவயதிலேயே எனக்கு ஏற்பட்டுவிட்டது. எங்களது உறவினரான மறியல்கார அப்பா எனும் ஒருவரிடம் நிறையக்கதைகள் கேட்டிருக்கிறேன். அதன் தாக்கமோ என்னவோ கதை ஆர்வம் மேலிட்டது. பாடசாலை நாட்களில் சுற்று வாசிப்பு முறையில் நல்ல இலக்கியங்களின் பரிச்சயம் எனக்கு ஏற்பட்டது. குமுதம், கல்கியிலிருந்து விடுபட அதுவே எனக்கு உதவியது எனலாம். பின்னர் கையெழுத்து சஞ்சிகைகளில் எழுத சந்தர்ப்பம் வாய்த்தது. சிலமனநெருடல்களின் வெளிப்பாடே எனது இலக்கிய எழுதுகைக்கான அடிப்படை. உண்மையும் அனுபவமும் என்னை எழுத வைத்தன. எழுத வைத்துக் கொண்டிருக்கின்றன.

- ***நீங்கள் எழுதத் தொடங்கியமைக்கு உங்களது கல்விப் பின்னணி அல்லது... பரம்பரையாக வந்த ஆளுமைத் தொடர்ச்சியும் ஒரு காரணமாக இருந்ததா?***

நான் ஏதோ பெரும் கல்விப்பாரம்பரியத்தில் வந்தவன் என்று கருதவேண்டாம். அதே நேரத்தில் கருவில் திருவுடையானாக வந்தவனும் அல்ல. எனது தாய் தகப்பன் மிகவும் கல்வியறிவு குறைந்தவர்கள். ஒரு சாதாரண தொழிலாளியின் மூன்றாவது மகன் நான். இளவயதில் நோய்வாய்ப்பட்டு நோஞ்சானாக இருந்த என்னைப் படிப்பிக்க வேண்டும், கடின வேலைக்கு இவனால் முடியாது என்ற நோக்கில் என்னைப் படிப்பிக்க முனைந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்ததுபோல நானும் க.பொ.த (சா/த) வரை படித்தேன். மேற்கொண்டு படிக்க என்னால் முடியவில்லை. அதற்குப்பிறகான எனது வாழ்வு அரசியல் மயப்பட்டதாக மாறிவிட்டது. எனது தகப்பனாரின் தொழிலை நான் பாடசாலை விட்டதும் தொடர்ந்திருக்கின்றேன். வாழ்வில் நெருங்கியழுத்தும் பாரச்சுமையிலிருந்து விடுபட வேண்டும் என்கின்ற ஆதங்கம் என்னை பீடித்துக்கொண்டது. பாராளுமன்ற அரசியலில் ஏற்பட்ட வெறுப்பு, இடதுசாரி சிந்தனை, தாழ்த்தப்பட்ட மக்களது ஆலய, தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்கள் என்னை தம்பக்கம் ஈர்த்துக் கொண்டன. ஒருசுயநலநோக்கோடு அல்லது பெரும் எதிர்பார்ப்போடு அல்லது பிறரது வற்புறுத்தல் காரணமாக நான் இடதுசாரி சிந்தனை வயப்படவில்லை. என்னை, சூழலின் தாக்கம் நிர்ப்பந்தமாக இடதுசாரி இயக்கத்தின் பக்கம் தள்ளிற்று. எனவே எனது எழுத்துப்பணியை நான் இவ்விதம் தேர்ந்துகொண்டேன்.

**சில மனநெருடல்களின் வெளிப்பாடே எனது இலக்கிய எழுதுகைக்கான அடிப்படை... உண்மையும் அனுபவமும் என்னை எழுத வைத்தன. எழுத வைத்துக் கொண்டிருக்கின்றன.**

- ***உங்கள் எழுத்துப்பணிக்கு உந்து சக்தியாக, உதவி செய்தோராக யாரைக் கருதுகிறீர்கள்?***

எனது முதல்கதை பிரசுரமாகிய நேரத்தில் நான் இடதுசாரி எழுத்தாளர்கள் யாரோடும் அவ்வளவு பரிச்சயமானவனாக இருக்கவில்லை. எனது பரிசு பெற்ற நாவலை நான் எழுதும்போது கூட





எனவே வாசிப்பு அனுபவமே என்னை செழுமைப் படுத்திற்று என்று கூறுவேன். என்னிடம் பயங்கர வாசிப்பு வெறி இருந்தது. வாசிப்பின் மூலம் நான் பெற்ற உந்துசக்தி இன்றுவரை என்னைவிட்டு அகலவில்லை. இன்னும் இன்னும் வாசித்த படியே உள்ளேன்.

இத்தகையவர்களின் தொடர்பு எனக்கு இருக்கவில்லை. நான் எனது சுயவாசிப்பின் மூலமே எழுத ஆரம்பித்தேன். பின்னர் செ. யோகநாதன் எனக்கு சில நல்ல எழுத்தாளர்களின் நூல்களை அறிமுகம் செய்தார் எனலாம். கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் என்.கே. ரகுநாதன், டானியல் போன்றவர்களின் தொடர்பு இருந்தது. இருந்தும் கூட அவர்களோடு விமர்சன ரீதியான முரண்பாடு எப்போதும் இருந்து கொண்டேயிருந்தது. 70களில் தோன்றிய படைப்பாளிகளிடம் இருந்த சில இலக்கிய அமைப்புக்கள் மூலம் பல நண்பர்களை நான் பெற்றுக் கொண்டேன். டானியல் அன்ரனி, வ.ஐ.ச.ஜெயபாலன், சசி, கிருஸ்ணமூர்த்தி அ.யேசுராசா, ராதேயன், கேதாரநாதன் போன்றவர்கள் இதற்குள் அடங்குவார்கள். அவர்களிடமும் பலவிதத்தில் உடன்பாடும் முரண்பாடும் என்னளவில் இருந்தது.

எனவே வாசிப்பு அனுபவமே என்னை செழுமைப் படுத்திற்று என்று கூறுவேன். என்னிடம் பயங்கர வாசிப்பு வெறி இருந்தது. எனது ஊரிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள பாடசாலைக்கு வெறுங்காலுடன் நடந்துபோய்ப் படித்தவன் நான். பஸ்போக்குவரத்து, மின்சாரம், நல்லபாதைகள், இல்லாத அக்காலத்தில் கைவிளக்கு வெளிச்சித்தில் பாடநூல்களையும், கதைப் புத்தகங்களையும் படித்தேன். அத்தோடு நில்லாது நெல்லியடி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை போன்ற இடங்களுக்கு நடந்து சென்று நூலகங்களிலிருந்து பசியைப் பாராது நெடுநேரம் வாசித்திருக்கிறேன். எஸ்.பொவிலிருந்து செ.கணேசலிங்கன், ஜெயகாந்தன் வரை தமிழிலும், மார்க்சிம் கோர்க்கியிலிருந்து எமிலிஜோலா, தகழிமுதல் நிரஞ்சனா வரையும் மொழி பெயர்ப்பின் மூலமும் வெறியுடன் வாசித்தேன். எழுதியதை விட வாசிப்பில் மகிழ்ச்சி கண்டவன் நான். அதனால்தான் எனது எழுத்தின் தொகை குறைவாக உள்ளது. வாசிப்பின் மூலம் நான் பெற்ற உந்துசக்தி இன்றுவரை என்னைவிட்டு அகலவில்லை. இன்னும் இன்னும் வாசித்த படியே உள்ளேன்.

- **உங்களது வாசிப்பனுபவத்தில் தங்களால் ஆகர்சிக் கப்பட்ட எழுத்துக்களென எவ் எவற்றை அடையாளப் படுத்துவீர்கள்?**

ஆரம்பத்தில் நானும் சில கவிதைகள் எழுதியது உண்டு. பின்னர் பல கவியரங்குகளில் பங்குபற்றியுள்ளேன். பெரிதாக கவிதைகளில் ஆர்வமில்லாதவிடத்தும் சில்லையூர், முருகையன், சுபத்திரன் நு..மான், சண்முகம் சிவலிங்கம் போன்றோரின் கவிதைகளில் பிடிப்பிருந்தது. பின்னாளில் புதுவையின் கவிதைகளிலும் அ.யோகராசா சு.வி., வ.ஐ.ச. ஜெயபாலன் சேரனிலும் விருப்பு ஏற்பட்டது. சோலைக்கிளி, இளவாலை விஜயேந்திரன் போன்றோரிலும் ஒரு வித விருப்பு இருக்கிறது.

சிறுகதைத்துறையில் ஆரம்பகால டானியல், அ.முத்துலிங்கம், பின்னர் கெ.கதிர்காமநாதன், யோகநாதன் பின்னர் மன்சூர் சட்டநாதன், உமாவரதராஜன், ரஞ்சகுமார் எஸ்.எல்.எம் உறனிபா இப்போது ஈழத்தில் எழுதும் புதிய தலைமுறையைப் புரிந்து கொள்ள முயற்சிக்கின்றேன். புலம்பெயர்ந்த எழுத்தாளர்களில் ஷோபாசக்தி கருணாகரமூர்த்தி, சக்கரவர்த்தியை குறிப்பிடலாம். நாடகம் சார்ந்த வெளிப்பாடுகள் பற்றி சொல்லப்போனால் எப்போது பல்கலைக்கழகத்தில் ஒரு பாடமாக நாடகம் வைக்கப்பட்டதோ அப்போது நாடகம் என்பது செத்துப்போய்விட்டது என்பதே என் அபிப்பிரயாயம். சிறுகதை, நாவல், கவிதைக்கு இந்நிலை ஏற்படாது பாதுகாக்க நாம் உறுதியாக இருக்கவேண்டும் எனக்



1974ல் பேராதனை பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் நடாத்திய குறுநாவல் போட்டியில் எனக்கு முதல்பரிசு தங்கப்பதக்கம் கிடைத்தது. பிரயாணச் செலவுக்கு மிகுந்த சிரமத்துடன் ஒருவரிடம் கடன் வாங்கி பேராதனைக்கு சென்றேன். மிகுந்த கரகோசத்தின் மத்தியில் தங்கப்பதக்கம் பேராசிரியர் சு. வித்தியானந்தனால் எனக்கு அளிக்கப்பட்டது. அடுத்த நாள் காலை கண்டி மஸ்கில் ஒரு நகைக்கடையில் அதனை ரூபா150/=க்கு விற்றேன். எனக்கு ஏற்பட்ட பயணச்செலவை ஈடுகட்டவும், கடனைத் திருப்ப அடைக்கவும் அதனை நான் பயன்படுத்தினேன்.

கூறுவேன். இன்றுவரை எனக்கு விருப்பமான படைப்புகளாக மேற்குறித்த கவிஞர்களின் சில கவிதைத் தொகுப்புகளும், எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுதியையும், நாவல்களையும் குறிக்கலாம். மொழி பெயர்ப்பின் மூலம் நான் வாசிக்க கிடைத்த ரூஸ்ய, பிரஞ்சு, லத்தீன், அமெரிக்க, எழுத்துக்களையும் இந்தியாவின் பிறமாநில எழுத்துக்களையும் குறிப்பிடலாம்.

● ***தங்களது வாழ்வில் இலக்கிய பணியில் தாங்கள் எதிர் கொண்ட சவால்கள் அல்லது அங்கீகாரம் என்ன என்பதைக் கூறமுடியுமா?***

எனது சிறுகதை ஒன்றுக்காக புலனாய்வுத்துறையினால் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவன் நான். பலவிதமான நிராகரிப்புக்களைச் சந்தித்தவன். அதையிட்டு நான் அலட்டிக் கொள்ளாவிட்டாலும், கண்டிப்பாக இதனைக் குறிப்பிடவேண்டியுள்ளது. ஈழநாடு 10ம் ஆண்டு நிறைவு சிறுகதைப்போட்டியில் எனக்கு பாராட்டுப் பரிசு கிடைத்தது. போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு நடாத்தப்பட்ட தேநீர் விருந்துபசாரத்திற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அப்போது எனக்கு வயது 19. நெல்லியடி கட்டைவேலி ப.நோ.கூ. சங்கம் வடமராட்சி எழுத்தாளர்களின் எழுத்துக்களை "உயிர்ப்புகள்" எனும் பெயரில் வெளியிட்டது. வடமராட்சியைச் சேர்ந்தவனான எனது கதை அதில் சேர்க்கப்படவில்லை. எனது முதல் கதை சுதந்திரனில்தான் பிரசுரமானது. அதில் நான் ஐந்து கதைகள் எழுதியிருந்தேன். சுதந்திரன் கதைகள் தொகுப்பில் எனது கதைஇடம்பெறவில்லை. இதே போல் அத்தொகுப்பாளர் தொகுத்த இன்னொரு சஞ்சிகையின் சிறுகதைத் தொகுப்பிலும் எனது கதை இடம்பெறவில்லை. இவ்வளவிற்கு அச்சஞ்சிகையில் வெளிவராத எனது சிறுகதை அவ்வாண்டில் வந்த சிறுகதைகளில் தரமானது என ஒரு விமர்சகரால் பாராட்டப்பட்டு அச்சஞ்சிகையிலே எழுதப்பட்டிருந்தது. இப்படியான பல புறக்கணிப்புகளை நான் சந்தித்தேன். சந்தித்து வருகிறேன்.

1974ல் பேராதனை பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் நடாத்திய குறுநாவல் போட்டியில் எனக்கு முதல்பரிசு தங்கப்பதக்கம் கிடைத்தது. அப்போது நான் ஒரு தொழிற்சாலையில் பயிலுனராக கடமையாற்றிக் கொண்டிருந்தேன். பிரயாணச் செலவுக்கு மிகுந்த சிரமத்துடன் ஒருவரிடம் கடன் வாங்கி பேராதனைக்கு சென்றேன். புதுவை இரத்தினதுரைக்கு கவிதைக்கான முதல் பரிசும், டானியல் அன்ரனுக்கு சிறுகதைக்கான முதல் பரிசும் கிடைத்திருந்தது. மிகுந்த கரகோசத்தின் மத்தியில் தங்கப்பதக்கம் பேராசிரியர் சு. வித்தியானந்தனால் எனக்கு அளிக்கப்பட்டது. அடுத்த நாள் காலை கண்டியில் ஒரு நகைக்கடையில் அதனை ரூபா150/=க்கு விற்றேன். எனக்கு ஏற்பட்ட பயணச்செலவை ஈடுகட்டவும், கடனைத் திருப்பி அடைக்கவும் அதனை நான் பயன்படுத்தினேன். இன்று தமது விருதுகளையும், பொன்னாடைகளையும் காட்சிப்படுத்தி வைத்துள்ள படைப்பாளிகளுக்காக இதனைச் சொல்லவிளைந்தேன்.

இன்னுமொரு வேடிக்கை எனது ஈழநாடு நாவல் போட்டியில் பரிசு பெற்ற நாவலுக்காக பரிசுத்தொகை 250/= ரூபாவை நான் கிட்டத்தட்ட 3 வருடங்களின் பின்னர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் பெற்றுக்கொண்டேன். மாதா மாதம் 25/= ரூபா வீதம் 10 மாதங்களில் அது எனக்கு வழங்கப்பட்டது. கஸ்டம், துன்பம், வறுமை என்பவை பற்றி எனக்குத்தெரியும். அதிலிருந்து விடுபட வேண்டியே எனது எத்தனிப்புக்கள்

எப்போதும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. அதீத கற்பனைகள், அற்புதமான மனிதர்கள், பற்றியெல்லாம் என்னால் சிந்திக்கமுடிவதில்லை. எனது ஜன்னல்களைச் சாத்துவதற்கு நான் துணியமாட்டேன். எனது ஜன்னல்களை அகலதிறந்து வைத்துள்ளேன். அதனால் என் கண்களில் சிக்குபவை நல்லனவும், கெட்டனவும் தான். துயரங்களின் விடிவு எனக்கும் என்னோடு கூட நடப்பவர்களுக்கும் தேவைப்படுகிறது. அதற்காக எனது பேனாவை நான் திறந்து வைத்திருக்கிறேன்.

1993ல் எனது சிறுகதைத்தொகுதி வெளிவந்தது. ஒரு நிர்ப்பந்தம் காரணமாக அதனை நான் வெளியிடக் கொடுத்தேன். விபவியின் அவ்வாண்டின் சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான விருதினை அது வென்றது. பல வித விமர்சனங்களையும் நான் பெற்றுக்கொண்டேன். வடபிரதேச உள்ளூராட்சித் திணைக்களம் நடாத்திய போட்டியிலும் அந்தத் தொகுதிக்கு பரிசு கிடைத்தது. இது ஒன்றும் பெருமைக்காக சொல்லவில்லை. என்னையும் ஒரு நல்ல எழுத்தாளரென்று சிலர் ஏற்றிருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

- ***உங்களது எழுத்துகள் அதிகமாக வெளி வருவதில்லை என்கிற குற்றச்சாட்டுக்கு தங்கள் பதில்?***

அதிகம் எழுதுவதில் எனக்கு நாட்டமில்லை. 1983 கலவரத்தில் எனக்கேற்பட்ட சில அனுபவங்கள் 2003ல் தான் என்னால் எழுதமுடிந்தது. தயாரிப்பு அந்தரம் எதுவும் எனக்கில்லை. ஒரு கதையை எழுதும்போது நான் பயத்துடன்தான் எழுதுகிறேன். இக்கதை நன்றாக வருமா என்கின்ற தயக்கமே அது. நான் முதல் கதை எழுதும்போது என்ன மனநிலையோடு அக்கதையை எழுதினேனோ அதே மனநிலையுடன்தான் இப்போதும் ஒரு கதையை எழுதத் தொடங்குகிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் இன்னும் ஒரு ஆரம்ப எழுத்தாளனாகவே என்னைக் கருதிக் கொள்ளுகிறேன்.

- ***தற்போதைய சூழ்நிலையில் தங்களது அரசியல் இலக்கிய நிலைப்பாடு பற்றிக் கூறமுடியுமா?***

இந்த நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி சுலபமாக தீர்ந்துவிடக்கூடியதெனச் சொல்லமுடியாது.


பேரினவாத, குறுந்தேசியவாத சக்திகளின் ஆதிக்கத்துள் தம்மைப் பிணித்துக் கொண்டுள்ளவர்கள் தமது இலாப அரசியலைக் கொண்டு நடத்த எமது பிரச்சனைகளை ஒரு சாட்டுக்காக தூக்கி யிருக்கிறார்கள். எனவே இந்த நிலமையில் சாதுரியமாக நடந்து நமது இலக்கை அடைவது என்பது சாத்தியப்படுமா என்பதே இப்போதுள்ள பிரச்சனை. எனவே நாம் விலைபோகாத நிலைப்பாட்டில் நிதானமாகப் பயணிக்க வேண்டும். சர்வதேச பாடங்களை நாம் படிப்பினையாகக் கொண்டு, எமது வழி தொடரவேண்டும். பாராளுமன்ற அரசியலின் பங்கலோட்டுத்தனம் அம்பலமாகியுள்ளதை மீண்டும் ஒருமுறை நாம் கண்டிருக்கின்றோம். பிரதேச வாதத்தை தூண்டி நம்மை துண்டாடும் சக்திகளையும், இனங் கண்டுள்ளோம். இன, மத, மொழி, பிரிவினையை தூண்டும் சக்திகளும் இவையேதான். இவற்றிற் கெதிரான நல்ல சக்திகளை ஐக்கியப்படுத்தவும், போரிடவும் கூடிய இலக்கியங்களை நாம் படைக்கவேண்டும்.

- ***இதுவரை காலம் வெளிவந்த இலக்கியங்களில் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சனைகள் எடுத்தாளப்பட்ட முறைகளும், அவ்வகை இலக்கியங்களின் விளைவாக ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்களும்... பற்றி கூறமுடியுமா? இவ்வகை இலங்கியங்கள் "தலித்" இலக்கியமென இன்று வகைப்படுத்தப் படுகின்றனவே? இவை பற்றிய உங்களது கருத்துக்கள் என்ன?***



**பேரினவாத குறுந்தேசியவாத சக்திகளின் ஆதிக்கத்துள் தம்மைப் பிணித்துக் கொண்டுள்ளவர்கள் தமது இலாப அரசியலைக் கொண்டுநடத்த எமது பிரச்சனைகளை ஒரு சாட்டுக்காகத் தூக்கி யிருக்கிறார்கள். எனவே இந்த நிலமையில் சாதுரியமாக நடந்து நமது இலக்கை அடைவது என்பது சாத்தியப்படுமா என்பதே இப்போதுள்ள பிரச்சனை.**

ஒடுக்கப்பட்ட மக்கள் எனப்படும் போது சாதிரீதியாக ஒடுக்கப்பட்டோரைப்பற்றி நீங்கள் கேட்பதாக நான் கருதுகிறேன். வடபிரதேசத்தில் சாதிரீதியாக ஒடுக்கப்பட்டோர் பள்ளர், பறையர், நளவர், அம்பட்டர், வண்ணார் என ஐந்து சாதியாக "பஞ்சமர்" என அடைமொழியிட்டுக கூறுவார்கள். பள்ளர் சமூகத்துள், பறையர் சமூகத்துள் அல்லது நளவர் சமூகத்துக்குள் பல பிரிவுகள் உண்டு, ஒரே இனமாக இருந்தாலும்... கலியாண உறவுகள், நன்மை தீமைகளில் ஒரே சாதிக்குள் பல பிணக்குகளை அவர்கள் கொண்டிருந்தார்கள்; கொண்டிருக்கிறார்கள். பள்ளர், நளவர், பறையருள் ஆர் சாதியில் உயர்ந்தவர் என்ற பாகுபாடும் இப்போது இருக்கிறது. இவர்களுக்கு தலைமுடி வெட்டவோ, அல்லது துணி வெளுக்கவோ இந்த வண்ணார், அம்பட்டர் அனுமதிக்கப் படவில்லை, வெள்ளாளரிடம் குடிமைகளாக இருந்த இவ்வகை ஐந்துசாதியினரிடமும் ஒரு ஐக்கியம் பேணப்படவில்லை. பள்ளர், நளவர் பறையருக்கு துணிவெளுக்க தனியே ஒரு சாதி இருந்தது. அதனைத் துரும்பர் என்று சொல்வார்கள். இவர்கள் ஒரு விதத்தில் பள்ளர், நளவர், பறையரின் குடிமைகளாக இருந்தனர். நெடுங்காலம் நானறிந்தவரையில் பள்ளர், பறையர், நளவருக்கு தலைமுடி வெட்ட ஆளில்லாதிருந்நது. அப்படி ஒரு நிலை வந்த போது இந்தியாவிருந்து வந்த அருந்ததியர் சமூகத்தவர்களில் ஒருசிலர் சவரத் தொழிலை செய்யத் தொடங்கினார்கள். வடமராட்சியில், பள்ளர் சமூகத்தில், மிகவும் பின் தங்கிய பிரிவாகிய ஒருபகுதியைச் சேர்ந்த ஒருவர், எதோ ஒரு குற்றத்திற்காக சிறை சென்றபோது அங்கு பழகிவந்த தலைமயிர் வெட்டும் கலையை ஊருக்குள் செய்யப்புகுந்து, அம்பட்டக்கந்தன் எனப் பெயர் பெற்று ஒதுக்கப்பட்டதை நானறிவேன். பின்னர் இந்த துரும்ப சமூகத்தவர்களில் பலர் சிகை அலங்கரிப்பு தொழிலைப் பயின்று இன்றுவரை தொடர்வதையும் நானறிவேன். இவைபற்றிக் கூறும் போது ஓர் உண்மையை நாம் மறக்கமுடியாதுள்ளது.



இலக்கிய ரீதியாக எம்மால் செய்ய முடிந்தது பெரிதென கூறிக்கொள்ள அல்லது பெருமிதப்பட என்னால் முடியவில்லை. எங்கள் மத்தியில் புரையோடிப்போயுள்ள சாதிமுறை இன்னும் மிகவும் வலிமையோடு இருப்பதை நான் அனுபவ ரீதியாக உணர்கிறேன். இன்னும் வடபகுதியின் கோவில்களின் கதவுகள் அடைக்கப்பட்டே இருக்கின்றன. புலம் பெயர் நாடுகளில் கூட இந்தளவு ஒதுக்கப்படும் தன்மைகள் இருப்பதை அறிகிறேன். தொழில் ரீதியாக பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டவர்கள் புலம் பெயர்ந்து ஒதுக்கப்பட்ட தொழில் செய்தாலும், சாதிபார்க்கும் ஒரு நிலை இருக்கிறது. இன்னும் சாதிக்குள் சாதி இருக்கிறது. இவற்றைப்பற்றி

சாதியில் குறைந்து படித்து முன்னேறிய சிலர் உத்தியோகம் பெற்று தம்மை வெள்ளாளராகப் பாவித்து, தமது சமூகத்தினரை ஒதுக்கி அல்லது தாம் ஒதுங்கி வாழ்கின்ற நிலையும் இருக்கிறது. ஆனால் அடிப்படையில் சமூக விடுதலை வேண்டியோர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆகர்சத்தால் ஆரம்பத்தில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்ற ஒன்றை ஏற்படுத்தி ஆலய தேனீர்கடைப் பிரவேசத்தை செய்தனர். இந்த உத்வேகம் யாழ்ப்பாணத்தில் வில்லூன்றி மயானத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் மரணமான முதலி சின்னத் தம்பியின் மரணத்தோடு பொிதாக வளர்ந்தது. எம்.சி. சுப்பிரமணியம் போன்றோரும்... ஒடுக்கப் பட்டோர் மத்தியில் இருந்து இலக்கியவாதிகளாக முகிழ்ந்த எஸ்.பொன்னுத்துரை — டானியல் டொமினிக்ஜீவா என்.கே ரகுநாதன் போன்றோரும் இதற்குள் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்..

இந்த நிலையில் ஒரு மாற்றம் 1966களில் ஆரம்பிக்கிறது. "சாதி அமைப்புத்தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற கோசத்துடன் அக்டோபர் 21ல் சுன்னாகத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் அது தடுக்கப்பட்ட நிகழ்வுகளுக்கு பின்னர் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் சீனசார்பு கம்யூனிஸ் கட்சியால் உருவாக்கப்பட்டது. 'அடிக்கு அடி' எனும் இலட்சியத்துடன் உருவான இவ்வியக்கம் பிரசித்தி பெற்ற மாவிட்ட புர, பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப்பிரவேச போராட்டங்களையும் நிச்சாமம், அச்சுவேலி, கொடிகாமம், கன்பொல்லை என சாதியத்திற்கெதிரான போராட்டங்களையும் நடாத்தியது. பிரசித்தி பெற்ற கலை இலக்கியங்கள் இக்கால கட்டத்தில் உருவாகின. டானியலின் பஞ்சமர் வரிசை நாவலர்கள் "கந்தன் கருணை" நாடகம், கவிஞர்கள் சுபத்திரன் கணேசவேல் போன்றோரின் கவிதைகள்,

பெனடிற்பாலன் போன்றோரின் சிறுகதைகள் பல வெளிவந்தன. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தோழோடு தோழ் கொடுத்துப் போராடிய உயர் சமுகத்தவர்களையும், முஸ்லீம் தோழர்களையும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தன்னுள் கொண்டிருந்தது. இன்று தமிழ் பேசும் மக்களின் போராட்டங்களுக்கு முதல் அத்தியாயமாக அல்லது முன்னுரையாக அப்போராட்டங்களை இனங்காணமுடியும்.

ஆனால் இலக்கிய ரீதியாக எம்மால் செய்ய முடிந்தது பெரிதென கூறிக்கொள்ள அல்லது பெருமிதப்பட என்னால் முடியவில்லை. எங்கள் மத்தியில் புரையோடிப்போயுள்ள சாதிமுறை இன்னும் மிகவும் வலிமையோடு இருப்பதை நான் அனுபவ ரீதியாக உணர்கிறேன். இன்னும் வடபகுதியின் கோவில்களின் கதவுகள் அடைக்கப்பட்டே இருக்கின்றன. புலம் பெயர் நாடுகளில் கூட இந்தளவு ஒதுக்கப்படும் தன்மைகள் இருப்பதை அறிகிறேன். தொழில் ரீதியாக பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டவர்கள் புலம் பெயர்ந்து ஒதுக்கப்பட்ட தொழில் செய்தாலும், சாதிபார்க்கும் ஒரு நிலை இருக்கிறது. இன்னும் சாதிக்குள் சாதி இருக்கிறது. இவற்றைப்பற்றி வெளிவந்த இலக்கியம் குறைவு.

டானியல் தனது சமூகத்தைப் பற்றி எழுதவில்லை என குற்றஞ்சாட்டப்படுகிறார். எஸ்.பொ தனது சாதியை விட்டு உயர் சமூகப் பெண்ணைத் திருமணம் செய்து பெரிய சாதிக்காரனாகி விட்டதாக ஒரு குற்றச்சாட்டு. டொமினிக்ஜீவா "மல்லிகை" ஆசிரியராக அறியப்பட்டதைவிட சமூகம் சார்ந்த எழுத்தால் அறிப்பட்டது மிகமிக குறைவு. என்னைப் பொறுத்தவரையில் சமூக உணர்வு, சமூக விடுதலை பற்றிய பிரக்ஞை எமது எழுத்தாளர்களுக்கு இப்போது அருகிவிட்டதாகப்படுகிறது. அங்கீகாரத்திற்கு, சமூக அந்தஸ்துக்கு சாதியையும் இலக்கியத்தையும் பயன்படுத்தும் போக்குக்கு, நமது எழுத்தாளர்களும் ஆள்பட்டு விடக்கூடாதென்பதில் நான் ஒரு கடும் போக்காளனாக இருக்கிறேன். விடுதலை என்பது சாதி, இன, மத, வர்க்க ஒடுக்கு முறைகளுக்கும் எதிராக இருக்க வேண்டும். ஒரு உண்மையான மக்கள் இலக்கியப் படைப்பாளி இதனை ஏற்றுக் கொள்பவனாக இருக்கவேண்டும். தலித் இலக்கியம் என்று எமது எழுத்தாளர்கள் இலக்கியம் படைக்கவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றி எழுதிய போது அவற்றை வர்க்க இலக்கியமாகவே அவர்கள் படைத்தார்கள். எனவே ஈழத்து இலக்கியம் ஒருகாலத்தில் "இழிசனர் இலக்கியம்" என்று சனாதனிகளால் பார்க்கப்பட்ட போதும் மக்கள் இலக்கியமாகவே இன்னும் பேசப்படுகிறது. அவற்றில் பெற்ற தோல்விகளுக்கு அப்பாற்பட்டு... இன்று தமிழ் பேசும் மக்களின் மீதான ஒடுக்கு முறை மிகைப்பட்டிருப்பதானால், சாதிப்பிரச்சனை வெளியே தெரியாது அமுக்கப்பட்டுள்ளது. ஆயினும் அது உள்ளூர புகைந்து கொண்டுதானிருக்கிறது. அனுபவ பூர்வமாக இதனை என்னால் கூறமுடியும் பகிரங்கமாக.

- ***இறுதியாக இளம் எழுத்தாளர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரைகள் ஆலோசனைகள் என்ன?***


நான் அறிவுரை கூறுமளவுக்கு பெரும் அறிஞன் அல்ல. ஆயினும் கிட்டத்தட்ட 40 வருடங்களுக்கு மேற்பட்ட வாசிப்பு அனுபவமுடையவன் என்ற முறையில் சில விசயங்களைக் கூறமுடியும். நிறைய வாசியுங்கள், தேர்ந்து வாசியுங்கள். இலக்கியத்தில் புதிய உத்திகளை கையாளுங்கள். அவை மக்களுக்கு விளங்கக் கூடியதாக இருக்கட்டும். மேதைமை மிக்கவர்களுக்காகவும், விமர்சனங்களுக்காகவும் படைப்பு முயற்சியில் ஈடுபடாதீர்கள். உங்களது படைப்பின் முதல் வாசகனாக, வாசகியாக நீங்களே இருங்கள், உங்களது படைப்புக்கள் உங்களுக்குப் புரிந்தால் அதுவே உமக்கு வெற்றி.

நல்ல திரைப்படங்கள், நல்ல சஞ்சிகைகளை, தொலைக்காட்சிப் படங்களைப் பாருங்கள். அவை பற்றி கருத்தாடுங்கள். முக்கியமாக எழுதுங்கள். திரும்பத் திரும்ப எழுதுங்கள். இதுவே உங்களுக்கு எனது அன்பான ஆலோசனையாகும்.

## நந்தினி சேவியர் பற்றி

இவர் வடமாராட்சி அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தேவசகாயம், றோசம்மா தம்பதிகளின் மூன்றாவது புதல்வர். நெல்லியடி, திருஇருதயப் பள்ளியிலும், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிலும், கொக்குவில் தொழிநுட்ப கல்லூரியிலும் கல்வி பயின்றவர். இவர் சிறுகதைகளையும், குறுநாவல்களையும் எழுதியுள்ளார். குறிப்பாகச் சிறுகதை எழுதுவதில் சிறப்பான இடத்தை வகிக்கிறார். கட்சி நிலைப்பாட்டுக் கப்பால் மார்க்சிய சித்தாந்தத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டவர். சாதிக் கொடுமைக்கெதிரான போராட்டங்களில், இவர் பங்கு கொண்டிருக்கிறார் என்பதை இவரது படைப்புகளிலும், நேர்காணல்களிலும் இனங்காண முடியும். படைப்பிலக்கியத்தில் உண்மையும், எளிமையும் இவரது சிறப்பு.

# சாதியம் பற்றிய புத்தரின் கருத்தியல் ஒரு கண்ணோட்டம்



வடகிழார்

இந்தியாவில் சாதிப்பிரிவினைக்கு அடிப்படையாக இருப்பது ரிக்வேதத்திலுள்ள புருஷ சூக்தம் என்பது மிகவும் தவறான கருத்தாகும். வேதகாலத்திற்கு முற்பட்ட சப்தசிந்துப் பிரவேசத்திலும், மத்திய இந்தியாவிலும் சாதிப்பிரிவினைத்தர்மம் நிலவியது. ஆனால் ஆரியபார்ப்பனர்கள் சாதிமுறையைக் கட்டிக் காத்துவளர்த்து, சாதித்தீமையைச் சமுதாயத்தில் நிலை நாட்டினார்கள்.

இந்த நான்குவர்ண தர்மம் மட்டுமல்ல, கர்மக்கோட்பாடு, (முற்பிறப்புக்கோட்பாடு) விதிவாதம் (ஊழ்)என்பனவும் இந்தச் சாதிப்பிரிவினைக்கு மிகவும் அழுத்தமான உறுதிப்பாட்டைக் கொடுத்தன. இந்தியாவின் அனைத்து இலக்கியங்களிலும், மத புராணங்களிலும் இந்தக் கருத்தியல், சுரண்டலைக் கட்டிக்காக்கும் ஒரு வலிமை மிக்க கருவியாக, ஆயுதமாக மக்களை வசப்படுத்த, கட்டுப்படுத்த, அடிமைப்படுத்த பயன்படுத்தப் பட்டுவருகிறது. ஆளும் அதிகாரவர்க்கம், ஆயுதத்தால் கட்டுப்படுத்த முடியாத, சமுதாய எழுச்சிகள், புரட்சிகளை, இத்தகைய பூடகமானகருத்தியல்கள் மூலம் இலகுவாக அடக்கமுறப்பட்டது. இந்தத்தீவிரமுயற்சி ஆளும் அதிகாரவர்க்கத்திற்கு பெரும் அனுகூலயங்களைக் கொடுத்தது.

இந்த உண்மைகளை மிகவும் ஆழமாகப் புரிந்து கொண்ட புத்தர், இந்தச் சாதிக் கொள்கையை ஆதரிக்கவில்லை என்பதோடு, அதைக் கர்ணகடுரமாக எதிர்த்துப் பிரசாரமும் செய்தார். தமது சங்கத்தில் சாதிப் பிரிவினையை ஒழித்தார். வாஸேட்ட ஸுத்தம், ஸுத்த நிபாதத்திலும், மஜ்ஜிம நிகாயத்திலும் புத்தரின் சாதி எதிர்ப்புப் போதனைகளைப் பார்க்கலாம்.

ஒரு முறை புத்த பெருமான் இச்சாநங்கலம் என்ற ஊர் மருங்கில், இச்சாநங்கல உவவனத்தில் தங்கியிருந்தார். அக்காலத்தில் இச்சாநங்கலத்தில் புகழ் பெற்ற அந்தணர்கள் இருந்தார்கள்.'' மனிதன் பிறப்பினால் உயர்ந்தவனா? அல்லது செயலினாலா?'' என்ற வாதம் அவர்களிடையே எழுந்தது. ஒருவன் பிறப்பினால் என்று வாதிட்டான். மற்றவன் ஒழுக்கத்தினால் என்று வாதிட்டான். ஆனாலும் பிரச்சனை தீரவில்லை. அதனால் அவர்கள் இருவரும், தங்கள் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளப் புத்தபிரானிடம் சென்றார்கள்.

**வாஸிஷ்ட்டன்** : கோதமரே நாங்கள் இருவரும் நன்கு படித்த அந்தணகுமாரர்கள். சாதிப்பிரிவினையைப் பற்றி எங்களுக்குள் விவாதம் நடந்தது. பிறப்பினால் ஒருவன் அந்தணனாகிறான் என்று நான் சொல்கிறேன். எங்கள் வாதத்திற்குத் தாங்கள்தான் தீர்ப்புக் கூறவேண்டும்.

**புத்தர்** : வாஸிஷ்டனே, மரம் புல் முதலிய காட்டுத் தாவரங்களிடையே பல்வேறு இனங்கள் இருக்கின்றன. அவ்விதமே புழு, எறும்பு முதலிய சிற்றுயிர்களிடத்தும் இன வேறுபாடுகள் உள்ளன. பாம்புகளிலும், நான்குகால் விலங்குகளிலும், நீரில் வாழும் மீன்களிலும், வானத்தில் பறக்கும் பறவைகளிலும், பல இனங்கள் உண்டு. அவற்றின் வேறுபாட்டிற்குரிய அடையாளங்கள் அந்தந்த உயிர்க்கூட்டத்தில்

புலப்படுகின்றன. ஆனால், மனிதர்களிடையே வேறுபாட்டிற்கான அடையாளங்கள் புலப்படுவதில்லை. கேசம், காது, கண், மூக்கு, முகம், உதடு, புருவம், கழுத்து, வயிறு, முதுகு, கை, கால் முதலிய உறுப்புகளால் ஒரு மனிதன் மற்றொரு மனிதனைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டிருக்க முடியாது. அதாவது, விலங்கு, பறவை முதலியவற்றில், வடிவம் முதலியவற்றினால் பல்வேறு இனங்கள் புலப்படுவதுபோல், மனிதபிராணிகளிடத்தில் வேற்றுமைதோன்றுவதில்லை. எல்லா மனிதர்களிடையேயும் சாதிவேற்றுமையைத் தீர்மானிக்க முடியாது. ஆனால் தொழிலைக் கொண்டு (செயலைக் கொண்டு) மனிதனுடைய சாதியினைத் தீர்மானிக்கமுடியும்.

ஓர் அந்தணன் பசுவைக் காத்துப் பிழைப்பை நடத்தினால் அவனை ஆயன் என்று அழைப்பார்கள், அந்தணன் என வேண்டாம். (அந்த அந்தணன்) சிற்பத்தைக் கொண்டு சீவிப்பவன் சிற்பி. வியாபாரம் செய்தால் வணிகன். தூதுத்தொழில் செய்தால் தூதுவன். திருடிப்பிழைத்தால் திருடன். போரைக்கொண்டு வாழ்ந்தால் வீரன். வேள்வியைக் கொண்டு பிழைத்தால் புரோகிதன். நாட்டைக் கொண்டு பிழைத்தால் அரசன். ஆனால், இவர்களில் யாரையும் பிறப்பால் அந்தணன் என்று சொல்லமுடியாது. பிறப்பினால் எவனும் பிராமணனோ, அப்பிராமணனோ (பிராமணன் அல்லாதவனோ) அல்ல. செயலில் தான் உலகம் முழுவதும் நடக்கிறது. அச்சைச் சார்ந்தே தேர் ஓடுவதுபோல், உயிர்கள் யாவும் தங்கள் செயலையே சார்ந்திருக்கின்றன.

அசுவலாயனன் : கோதமரே, பிராமணவர்ணமே உயர்ந்தது. மற்றவர்ணங்கள் தாழ்ந்தவை. பிராமணன் வர்ணம் வெண்மையானது. மற்றவை கறுப்பானவை. பிராமணர்களுக்கே முத்திகிடைக்கிறது. மற்றவர்களுக்கு இல்லை. பிராமணர்கள் பிரம்ம தேவனின் முகத்திலிருந்து உண்டானவர்கள்; அவர்கள் அவனுடைய சொந்தப் பிள்ளைகள். எனவே, இவர்கள் தான் அவனுடைய செல்வத்திற்கு உரிமையாளர்கள் என்று அந்தணர்கள் கூறுகிறார்களே, இதைப்பற்றி உங்கள் கருத்து யாது?

புத்தர் : அசுவலாயனா, அந்தணர்களின் பெண்கள் பூப்படைகிறார்கள், மனைவியாகிக் கருத்தரிக்கிறார்கள், மகவைப் பெறுகிறார்கள், குழந்தைகளுக்குப் பாலூட்டுகிறார்கள். எங்ஙனம் அந்தணர்கள், சத்திரியர்கள், பிறவர்ணத்தாரைப்போலவே தாய்வயிற்றிலிருந்து பிறந்திருக்க, அந்தணர்கள் தாங்கள் பிரம்ம தேவனுடைய முகத்திலிருந்து தோன்றுவதாகக் கூறிக் கொள்வது வியப்பாக இல்லையா?

அசுவலாயனன் : கோதமரே, தாங்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால் அந்தணர்கள் தாங்கள் பிரம்ம தேவனுடைய செல்வத்திற்கு உரிமையானவர்கள் என்பதில் முழுநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

புத்தர் : அசுவலாயனா, யௌவனம், காம்போயம் முதலிய எல்லைநாடுகளில், ஆரியா— தாசா என்ற இரண்டே வர்ணங்கள் உண்டு. சில சமயம் ஆரியன் தாசனாவான், தாசன் ஆரியனாவான். இதை நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?

அசுவலாயனன் : ஆம் கோதமரே கேள்விப்பட்டிருக்கிறேன்.

புத்தர் : இப்படி இருக்கையில் பிரம்ம தேவன், அந்தணர்களை முகத்திலிருந்து உண்டாக்கினான், அவர்கள் வர்ணங்கள் அனைத்திலும் உயர்ந்தவர்கள் என்ற கூற்றிற்கு ஆதாரம் யாது?

அசுவலாயனன் : தாங்கள் எப்படிச் சொன்னாலும், அந்தணர்கள் தங்கள் வர்ணமே சிறந்ததென்றும், மற்றவை தாழ்ந்தவை என்றும் உறுதிகொண்டிருக்கிறார்கள் கோதரரே.


புத்தர் : சத்திரியனோ, வைதியனோ, வேளாளனோ, ஆன ஒருவன் உயிர்க்கொலை, திருட்டு, பிறன் மனை விழைத்தல், பொய்பேசுதல், புறங்கூறுதல், வசைசொல்லுதல், பயனில் பேசுதல் ஆகியவற்றைச் செய்தால், மக்களின் செல்வத்தின் மீது பார்வையைச் செலுத்தினால், பகைமை அறிவை வளர்த்தால், நாத்திகத்தன்மையை ஏற்றால், அவன் தான் மரணித்த பிறகு நரகம் புகுவான். ஆனால் அந்தணன் இந்தச் செயல்களைச் செய்தால், நரகம் புகமாட்டான்என்று உனக்கு தோன்றுகிறதா?

அசுவலாயனன் : கோதமரே, எந்த வர்ணத்தானாயினும் இந்தப் பாவங்களைச் செய்தால் மரணத்தின் பின் நரகம் புகுவான். பிராமணன் ஆயினும் சரி, அப்பிராமணன் ஆயினும் சரி, யாவருமே தங்கள் பாவத்திற்குக் கழுவாய் செய்தேதீரவேண்டும்.

புத்தர் : ஓர் அந்தணன் உயிர்க் கொலை, திருட்டு, பிறன் மனைவிழைத்தல், பொய்மை, புறங்கூறல், வசைமொழிதல், பயனில் பேசுதல், பிறர்செல்வத்தை விரும்புதல், பகைமை, நாத்திகம் என்னும்(பத்துப்) பாவங்களின்று விலகினான் என்றால் அவன் மட்டுமே மரணித்ததும் துறக்கம் அடைவான். ஆனால், மற்றவர்ணத்தவர் இந்தப் பாவங்களினின்று நீங்கினால் துறக்கத்தை அடையமாட்டார்கள் என்று உனக்குத் தோன்றுகிறதா?

அசுவலாயனன் : கோதமரே, எந்த வர்ணத்தவனாயினும், இந்தப் பாவங்களினின்று விலகினால் சொர்க்கத்திற்குப் போவான். புண்ணியத்தின் பயன் அந்தணனுக்கும் சரி, அந்தணன் அல்லாதவனுக்கும் சரி, சமமாகவே கிடைக்கும்.

(தொடரும்...)



# அந்த கணம் பொழுதுகள்

— ஐசோதா —

இனிய சகோதரியே
நான்
உனது
முகத்தைப்பார்த்ததில்லை
முகவரியையும் தெரிந்ததில்லை.
உன்னைப்பற்றி
உன் உறவினன்
என் நண்பன்
காதோடுகாதாக
கசிந்த இரகசியத்தை
இப்பொழுது
இந்தப் பூமிக்கு
பிரகடனம் செய்கிறேன்.

உடன் பிறவாத
உனது நினைவுகள்
கருமுகில் கூட்டமாய்
எனது
நெஞ்சப்பாலையில்
வந்து வந்து படிகிறது.

1987இல்
அமைதிகாக்க வந்த
அயல் புறாக்கள்
தமது இறகுகளை
புயலாய் விரித்தபோது
அந்தக் கோரச்சுழிக்குள்
சிக்குண்டு
சிதைந்துபோனவர்களுள்
நீ மட்டும்
ஒரு நாணலாய்
பிடுங்குண்டுபோகவில்லை.

அந்த
புயல் பறவைகளில்
ஒன்று
விரகதாபம் தலைக்கேறி
உனது
வீட்டிற்குள் புகுந்தது.
அது,
"அஞ்சாதே பெண்ணே
உன்னை
வன் புணர்கிலேன்
கணப்பொழுது உன்னை
பிறந்த மேனியாய்
பார்த்தால் போதும்
பறந்து விடுவேன்"
என்று கனன்றது.

அந்தக் கணங்களில்
நெஞ்சு மூச்சிறைக்க
முடுக்கிவிட்ட இயந்திரம்போல்
கிடுகிடுக்கும் மெய்யளாய்
சித்தம் தடுமாறி
கணத்துளிகள் செத்தாய்.

மறுத்துவிட்டால்
நிகழக்கூடியதை
நினைத்துப் பார்க்கவும்
நாதியற்று
கண்களை மூடி
துணிவை
வலிந்து பற்றிக்கொண்டு
கணவனை நினைந்து
கணப்பொழுதுகள்
பிறந்த மேனியாய்
கல்லாய்ச் சமைந்தாய்.

வாக்குமாறாத
அந்த விரகதாபம்
உன் தரிசனத்தை
கண்காலுண்டு கிடைத்த
சொற்பசுகத்தில்
பறந்து போனது.
உடுக்கை களைந்து
உயர்வுகாத்தவளே,
கவரிமானை வென்றவளே!
உடலை வரைந்து
வேலியடைத்த
ஆறு முழச்சேலையையும்
படை படையாய் உறைந்து
பழமைதட்டிப்போன
பண்பாட்டுப்படிமங்களால்
விலங்கிடப்பட்ட
சிந்தனைகளையும்
தகர்த்துப்போட
அந்தக் கணப்பொழுதுகளில்
உனக்கு
எப்படித் துணிவுவந்தது?

மலைமகளே!
இந்தத்துகிலுரிவை
சரியென்று நெஞ்சுநிறைய
எந்த ஆடவனுக்கு
துணிவுவரும்?
சகோதரி,
அந்தக் கணங்களை
நினைத்துப்பார்க்கவே
எனக்கு
நெஞ்சு உறைகிறது!
அறிவுபூர்வமாய்
ஆன்மார்த்தமாய்
சொல்லிச் சுவைத்து
பெரிதெனப் போற்ற
அரிதான
பண்பாட்டு படிமங்களுக்குள்
புதையுண்டுபோன
பெண்புழுக்களுக்குள்
ஒருத்தியாக
நீ
இல்லாதிருப்பது
ஒரு
நல்ல குறியீடுதான்?

## மாதவனின் சிறுகதை

# ஜீவகாருண்யம்



கண்ணுக்குள் அடங்காது உயர்ந்து, பரந்து, விரிந்து, பருத்துப்புடைத்து ஒரு பெரும் நிலப்பரப்பை ஆக்கிரமித்து நிற்கும் பெருங்காடு. அமைதிக்குள் அச்சமும், அச்சத்துள் அமைதியும், விழித்திருந்து ஆட்சி செய்யும் அந்தக் காட்டின் அமைதியைக் கிழித்துக் கொண்டு அண்மையிலும், சேமையிலும் விலங்குகள் பறவைகளின், கத்தலும் கூவலும் அலறலும் பிளிறலும் அந்தகாட்டு மரங்களின் கிளைகளில் மோதி, அதிர்வலைகளை ஒலிக்கக் கேட்பது ஒரு வித மலைப்பையும் மனக்கிளர்ச்சியையும் கொடுக்கும். காட்டுத்தாவரங்களினதும், விலங்குகளினதும் சுவாசச்சங்கமத்தில் மிதக்கும் ஒருவகை காட்டுவாசம் மனதில் இதமான சுகத்தை உரசிக் கொண்டிருக்கும்.

அந்த காட்டின் மையப்பகுதியில் எழுந்து நிற்கும், ஒரு குன்றின் அடிவாரத்தில் உள்ள ஒரு குகையில், இரண்டு குழந்தைகளின் தகப்பனான சாம்பன் என்ற வேடன் தனது மனைவியுடன் வாழ்ந்து வந்தான். இயற்கையோடு, வாழ்வுக்காக, அவன் நடத்திய போராட்ட அனுபவங்கள், இயற்கை அவன் மேல் தொடுத்த அழுத்தங்கள், அதனால் இயற்கையைப்பற்றி அவனுள் எழுந்த ஆயிரம் கேள்விகள், அவற்றிக்கு விடைதேடி அலையும் மனம், விழிகளின் கூர்மை, நீண்டு வளைந்த மூக்கு, அடர்ந்த தாடி, தோளில் சுருண்டு தொங்கும் கூந்தல், பார்ப்பதற்கு ஒரு முனிவனின் சாயலைக் கண்முன் நிறுத்தும் அவனது தோற்றம்.

ஒரு நாள் காய்ந்த மரக்கட்டைகளை குகை வாசலின் முன் அடுக்கி, அரணிக் கட்டையில் தீ உண்டாக்கி, பற்றவைத்து, காட்டுத்தடிகளைக் கொண்டு, காட்டுக்கொடிகளால் கட்டிய ஒரு படலையை குகைவாசலில் சாத்திவிட்டு குகைக்குள் படுத்துக்கொண்டான்.

கடந்த ஒரு வாரமாக சாம்பனுக்கு உடம்பெல்லாம் உளைவெடுத்துக் கொண்டிருந்தது. இரவில் அவனுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தூக்கதேவதை அவனை விட்டுவிலகிப் போன ஒரு வெறுமை அவனை வாட்டி எடுத்தது. அப்போதுதான் அவனுக்குள் அந்த அனுபவம் தெளிவானது. அவனை அறியாமல் அவன் இதழ்கள் முணுமுணுத்துக் கொண்டிருந்தன. அது அவன் அருகில் படுத்திருந்த அவனது மனைவியின் காதுகளில் விழுந்தது.

“என்ன உன்னோட பாட்டில முணுமுணுக்கிறே?

“மழை வரப்போகுது போல, அதுதான்...

“ மழை வரப்போகுதெண்டு உனக்கு எப்படித் தெரியும்?

“ கொஞ்ச நாளாக உடம்பெல்லாம் உளைஞ்சு கொண்டிருக்கு”

“நீ வேட்டையாடி அலைகிறாய் பார். அதுதான் உடம்பெல்லாம் உளைச்சலாயிருக்கு. கொஞ்சம் பொறு. நான் உடம்பை அமுக்கி விடுகிறன்.”

சாம்பனின் மனைவி அவனுடைய உள்ளங்கால்கள் தொடக்கம் உச்சிவரை அமுக்கி கொண்டிருந்தாள். பிறகு சாம்பனைக் குப்புறப் படுக்கவைத்து அவன் உடலை அமுக்கி விடத்தொடங்கினாள். சாம்பனுக்கு உடல் உளைச்சல் போனதோ இல்லையோ அதில் ஒரு சுகத்தை அனுபவித்தபடியே மௌனமாகப் படுத்துக் கொண்டிருந்தான்.

“ ஏன்னா பேசாம இருக்கே? உடம்பு சுகமாயிருக்கா?...

என்னய்யா? நான் பேசிக்கொண்டே இருக்கேன். நீ ஒருவார்த்தையும் பேசிறேயில்லே"

அந்தக் கணப்பொழுதில் குப்புறப்படுத்திருந்த சாம்பன் வலது பக்கம் உடலைத்திருப்பி, அவளை வலதுகரத்தால் இழுத்து அணைத்துக் கொண்டான்.

"இதுக்குத்தானாக்கும் உடம்பு உளைஞ்சிது. கள்ளா. உன்ர காட்டிலை மழை பெய்யுமாக்கும்."

அவன் எதுவுமே பேசவில்லை. அவளை இன்னும் இறுக அணைத்தான். கணத்துளிகள் மணித்துளிகளாகிக் கொண்டிருக்கையில், குகைக்கு வெளியே குளிர்காற்று வீசத் தொடங்கியது. வானம் கறுத்து இடி இடித்து மின்னலைக் கொண்டுவந்து குகைக்குள் வீசி எறிந்தது. அவள் திடுக்குற்று அவனை இறுகப்பற்றிக் கொண்டாள். மழைகொட்ட ஆரம்பித்தது. அவள் பேச்சுக் கொடுத்தாள்.

" மழை வரப் போகுதென்டால் உனக்கு உடம்பு உளையுமா?"

"அனேகமாக அப்பிடித்தான். ஏதாவது தீமை நடக்கப்போகுதென்டாலும் என்ர மனசிற்கு தெரியும். சிலவேளை நான் கனவு கண்டாலும் அது நடக்கும்.

"அது எப்பிடி?

" எப்பிடி எண்டு எனக்குத் தெரியாது. ஆனால் நடக்கும்.

" அப்பிடி நீ கண்டது ஏதாவது நடந்திருக்கா?

" நானும் என்ர தகப்பனும் வேட்டைக்கு போனபோது ஒரு யானையில் சிக்கிக்கொண்டதாகக் கனவு கண்டன். அது அப்பிடி நடந்திட்டுது. ஏதோ தெய்வாதீனமாகத் தப்பிக் கொண்டம்."

"நானும் தான் எத்தினை கனவு கண்டிருப்பன்.? ஒண்டும் நடந்ததாக தெரியலையே"

"நான் நினைக்கிறன் சிலபேர் கனவு கண்டா அது நடக்கும்."

"அது எப்பிடி"

"தெரியாது"

மழை ஓய்ந்த பாடாகத் தெரியவில்லை. யுகமழைபோல் கொட்டுகொட்டென்று கொட்டிக்கொண்டிருந்தது. இரண்டு நாள் தொடர்ந்து அடைமழை. எரிந்த மரக்குத்தியில் தோண்டிய கொட்டில் தேனில் ஊறப்போட்ட பன்றி இறைச்சியும், நெருப்பில் வாட்டி உலர்ந்து போன சில இறைச்சி வற்றல்களும், அந்த இரண்டு நாள்களும் வயிற்றைச் சமாளிக்கப் போதுமானதாக இருந்தது. ஒரு சிறு மரக்குற்றியில் உட்குடைந்து. விலங்குக் கொழுப்பால் உருக்கி நிரப்பப்பட்டு, ஒரு காட்டுக் கொடியின் பஞ்சு போன்ற தும்பைத் திரியாக்கிக் கொளுத்தப்பட்ட மங்கலான வெளிச்சம் அந்தக்குகையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. சுரைக்காய் போன்ற ஒரு வகைக் காயை உட்குடைந்து காயவைத்த குடு ஒன்றில் நிரப்பிவைக்கப்பட்ட ஆற்றுக் தண்ணீரில் தாகத்தை தணிக்கக் கூடியதாக இருந்தது.

இரண்டு நாட்களின் பின் மழை ஓய்ந்தது. சாம்பன் குகையை விட்டு வெளியில் வந்து பார்த்தான்.காடு நிஷப்தமாக இருந்தது. மழைக்கு ஒதுங்கி நிற்கும் விலங்குகள் உலாவத்தொடங்கியிருக்கும் என்று அவன் நினைத்தான். பகல் பத்து மணிக்கு மேலாகிவிட்டது. சாம்பன் அம்பு வில்லுடன், ஒரு தடித்த அளவான பொல்லையும் எடுத்துக் கொண்டு மனைவி மக்களிடம் விடைபெற்றுக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.

மழை வெய்யில் சுரீர் என்று அவன் உடலைத் தைத்துக் கொண்டிருந்தது. படிந்து கிடந்த காட்டின் சருகுகளை மழைவெள்ளம் ஊடறுத்துச் சென்ற இடங்கள் உழவுசால்போல் நீண்டு பிளந்து கிடந்தன. எப்படியும் தனது குடும்பத்தின் அன்றைக்கான உணவுத் தேவையைத் தேடியாக வேண்டும் என்ற நெஞ்சு நிறைந்த நினைவுடன், கண்கள் காட்டுமரங்களை ஊடுருவிநோக்க, அவன் நடந்து கொண்டிருந்தான். திடீரென்று ஒரு கொழுத்த முயல் அவன் முன்னால் பாய்ந்து ஓடுவதைக் கண்டான். மின்னல் வேகத்தில் தன் கையிலுள்ள பொல்லால் அதன் மேல் வீசி ஏறிந்தான். முயல் காற்று வேகத்தில் ஓர் அடர்ந்த புதருக்குள் புகுந்து கொண்டது.

அந்த அடர்ந்த புதருக்குள் அதைக் தேடுவது பயன் அற்றது என்று கருதிய சாம்பன் மனந்தளராது வேறு திசை நோக்கி நகரலானான். மதியத்திற்கு மேலாகிவிட்டது. அலைந்து அலைந்து கால்கள் வலிப்படுத்தன. இதற்கிடையில், இரண்டு புறாக்களுக்குக் குறிவைத்துத் தவறிப் போனதால், தனது வில்லாற்றல் குறித்து ஒருவித தாழ்வு மனப்பான்மையுடன் நடந்து கொண்டிருந்தான். தாகத்தால் அவன் நாவு வறண்டு போயிருந்தது. அவன் கறுத்த மேனியில் வியர்வை உறைந்து உப்புப்பூத்திருந்தது.

சலசலத்தோடும் ஒரு சிற்றோடைக்கு வந்தடைந்தான் சாம்பன். கை மணடையில் தண்ணீர் அள்ளி முகத்தைக் கழுவினான். ஆயாசம் தீரத்தண்ணீரைப் பருகினான். அசதி அவனை வற்புறுத்த, ஓடையின் அருகில் நிழல் கவிந்து கிடந்த ஒரு

தட்டையான பாறையில் அமர்ந்தான். அந்த இடத்தின் அமைதியும் சிற்றோடையின் அழகும் அவனை ஆகர்சித்தது. இனம் புரியாத ஒரு மகிழ்வு அவனுள் தளிர்விரித்தது. அந்த உணர்வில் அனைத்தையும் மறந்து மூழ்கியிருந்தான்.

அண்மையில் ஒரு மயிலின் அகவல் அவனை எழுப்பி நிறுத்தியது. நெஞ்சுக்குள் நம்பிக்கை மின்னியது. அம்புவில்லைத் தயார் நிலையில் வைத்துக்கொண்டு, அரவம் செய்யாமல் மயிலின் அகவல் வந்த திசைநோக்கி நகர்ந்தான். மயில் இருந்த மரத்தை அண்மியபோது, அருகே நின்ற மரத்திலிருந்து ஒரு பெரிய மலைப்பாம்பு அவனை நோக்கி தலைகீழாய் இறங்குவதைக் கண்டு அப்பால் பாய்ந்து ஓடினான். இந்தச்சந்தடியில் மயில் பறந்து போனது.

வழக்கத்திற்கு மாறான அன்றைய வேட்டை நடை முறைகள் அவனுக்கு நல்ல சகுனமாகப் படவில்லை. சற்று அப்பால் அவன் கால்கள் நின்றன. கைகள் அம்புவில்லைத் தயாராக்கிக் கொண்டன. அம்பு பாய்ந்தது. ஒரு புறாவின் ஒரு பக்க சிறகை மெல்ல உரசிக்கொண்டு அம்பு அப்பால் பாய்ந்தது. அந்த அதிர்ச்சியில் புறா நிலத்தில் விழுந்தது. ஒரு பக்க சிறகில் சிறியவேதனை, நோவு. சாம்பன் கண்ணிமைக்கும் வேகத்தில் புறாவை பிடிக்க நெருங்கவும், அது தன்னைச் சுதாகரித்துக்கொண்டு பறக்க முடியாமல் வருத்தத்துடன் பறக்க ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது.

கைக் கெட்டியது வாய்க்கெட்டாமல் போன ஏமாற்றமும் கவலையும் அவன் இதயத்தைக்குடைய, உயரமாகப் பறக்க முடியாமல் சோர்ந்து பறந்து கொண்டிருக்கும் புறா விழுந்துவிடும் என்ற நம்பிக்கையில் அவன் புறாவைத் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தான். சோர்வுற்ற போதும் குடும்பத்தின் நினைவில் அவன் ஓடிக்கொண்டிருந்தான்.

புறா, மாடிகள் நிறைந்த ஓர் அரண்மனை வளாகத்துள் புகுந்தது. அந்த வளாகத்துள் நின்ற உயர்ந்த மல்லிகைப்பந்தலின் கீழ்ப் போடப்பட்டிருந்த, அழகான இருக்கையில் வீற்றிருந்த சிபிச்சக்கரவர்த்தியின் மடியில் சென்றமர்ந்தது. அச்சத்தில் நடுங்கிக் கொண்டிருந்த புறாவை சிபி அபயம் அளிக்கும் பாவனையில் தடவிக்கொண்டிருந்தான்.

அரண்மனை வளாகத்தையும் பொருட்படுத்தாமல் மதில்மேல் ஏறி வளாகத்துள் குதித்த சாம்பன், அந்த மல்லிகைப் பந்தலுக்குள் புகுந்தான். மூச்சு இறைக்க வியர்வை வழிய களைப்படைந்த அவன், அப்படியே நின்று அரசனைப் பார்த்தான்.ஆனாலும் அச்சப்படவில்லை. சரணடைந்துவிட்ட துணிவில் புறா சிபியின் மடியில் இருப்பதைக்கண்டு அவன் மலைத்துப்போனான். அவனது சிந்தனையில் எழுந்த கேள்வி அலைகள் அவனது கண்களின் மணிகளில் மோதி நின்றன.

சிபி சாம்பனை ஏற இறங்கப் பார்த்தான். அவன் தோற்றம் சிபியை ஆகர்சித்தது. தன் காவலாளியை அழைத்து காதிற்குள் ஏதோ சொன்னான். காவலாளி கூரிய கத்தியுடனும் தராசுடனும் சிபியின் முன் வந்து நின்றான். கத்தியை வாங்கிக் கொண்ட சிபி தராசை நிறுத்திப்பிடிக்கும்படி காவலாளியைப் பணித்தான். தராசின் ஒரு தட்டில் அந்தப்புறாவை வைத்தான். கத்தியினால் தன் நெஞ்சத்தசையை வெட்டக்கத்தியைக் கொண்டுசென்றபோது, அனைத்தையும் பொறுமையாக அவதானித்துக்கொண்டு நின்ற சாம்பன் குரல் கொடுத்தான்:

“மன்னிக்க வேண்டும் அரசே! தங்கள் செயல் என்னை மிகவும் துன்புறுத்துகின்றது”

“என்ன சொல்லுகிறாய்? இந்தப் புறா தன்னைக்காக்குபடி என்னிடம் சரணடைந்துவிட்டது. இந்தப்புறாவின் நிறையுள்ள இறைச்சியை என் நெஞ்சிலிருந்து வெட்டி உனக்குத்தரத் தீர்மானித்தேன். என்னுடைய ஜீவகாருண்யச் செயல் உன்னைத் துன்புறுத்துகிறதா?

“அரசே என் விருப்பு வெறுப்புக்களைப் பொருட்டாக மதியாது, நான் மனித இறைச்சியைச் சாப்பிடுபவன் என்று தாங்கள் கருதியதும், அதைச் சாப்பிடும்படி என்னை நிர்ப்பந்திப்பதும் என்னைப் புண்படுத்துவதாகாதா?”

“நீ வேடன் தானே? காட்டுமிராண்டி தானே?”

“ இது உங்கள் தவறான எண்ணம். நான் உங்களிடம் மனித இறைச்சியையா கேட்டேன். எனக்குத் தேவை இந்தப்புறாதான்.”

“ உயிர்களை கொல்வது பாவமில்லையா?

“ பாவப்புண்ணியம் பற்றி யார் நிர்ணயிப்பது? என் போன்றவர்கள் அன்றாட உணவுக்காக உயிரைப் பணயம் வைத்து வேட்டையாடு கின்றார்கள். ஆனால் அரசர்கள் இன்பப் பொழுது போக்கிற்காக மிருகங்களைக் கொன்று அனுபவிக்கிறார்கள். அரசர்களது வேட்டைப் பிரியத்தால் பாதிக்கப்படுவர்களும் என்போன்றவர்கள் தான். மன்னர்கள் தங்கள்

படைப்பலத்தைக் கொண்டு ஏனைய குறுநில மன்னர்ளை அடக்கி, போரில் பலரைக் கொன்று, தங்கள் சாம்ராட்சியங்களை நிறுவுகிறார்கள். இது பாவம் இல்லையா?

" நீ அதிகம் பேசுகிறாய். ஆட்சியின் சூட்சுமங்களை நீ எப்படி அறிவாய்?

" மன்னிக்கவேண்டும் அரசே! அவசியப்பட்டால் பேசுகிறேன். உயிர்களை கொல்வது பாவம் என்கிறீர்கள். இயற்கையின் நியமங்களைத் தீர்ப்பிட யாருக்கு அருகதை இருக்கிறது? நீங்கள் அடைக்கலான் குருவியைப் பார்த்திருப்பீர்கள். அது கேடற்றது, கபடற்றது என்று கருதப்படுகின்றது. ஆனால் அது கூட ஒரு சிறு தும்பியைத் துரத்தித் துரத்திக் கொத்திக் கொன்று விழுங்கியதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் எல்லோரும், பொதுவாக கழுகைக் கொடிய விலங்கு என்கிறார்கள். இது வேடிக்கை இல்லையா? அரசர்களும் அவர்களைச் சார்ந்த மந்திரி பிரதானிகளும், அதிகாரத்துடன் ஆடம்பரமாக சுகபோகங்களை அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய பிரசைகள் பெரும்பாலானவர்கள் மிகவும் கடுமையான வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள். எத்தனை அரசர்கள் ஆடம்பரமின்றி எளிமையாக வாழ்கிறார்கள்? பிரசைகள் பசிகிடக்கிறார்கள் என்பதற்காக எந்த அரசன் சாப்பிடாதிருக்கிறான்? இவைகளும் ஜீவகாருண்யத்தில் அடங்குமா?

" நிறுத்து. உனக்கு இப்போது என்ன வேண்டும்?

" எதுவும் வேண்டியதில்லை அரசே. இந்தப்புறாவின் உயிரைக் காப்பாற்ற நீங்கள் உங்கள் தசையை அறுக்கத் துணிந்தீர்கள். உங்களைக் காப்பாற்ற இந்தப் புறாவை நான் தியாகம் செய்கிறேன்."

என்று கூறி முடித்த சாம்பன், சிபியின் வார்த்தைகளுக்குக் காத்திராமல் தனது குடும்பத்தின் நினைவைச் சுமந்தபடி அரண்மனை வளாகத்தைவிட்டுப் புறப்பட்டான். ஓட்டமும் நடையுமாக காட்டிற்குள் சென்று கொண்டிருந்த அவன் காதுகளில், ஒரு விலங்கு முனகுவது தைத்தது. அங்கும் இங்கும் நோட்டமிட்டான். சற்றுதூரத்தில் ஒரு மலைப்பாம்பு ஒரு கலைமானை மடக்கி நெரித்து அதன் கால்கள் இரண்டையும் விழுங்கிங்கொண்டிருந்தது. பாம்பின் பின்னால் சென்ற சாம்பன் தனது அம்பை எடுத்துத் தனது பலம் கொண்ட மட்டும் அதன் நடுமுதுகில் ஓங்கிக்குத்தினான். அந்த அம்பு பாம்பின் முதுகை ஊடறுத்துக்கொண்டு நிலத்துள் புகுந்தது. பாம்பால் அசைய முடியவில்லை. சாம்பன் கலைமானின் கொம்பை பிடித்துக் கொண்டு பாம்பின் வாயிலிருந்து அதன் பின்னங்கால்களை இழுத்து வெளியே எடுத்தான். உடனேதானே அதைத் தோளில் போட்டுச் சுமந்து கொண்டு, நிறைந்த நெஞ்சுடன் தன் குகையை நோக்கி கடுகிச் சென்று கொண்டிருந்தான். ●



**எல்லா யுகங்களின் வரலாறும், குறிப்பாக இந்த யுகத்தின் வரலாறு புகட்டுகின்ற பாடம் இதுதான்: தங்களைப்பற்றிச் சிந்திக்க மறந்தவர்கள் மறக்கப்படுவார்கள்.**

— லூயிஸ் ஒட்டோ.

# குறியீட்டு அரங்கு

குறியீடு அல்லது அடையாளவியல் (Symbolism) என்றால் என்ன? நாடகத்திற்கும் குறியீட்டிற்கும் இடையிலான உறவு என்ன? குறியீட்டு நாடகத்தை எவ்வாறு எழுதுவது? நாடகத்தில் குறியீட்டை எப்படிப்பயன்படுத்துவது? என்ற கேள்விகளுக்கு சமூக அரசியல், பொருளாதார, பண்பாட்டு அடிப்படையில் விடைகாண்பது தான் இந்தக் கட்டுரையின் நோக்கம். குறியீட்டை நாடகத்தில் பயன்படுத்துவது பற்றிய பல குழப்பமான அபிப்பிராயங்கள் நிலவவே செய்கின்றன. இவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியம்.

## குறியீட்டியல் அல்லது அடையாளவியல் என்றால் என்ன?

இயற்கை மற்றும் வரலாற்று வெளிப்பாட்டின் அடையாளச் சிறப்புக்குரிய ஆற்றலை ஒவ்வொரு குறியீடும் தன்னுள் கொண்டுள்ளது. சொற்கள், நபர்கள், நிகழ்வுகள் ஆகியவை, மதவரலாறு மற்றும் நம்பிக்கைகள், பொருள்கள் மற்றும் சிறப்பு, நடந்தவை, நடக்க இருப்பவை ஆகியவற்றை ஒன்று சேர்த்தவரையில் அவற்றைக் குறியீடு என்று குறிப்பிடலாம். அதாவது குறியீடு



அல்லது அடையாளவியல் என்பது, பார்க்கப்படாத மற்றும் பார்க்கவியலாத ஒன்றின் பார்வைக் குரிய கருத்தளவிலான உருவாக, உவமையே அது.

எனவே, ஒரு குறியீட்டின் மதிப்பானது தெளிவுபடுத்தலாகும். குறியீடு ஆழ்ந்த கருத்தியல் தளத்தை நோக்கிப் பல் பரிமாணங்களில் விரிந்து செல்வதில்லை. எளிய அர்த்தமுள்ள முழுமையைச் சுருக்கித்தருதலும், நடத்தையையும் வடிவமைக்க ஒரு மையத்தை அமைத்தலுமாகும்.

குறியீட்டியல் பற்றி மிகவிரிவாக ஆராயப்புகுமுன் அடையாளம் (Mark) என்றால் என்ன என்பதை முதற்கண் விளங்கிக் கொள்வது அவசியமாகிறது.

**அடையாளம் (Mark)**

அடையாளவியல் அல்லது குறியீட்டிய(Symbolism)ல் என்பது பற்றி ஆராயமுன்பு அடையாளம் (Mark) என்றால் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும். அடையாளவியலை அடையாளத்திலிருந்து வேறுபடுத்தவும், இரண்டினதும் வரையறைகள் என்ன என்று இனங்காணவும், படிமம் மற்றும் அடையாளவியல், இரண்டும் எவ்வாறு வேறுபடுகிறது என்பதைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்.

**ராஜேஸ்வரன்**

அடையாளம் என்பது ஒரு பொருளின் உடைமை சார்ந்த குறி. ஒன்றை இன்னொன்றிலிருந்து அல்லது ஒருவனை இன்னொருவனிடம் இருந்து வேறுபடுத்திக்காட்டுதலாகும். ஒரு பொருளின் அடையாளத்தைக்கொண்டு அந்த பொருளுக்குரியவனை அல்லது நிறுவனத்தை வெளிப்படுத்தலாகும். வர்த்தகத் துறையில் இதனை "ரேட் மாக்" (trade mark) என்று குறிப்பிடுகின்றார்கள்.

இந்த அடையாளங்கள் பல வடிவங்களையும், அர்த்தங்களையும் கொண்டுள்ளன. அடையாளங்கள் உடைமைசார் அடையாளங்கள் மற்றும் அகவய அடையாளங்கள், புறவய அடையாளங்கள் என்று பாகுபடுத்தப்பட்டுள்ளன. இத்தகைய அடையாளங்கள் இயற்கை மற்றும் வரலாற்றுத்தளங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதால், சமூக வாழ்வில் பண்பாட்டுத் தன்மையுடையனவாகவும் விளங்குகின்றன. பொதுவாக குறியீடுகள் மற்றும் படிமங்கள் மானிடதன்மை யுடையனவாகவும் இருக்கின்றன.

## உடைமைசார் அடையாளங்கள்.

மனிதர்கள் தாங்கள் நாளாந்தம் பாவிக்கும் உயிருள்ள, உயிரற்ற பொருட்களைத் தம்முடையவை என்று உறுதிப்படுத்தும் உத்திகளாகவும் அடையாளங்கள் திகழ்கின்றன. இதன் மூலம் அப்பொருள்களின் மீது தமக்குள்ள உரிமையை நிலைநாட்டுவதாகவும் அடையாளங்கள் கருதப்படுகின்றன. பொருட்களுக்கு அடையாளமிடுதல், மந்தைகளுக்கு குறி சுடுதல், காலில் வளையம் போடுதல் என்பன உடைமை சார் அடையாளங்களாகும்.

உடைமைசார் அடையாளங்களுக்கு இன்னுமோர் சிறப்பான உதாரணத்தைக் காட்டமுடியும். ஏனெனில் இந்த அடையாளங்களோடு மானிடப் பண்பு பின்னிப் பிணைந் திருப்பதைத் தெளிவாக்குவதே எமது நோக்கம். ஒரு இந்தியப் பெண் (தமிழ்ப்பெண்) திருமணமானவுடன் அவள் நெற்றியில் குங்குமப் பொட்டும், கழுத்தில் தாலியும், கால்விரல்களில் மெட்டியும் அணிவிக்கப்படுகிறாள். ஓர் எசமான் ஒரு பொருளுக்கு அதன்மீது தனக்கு மட்டுமான பாலியல் உறவின் உரிமையை நிலை நாட்டுவதுதான் இந்தப் பண்பாட்டு அடையாளங்களின் அர்த்தமாகும். அதாவது, வரலாற்றில் பெண்களிடமிருந்த சொத்துடைமையைப் பறித்துக் கொண்ட ஆண், அந்தச் சொத்துடைமை, தன் நெருக்கமுள்ள இரத்த உறவுமுறைக்கு வெளியே சென்றுவிடக்கூடாது என்ற நோக்கில், தனது சொத்துடைமைக்கு உண்மையான வாரிசு ஒன்றை உருவாக்கும் நோக்கில், தன் மனைவி பிற ஆடவருடன் சோரம் போவதைத் தடுக்கும் ஒரு உத்தியாகவே தாலி அர்த்தப்படுத்தப்படுகிறது. சொத்துடைமைக்குச் சுத்தமான ஒரு வாரிசை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காகவே ஒரு பெண் தன் மனத்தினால், வாக்கால் உடலால் கணவனையே தன்தெய்வமாகக் கொள்ளவேண்டும் என்ற எண்ணக் கருத்திற்கு மேல்வரிச்சட்டமாகவே இந்தத்தாலி பெண்ணுக்குப் பூட்டப்பட்டுள்ளது. இதன் மூலம், அப்பெண்ணின் மேல் கணவனல்லாத இன்னொருவன் காமுறும் ஓர் எண்ணப்பாங்கைத் தடைசெய்யும் அடையாளமாகவும் இருப்பதோடு, அவளையும் அன்னியன் மேல் காமுறுவதையும் வலுக்கட்டாயமாகக் கட்டுப்படுத்துகின்றது.

இது போன்றே ஆண்டான் அடிமை சமுதாயத்திலும், ஆண்டான்கள் தங்களின் அடிமைகளின் மீது தமக்குள்ள உடைமை உரிமையை நிலை நாட்ட, அடிமைகளுக்கு அடையாளமிடுதலாகும். பச்சை குத்துதல். ஒரு பக்கக்காதில் கம்பிவளையம் போடுதல், குறிசுடுதல், கால்களில் கம்பி வளையம் போடுதல் என்பன உடைமை சார் அடையாளங்களாகும்.

ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் தனித்துவத்தைக் குறிக்கும், பதாகைகள், இலச்சினைகள் இருக்கின்றன. இனங்களும், மதங்களும் அடையாளங்களால் பாகுபடுத்தப்படுகின்றன. ஆக, அடையாளம் என்பது ஒன்றை இன்னொன்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் வழிமுறை அல்லது உத்திதான்.

## புறவய அடையாளங்கள்

ஏதாவது ஒரு வேலைக்காக, வீட்டிலிருந்து வெளியே செல்லும் போது, எதிரில் யார் யாரைக் காணக் கூடாது என்று வகுக்கப்பட்டுள்ளன. இது ஒரு ஐதீகமாக இருந்தாலும் நமது நாளாந்த வாழ்வோடு சம்பந்தப்பட்ட பண்பாடாகவும் இருக்கிறது.

ஒரு பிராமணன், தலை மயிர் விரித்தவள், விதவை, காவி உடுத்தியவன், மலடி, மொட்டைத்தலையன், தட்டான், நாவிதன், பைத்தியக்காரன், அங்கவீனன் போன்றவர்கள் முழுவியளத்திற்கு, அதாவது வீட்டிலிருந்து புறப்படும்போது எதிரில் வரக்கூடாதவர்கள். அப்படி அவர்களைக் காணநேர்ந்தால் போகிற கருமம் தடைப்படும் என்பது ஐதீகம்.

இது போன்று, வீட்டை விட்டுப் புறப்படும்போது, ஒற்றைத் தும்மல், அழுகுரல், கொட்டாவி, ஏப்பம், பெருமூச்சு விடுதல், பன்றி உறுமுதல் போன்ற ஒலிகளைக் கேட்க நேர்ந்தாலும் போகிற கருமம் தடைப்படும் என்பதன் அடையாளங்களாக கருதப்படுகின்றன.

இன்னும் விறகுப்புகை, நெருப்பு, பாம்பு, புதுப்பானை, எண்ணெய்க்குடம் போன்றவற்றைக் காண்பது தீமையின் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன.

ஆண்களுக்கு இடது கண், இடது தோள்துடித்தல், பெண்களுக்கு வலது கண், வலதுதோள் துடித்தல் என்பனவும் தீமையின் அடையாளமாகக் கருதப்படுகின்றது. காரணமின்றித் திடீரென மெய் நடுங்குதல், மனம் சஞ்சலப்படுதல் போன்றவையும் தீமையின் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன.

இவற்றைத் துர்க்குறி அல்லது துர்ச்சகுனம் என்று அழைப்பர். இலக்கியங்களில் இத்தகைய துர்ச்சகுனங்கள் இடம் பெறுகின்றன. சிலப்பதிகாரத்தில் இத்தகைய சில அபசகுனங்களைப் பார்க்கலாம். ஆய்ப்பாடியில் மாதரி வீட்டில் கண்ணகியோடு இருந்த கோவலன், காற்சிலம்பு விற்க மதுரைக்குப் புறப்படுகின்றான். அங்கு அவன் பொற்கொல்லன் சூழ்ச்சியால் கள்வன் என்று குற்றம் சுமத்தப்பட்டு, பாண்டிய மன்னனின் காவலனால் கொல்லப்படுகின்றான். ஆனால் ஆயர்பாடியில் மாதரி வீட்டிலிருந்த கண்ணகிக்கு, அவளை அறியாமலே அவர் மேனி நடுங்கி, அச்ச உணர்வு ஏற்படுகிறது. இது கோவலன் கொல்லப்பட்டமைக்கான புறவய அடையாளங்களாகும்.

அதே வேளை, ஆயர்பாடியில் தன் வீட்டில் இருந்த மாதரி ஆயர்பாடியில் தான் கண்ட சில உற்பாதங்கள் எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் ஏதோவொரு தீமைக்கு அடையாளமென்று தன் மகள் ஐயைக்குச் சொல்கிறாள்.

> **"குடத்தில் பால் உறையாது**
> **இருக்கக்கண்டேன்**
> **ஆணொருது கண்ணில் நீர்**
> **வடியக்கண்டேன்**
> **ஆட்டுக்குட்டிகள் சோர்ந்து**
> **கிடக்கக் கண்டேன்**
> **ஆவின் கழுத்து மணி அறுந்து**
> **வீழக்கண்டேன்"**

இவ்வாறு மாதரி தன் மகள் ஐயைக்குக்கூறும் இந்த உற்பாதங்கள் எதிர்காலத்தில் நிகழக்கூடிய தீமையை நிகழ் காலத்தில் பார்த்தவையாகும்.

## அகவய அடையாளங்கள்

புறத்தே நிகழும் நிகழ்வுகளின் தன்மைகளைக் கொண்டு, இன்ப துன்பங்கள் அடையாளப்படுத்தப்படுவது போல, கனவில் வரும் காட்சிகள், ஆழ்மனத் தியானக் காட்சிகள் என்பவை அகவய அடையாளங்களாகக் கருதப்படுகின்றன.

கனவில் பாம்பையும், பாம்பு துரத்துவதுபோலவும் காணுதல் பாலியல் சிக்கலின் அடையாளமாகக் கருதப்படுகின்றது. கனவில் சாவீட்டை காணுதல் மங்களகரமான நிகழ்வுக்கும், கனவில் கலியாணவீட்டைக் காணுதல் அமங்கலகரமான நிகழ்வுக்கும் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன. மற்றும், கனவில் எண்ணெய் கொட்டக் காணுதல், முடையுடைதல், பாலியல் சம்பந்தமான இன்ப உறவுகள், தேள், மற்றும் பிரிந்து போன காதலன், காதலி, பிணக்குள்ள உறவினர்கள் என்பவர்களைக் காணுதல் துன்பங்களின் அடையாளங்களாகக் கருதப் படுகின்றன.

இவை மட்டுமன்றி ஆழ்மனத் தியானத்தின்போது தோன்றும் சில அகக்காட்சிகள், பொருட்கள், அவற்றுக்குரிய விசேட கருத்தியல் அடையாளங்களைக் கொடுக்கின்றன. 1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிலவிய அச்சுறுத்தலான சூழலில் வீட்டிற்கு வெளியே வர முடியாத ஒருவர், ஒரு மதியத்தின் போது கண்களை மூடிக்கொண்டு தியானத்திலிருந்தார். அந்த ஆழ்ந்த தியானத்தின் போது அவர் ஒரு காட்சி கண்டார். ஒரு வேங்கை கம்பீரமாக நடந்து வந்து, நிமிர்ந்து நின்று சுற்றும் முற்றும் பார்ப்பதான ஒரு காட்சி. அந்தச் சூழலில் தலைமறைவாக இருந்த அவருக்கு, புறச் சூழலில் அவருக்கு நடக்கவிருக்கும் ஏதோ ஒரு நெருக்கடியின் தரிசனமாகவே அந்தக் காட்சி அமைந்ததாக அவர் கருதினார்.

எனவே, அடையாளம் என்பது மிகக்குறுகிய எல்லைக்குள் கருத்தைப் புலப்படுத்துவதாகும். அதற்கு ஒரு விரிந்த தளம், பரிமாணம் இல்லை. அடையாளங்கள் பொருள் சார்ந்தவைகளாகவும், கருத்தியல் சார்ந்தவைகளாகவும் விளங்குகின்றன.

**கருத்தியல் அடையாளம்**

ஒரு பொருள் அது உயிருள்ளதோ அல்லது உயிரற்றதோ ஒரு கருத்தைப் புலப்படுத்தி நின்றால் அது கருத்தியல் அடையாளமாகும். அந்தப் பொருள்தரும் கருத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வேறு பரிமாணங்களில்லை. அடையாளத்தின் வரையறை இதுதான் எனக்கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தை அந்தப் பொருள் வெளிப்படுத்துவதோடு நின்றுவிடுகிறது. அதற்கு அப்பால் அதற்கு ஒரு கருத்துப்பரிமாணவீச்சு இல்லை என்பதை தெளிவாக்கிக் கொள்ளவேண்டும்.

**" பறவையைப்போல கபடில்லாமலும்**
**பாம்பைப்போல விவேகமாகவும் இருங்கள்"**

**"ஒட்டகத்தை விழுங்கிவிட்டுக் கொசுவை வடிகட்டுபவர்கள்"**

இயேசு எடுத்தாளும் இந்த அடையாளங்கள் உவமை, உருவக அடையாளங்களாகும். இவை குறியீடுகளாக இங்கு கருதப்படவில்லை மட்டுமல்ல, அப்படிக் கருதப்பட முடியாதவையுங்கூட. ஏனெனில் இவைகள் ஒரு பொருள் குறித்த அடையாளங்களாகும். பறவை கபடின்மைக்கும், பாம்பு விவேகத்திற்கும் அடையாளங்களாகத் தீட்டப்பெற்றுள்ளன. எனவே நல்லவர்களாக மட்டுமின்றி வல்லவர்களாகவும் இருங்கள் என்பதை இவை புலப்படுத்துகின்றன. ஒவ்வொன்றும் அதற்குரிய ஒரு பொருளை மட்டும் குறித்து நிற்கிறது.

அடுத்துவரும் உருவக அடையாளங்கள் ஒட்டகம் , கொசு. ஒட்டகம் பெரியது. கொசு, சிறியதென்று ஒப்பிட்டுக்கூறுவதற்கும் சிறியது. அக்காலத்தைய யூத மதவாதிகள் பெரிய தவறுகளைச் செய்து அவற்றை மறைத்துவிட்டு (ஐயர் முழுப்பூசனிக்காயைச் சோற்றுக் கோப்பைக்குள் மறைக்கக்கூடியவர் என்பது இந்த அர்த்தத்தில் தான் போலும்) மற்றவர்கள் செய்யும் சிறு தவறுகளை வடிகட்டிக்காட்டும் வஞ்சனையை இந்த உருவக அடையாளங்களால் விளக்குகின்றார் கிறிஸ்து. தவறின் கனதியையும் தவறு செய்பவர்களின் மனப்பான்மையையும் இந்த அடையாளங்களால் புலப்படுத்துகின்றார்.

**" வெள்ளையடித்த கல்லறைகளே!**
**விரியன் பாம்பின் ஜென்மங்களே!**
**ஆட்டுத்தோல் போர்த்த ஓநாய்க் கூட்டமே!"**

இவை போன்ற உருவக அடையாளங்கள் கலாபூர்வமான முறையில், கண்டிப்பான தொனியில் உச்சரிக்கப்பட்டுள்ளன. வெள்ளையடித்த கல்லறைகள் போலித்தனத்தையும், விரியன் பாம்பின் ஜென்மங்கள் நச்சுத்தன்மையையும், ஆட்டுத்தோல் போர்த்த ஓநாய்க்கூட்டம் கபடத்தையும் குறிக்கும் அடையாளங்களாகும். இத்தகைய அடையாளங்கள் உவமை, உருவகம் சார்ந்தவைகளாக இருப்பதால் உவமை, உருவக அடையாளங்கள் என்பதே பொருத்தமானதாகும்.

(தொடரும்...)



**மதம் ஒருவனின் தனிப்பட்ட விடயம்**
**அரசியலில் அதற்கு இடம் இல்லை.**

—காந்தி

# சமநிலை அமைதி

அமைதிக்கான போர்
அடக்குமுறைக்கு
அணி சேர்த்தமையின்
அமைதியும் அழிந்தது
போரும் சிதைந்தது!
அமைதியின் அகரம்
அடித்தளம், அளவுகோல்
அருள் உளம் என்பது
அருளியல் காற்றும்
அறக்கூற்றன்றோ

உள்ளத்தில் அமைதிதான்
உலகிற்கு ஊற்றுகோல்
சமநிலை பேணலே
அமைதியின் மந்திரம்!
உணாச்சியில் சமநிலை
உணர்விலும் அதே நிலை
கருத்திலும் உரையிலும்
செயலிலும் சீர்நிலை!

உள் உறை அமைதியே
புறத்திலும் நிலவிடும்
வீட்டிலும் காட்டிலும்
ஊரிலும் உலகிலும்
பாரிய எதிரொலி
விளைப்பது மனநிலை!

இல்லத்தில் நிகழ்வது
அன்பிலும் அருளிலும்
கடமையும் உரிமையும்
கலந்துறவாடிடும்
இயற்கைசார் சமநிலை!

நாட்டிலும் நகரிலும்
சமநிலை வேண்டுமோ?
ஆண்டார் ஒருபுறம்
அடங்குவோர் மறுபுறம்

குடிமக்கள் நிலையில்
குறுகிய நோக்குடன்
பேரினம் மாறாய்
சிறுபான்மை வேறாய்
பிரித்திடும் அரசில்
சமநிலை இல்லை
சட்டத்தின் முன்பும்
சமூகத்தின் உள்ளும்
மக்களைப் பிரிக்கும்
வேற்றுமை இல்லை

உரிமைகள் சலுகைகள்
சிறப்புகள் பொறுப்புக்கள்
இன, மத, பேதம்
இன்றியே எவர்க்கும்
சரி நிகர் போற்றும்
சம நிலை அமைதி!

மக்களின் சமூக
வாழ்வினில் என்றும்
மாண்புயர் நீதியை
வகுத்திடும் அமைதி!

அநீதிகள் நடுவில்
அழிவதும் அமைதி!
அமைதியை இழந்து
அலைந்திடும் மக்கள்
நீதியைப் பகிர்கின்
முன்னிலை பெறுவர்!

அமைதியின் ஆற்றலில்
அனைத்துமே அடங்கும்
அதன் வழிச் சிரிப்பிலும்
ஒளியிலும் அழகிலும்
விதிமுறை தவறாது
இறைவனே இருப்பான்!

**என். எம். எஸ்**

# சூறாவளியாகும் சூழல் பிரச்சனை

ஆர்.எல். றொபின்சன்.

புவிச் சூழல் என்பது பூமியில் காணப்படும் உயிருள்ள, உயிரற்ற பொருள்கள் அனைத்தின் இருப்பு ஆகும். அதாவது நீர், நிலம், வளி மற்றும் இவைகளில் காணப்படும் உயிருள்ள, உயிரற்ற அனைத்தின் உள்ளடக்கமாகும்.

இந்தப் புவிச்சூழல் பல்வேறு காரணிகளால் மாசடைகிறது. இயற்கையான சூழல் மாசடைதல், செயற்கையான சூழல் மாசடைதல் என இருவகையில் சூழல் மாசடைதல் நிகழ்கின்றது.

கடல் அரிப்பு, எரிமலை குழம்பைக்கக்குதல், பாரிய காட்டுத் தீ என்பன இயற்கையாக ஏற்படும் சூழல் மாசடைதலாகும். ஆனால் சூழல் மாசடைவதற்கு முதன்மைக்காரணியாக இருப்பது மனிதனே.

பிரபஞ்சம் என்ற அழகிய பெண்ணின், பூமி என்ற கருப்பையில் கருவாகி உருவான உயிரினங்களில், மனிதனே முதன்மையானவன். உழைப்பவன், உற்பத்தி செய்பவன், சிந்திப்பவன். இயற்கையில் இயற்கையோடு இயைந்தவாழ்வை நடத்திய ஆதிகால மனிதர்கள், காலநகர்வில் பல பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

அதிகரிக்கும் சனத்தொகை, உணவுத்தேவை, குடியேற்றத்திற்கான பரந்த வதிவிடப் பிரச்சனை போன்றவைகளால் இயற்கைவளங்கள் மீது கட்டுப்பாடற்றதாக்குதலை ஆரம்பித்தனர்.

> நமது சமூக அமைப்பின் முதன்மையான தூண்டு கோல் இலாபத்தேட்டமே யாகும். இது நமது இயற்கைவளங்கள் களங்கப்படுத்தப்படுவதையும் கண்மூடித்தனமாகச் சூறையாடப்படுவதையும் அனுமதிக்கிறது.
>
> — கஸ்ஹால்

## காடு அழிப்பும், விளைவுகளும்.

நெருப்பின் உபயோகம் கண்டுபிடிக்கப்பட்டபின் மனிதகுலம் மாபெரும் மாற்றத்துள் பிரவேசித்தது. இது மனித குல வளர்ச்சிக்குத் தீவிர உந்து சக்தியை அளித்ததோடு, மனிதனைச் சுற்றியுள்ள இயற்கை வளங்களைக் காவுகொள்வதில் கொண்டுவந்து நிறுத்தியது.

நெருப்பைக் கொண்டு வாழ்வை வளப்படுத்தத் தொடங்கிய நமது மூதாதையர், அதை இயற்கைக் கெதிராகவே திருப்பவேண்டிய நிலைமைக்குத்தள்ளப்பட்டார்கள். வரட்சியான காலத்தில் வேட்டையை இலகுபடுத்த, காட்டின் பெரும் பகுதிகளுக்குத் தீவைத்துப் பெரும் காட்டுத்தீயை உண்டாக்கினர். விரைவாக ஓடி, தாக்குதலிருந்து தப்பிக்கத் தெரியாத பெரிய பிராணிகள், இத்தகைய வேட்டைக்கு முதல் பலியாகின. அவை இறைச்சி உண்ணும் மற்றவிலங்குகளுக்கு அஞ்சவில்லை. ஆனால் இயற்கை நிகழ்வு ஒன்றின் முன்னே தோற்றுப்பின்வாங்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு, முதலில் மனிதனுக்குப் பலியாகின.

என்றாலும், ஆதிகால மனிதர்கள் சில விலங்குகளை வளர்ப்பதற்காகவும் நெருப்பைப் பயன்படுத்தத் தொடங்கினர். வட அமெரிக்க சிவப்பு இந்தியர்கள், காட்டு எருமைகளின் மேய்ச்சல் நிலங்களை விரிவுப்படுத்தி, அதன் மூலம் அவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, வேண்டுமென்றே காடுகளுக்கு நெருப்பு வைத்தனர். சிவப்பு இந்தியர்கள் காட்டு எருமைகளுக்குத் தேவையான, புதிய மேய்ச்சல் நிலங்களை உண்டாக்கினார்களே தவிர, அவற்றின் பராமரிப்பை இயற்கையிடமே விட்டுவிட்டனர்.

இடப்பெயர்ச்சி காரணமாக, வளர்க்கக் கூடிய காட்டு மந்தைகளுக்காக, தொடர்ச்சியாக காடுகளை அழித்துப் புல்வெளிகளை உருவாக்கத் தொடங்கினர். கால்நடைப்பராமரிப்பாளர் தமது பிராணிகளின் பெயரால், காடுகள் மேல் படைஎடுக்கவும், திறந்த வெளிகளை அடிப்படையாக மாற்றவும் செய்தனர். இதன் காரணமாக மிகையான மேய்ச்சலும், அதன் விளைவாக மண்ணரிப்பும் தோன்றின. செழிப்பான

நிலங்களின் மேல், மண் அரிப்பின் நாசகாரத்தாக்குதல் அந்தக்காலத்தில் தான் தோன்றத்தொடங்கியது என்று கருதப்படுகிறது,

கால்நடை எண்ணிக்கை ஒரு மனிதனுடைய செல்வாக்கிற்கு அடையாளமாகக் கருதப்பட்டதால், அந்தச் "செல்வாக்கை" அதிகரித்துக் கொள்ளும் ஆசைதோன்றியது. இந்தச் செயல்களின் விளைவுகளை மனிதன் பல்லாண்டுகள் சென்றபின்பே உணர்ந்தான்.

சேனைப்பயிர்ச்செய்கைக்காகவும் காலங்காலமாகக் காடுகள் அழிக்கப்படுவதால் மண்ணரிப்பு அதிகரித்தது. ஆனால் காடுகளை மறு உற்பத்தி செய்யும் அரசாங்கத்தின் முயற்சிகள்கூடப் போதுமானதாக இல்லை. பதிலாக வர்த்தக ரீதியான மரங்களே வளர்க்கப்படுகின்றன. பொதுத்தேவைக்கான மரங்கள் வளர்க்கப்படுவதில்லை.

இந்தக்காடுஅழித்தலினால் மழைவீழ்ச்சி குறைவடைகிறது. தாவரங்கள் கரியமில வாயுவை உட்கொண்டு, மனித உயிர் வாழ்த லுக்கான, பிராணவாயுவை வெளி விடுகின்றன. காடுகள் அழிக்கப்படுவதால் கரியமில வாயுச்செறிவு அதிகரிக்கிறது. மழைநீர் பூமியுள் தேங்கிநிற்க மரங்களின் வேர்கள் பெரிதும் உதவுகின்றன. காடுகள் அழிக்கப் படுவதால் பூமிக்குள் தண்ணீர்தேங்கிநிற்க வழியின்றி அடித்துச் செல்லப்படுவதால், மண்வளம் அரித்துச் செல்லப் படுகின்றது. ஓரிடத்தின் மண்செழுமை அற்றுப்போகிறது.

## தொழிற்சாலைகளும் அதன்கழிவுகளும்

எந்தப் பொருள் எரிந்தாலும் புகை வருகிறது. இதற்குக் காரணம் காபன். சூரிய நெருப்பில் புகை இல்லாததற்குக் காரணம் காபன் இல்லாததே. தொழிற்சாலைப் புகைகள், நாம் வெளிவிடும் கரியமிலவாயு போற்றவற்றிலும் காபன் இருக்கிறது. விலங்குகள், வயல்வெளிகள், கழிவுகள் மற்றும் குப்பைகூழங்கள், அனைத்திலும் கரியமிலவாயு நிறைந்துள்ளது. ஆனால் தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்கள் போன்றவற்றிலிருந்து வெளியேறும் கரியமிலவாயுக்கள், காற்றுமண்டலத்தைக் கடந்து, அண்ட த்திற்குள் நுழைந்து விடுவதில்லை. பதிலாக அவை அயனாக்க மண்டலத்தை அடுத்து, புவியைச் சுற்றி ஒரு குடைபோலச் சூழ்ந்து நிலை கொள்கின்றன. இதற்குப் பசுமை இல்ல விளைவு (Green House Effect) என்று பெயர். இந்த நிகழ்வுப் போக்குகள் பூமியில் வெப்பத்தை அதிகரிக்கச் செய்கிறது.

வெப்பத்தின் இந்த அளவற்ற அதிகரிப்பு தட்பவெட்பநிலையை மோசமாகப் பாதிக்கிறது. இதன் காரணமாகக் கோடைகாலம் நீண்டு போவதும், மழைவரத் தாமதமாவதும் காலநிலையில் திடீர்மாற்றம் ஏற்பட்டு வரட்சி, நிலச்சரிவு, கடுங்குளிர் என்று இயற்கையில் பல அனர்த்தங்கள் தோன்ற வாய்ப்பளிக்கிறது. இந்த வெப்ப அதிகரிப்பால் துருவப்பனிப்பாறைகள் உருகிக் கடலின் நீர்மட்டம் அதிகரிக்கும். இதனால் பல நாடுகள் நீருள் முழ்கும் அபாயம் ஏற்பட வாய்ப்புண்டு.

## இரசாயனத்தொழிற்சாலைகளும், விளைவுகளும்

இரசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் அனல்மின் நிலையங்களிலிருந்து வெளியேறும் புகையினுள் கந்தகம் ரொக்சைட்டு, நைதரசன் ஒக்சைட்டு வாயுக்கள் உள்ளதனால், இவைமுகிலுடன் கலந்து அமிலமழையாகப் பெய்கிறது. இதனால் காடுகள், நீர் நிலைகள் என்பனவற்றிலுள்ள தாவரங்களும், மீன் வகைகளும் அழிவடையும். அத்துடன் சரித்திரப்புகழ் பெற்ற கட்டடங்களும், சிலைகளும் பாதிக்கப்படும். இரசாயனத் தொழிற்சாலைகளிலிருந்து நச்சு இரசாயன வாயுக்கள் வழிமண்டலத்தில் கலப்பதால் பல்வேறு நோய்களுக்கு மனிதகுலம் உள்ளாகி இறக்கநேரிடும்.

> " மனிதர்களுக்கு ஏற்படும் தீய விளைவுகளைக் கருதாமல், அதிகபட்சம் சொந்த இலாபங்களையே தமது கொள்கையாகக் கொண்ட ஒருவர்க்கத்தின் ஆதிக்கத்தினுள், காலங்கடந்த ஒரு சமூக மற்றும் பொருளாதார அமைப்பின் எல்லைக்குள், நாம் சூழலைப்பற்றிய பிரச்சனையைப் பரிசீலனை செய்கிறோம்"
>
> கஸ்ஹால்

1984 இல் இந்தியாவில் போபாலில் யூனியன் கராபைப் தொழிற்சாலையில் ஏற்பட்ட வாயுக்கழிவு காரணமாக நாலாயிரம் பேர் இறந்ததோடு, இலட்சக்கணக்கான மக்கள் நோயினால் பாதிக்கப்பட்டனர். ஈராக், குவைத் யுத்தத்தின் போது எண்ணெய் வயல்கள் எரிந்தன. புகைமுகில்கள் வானை நிறைத்தன. எண்ணெய் கடலுள் கலந்தது. இது சூழலை மிகவும் பாதிப்படையச்செய்கிறது.

இன்று, உலகம் முழுவதும் என்றுமே இல்லாத அளவிற்கு விவசாய உற்பத்தி அதிகரித்திருக்கிறது. இயற்கை உரத்திற்குப்பதிலாக செயற்கை உரம் மட்டுமீறிய பாவனையில் உள்ளது. இரசாயன

உரவகைகள், தாவரப்பூச்சிக் கொல்லிகள் களைகொல்லிகள், இரசாயன மருந்துக்களின் பயன்பாடுகள் மனிதனுக்கு நன்மைதரும் பல்வேறு பூச்சி வகைகள், பறவை இனங்களை அழிக்கின்றன. மண்வளம் பாதிக்கப்படுகிறது. இதனால் தொடர்ந்தும் பயிர்செய்ய முடியாத நிலைமை ஏற்படுகிறது.

இரசாயனத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், ஆறுகள், கடல்களில் கலப்பதால் நீர் வாழ் உயிரினங்கள் அழிகின்றன. 1950 — 60களில் ஜப்பானில் மினோமற்றா குடாவில் பிடிக்கப்பட்ட மீன்களைச் சாப்பிட்டவர்களில் நானூறுபேர் இறந்தனர். பலருக்குப் பார்வைக் கோளாறு, நரம்பு நோய்கள், பாரிசவாதம், சுவாசக்கோளாறு என்பன ஏற்பட்டன. மேலும் இத்தகைய ஆற்றுநீர், குடிக்கவோ, விவசாயத்திற்கோ பயனற்றுப் போய்விடுகிறது. மாசடைந்த நீரை அருந்துவதால் வருடாந்தம் மில்லியன் கணக்கான மக்கள் இறக்கின்றனர்.

குளிரூட்டப்படும் சாதனங்களில் பயன்படுத்தப்படும் குளோரோபுளோரா காபன் சேர்வைகள் வளிமண்டலத்திலுள்ள ஓசோன் படலத்தைப் பாதிக்கிறது. ஓசோன் வாயுப்படலம் சூரியனிலிருந்து வெளிவரும் ஊதாக்கதிர்களை அழிக்கும் தன்மையுடையது. ஓசோன் படலம் பாதிக்கப்பட்டு, அதில் ஓட்டை விழுவதால், சூரியனின் ஊதாக்கதிர்கள் பூமியில் புகுந்து உயிரினங்களைப்பாதிக்கிறது. உயிரினங்களுக்குப் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உருவாகிறது.

டீ.டீ ரியின் பாவனையால் பல்வேறு தாவரங்களும் விலங்குகளும் பாதிக்கப்படுகின்றன. மேலும் விலங்குகளின் பரம்பரை இயல்புகளில் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. பறவைகள் மெல்லிய ஓடுகளைக் கொண்ட முட்டைகளை இடுகின்றன. இந்த முட்டைகள் அடைகாக்கப்பட்டபோது குஞ்சு பொரிக்கவில்லை.


## திண்மக்கழிவுகளும் விளைவுகளும்

திண்மக்கழிவுகள், உக்கக்கூடியவை, உக்காதவை என்று இருவகைப்படும். உணவுக்கழிவுகள், கடதாசி மரத்தூள் போன்றவை உக்கக்கூடியவை. நோய்க்கிருமிகளின் பிரம்பலுக்கு இவை காரணமாகின்றன. பீ.வீ.சி. நைலோன், பொலித்தீன், செயற்கைப்பட்டு போன்ற கழிவுகள் உக்காதவை. இவைகளின் தேக்கம் நுளம்பு, போன்றவை உற்பத்தியாகக் காரணமாகின்றன. டெங்கு, மலேரியா போன்ற அபாயகரமான நோய்ப்பரம்பலுக்கு இவையும் காரணமாகின்றன. திண்மக்கழிவுகளிலிருந்து புறப்படும் துர்நாற்றம் சுவாசத்தைப் பாதிக்கிறது. காற்றின் மூலம் பரவும் நோய்களுக்கும் காரணமாகின்றன.

அணு உலைக் கசிவுகள் அபாயகரமான கதிர்வீச்சுகளைக் கொண்டுள்ளன. அனைத்து உயிரினங்களிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இத்தகைய கதிர்வீச்சுக்கு உள்ளான உணவுப் பொருள்களை உண்பதாலும் உயிராபத்து நோய் என்பன ஏற்படுகின்றன.

1986 உக்ரேன் நாட்டின் செர்னோவில் அணு உலை வெடிப்பின் காரணமாக ஏற்பட்ட கதிர்வீச்சினால் பலர் இறந்தனர். ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டனர். அயல் நாட்டிலுள்ள தாவரங்களும், விலங்குகளும் பாதிக்கப்பட்டன. இதனால் அப்பகுதிகளில் உற்பத்திசெய்யப்பட்ட பால், இறைச்சி என்பனவற்றின் இறக்குமதியைப் பல நாடுகள் தடைசெய்தன.

மலக்கழிவுகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்த வல்லன. பெரிய நகரங்களில் மலக்கழிவு சுற்றுச்சூழலைப் பாதிக்கிறது. மலக்கழிவுகள் சில பகுதிகளில் புதைக்கப்படுகின்றன. சில இடங்களில் கடல் நீருடன் கலக்க விடப்படுகிறது. மலக்கழிவும் நோய்க்கிருமிகளை அதிகரித்து பல்வேறு நோய்களை ஏற்படுத்துகின்றது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி யாழ்ப்பாணப் பட்டினப்பகுதிகளில் உள்ள கிணறுகளில் மலக்கழிவுகள் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.



இயற்கை விதிகளை ஊறு செய்யாவகையில், உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டால் அன்றி, சூழல் மாசடைதல் பிரச்சனையைத் தீர்க்க மாற்றுவழி இல்லை. இயற்கையை நேசிப்பதென்பது மனிதத்தை நேசிப்பதாகும். சுயநலமும், இலாபமிட்டலும் அனுமதிக்கப்படும் ஒரு சமூக அமைப்புக்குள் இருந்து கொண்டு இந்தப் பிரச்சனையை இலகுவில் தீர்த்துவிடமுடியாது. இயற்கையை ஊறு படுத்துவது, தான் இருக்கும் மரக்கொப்பைத்தானே தறிக்கும் மடைமைக்கு ஒப்பானது..

இன்று அவசியப்படுவது சூழல் பற்றிய விழிப்புணர்ச்சியும் நடவடிக்கைகளுந்தான். சூழல் மாசடைதல் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இன்று பல்வேறு நாடுகளில், பல்வேறு மட்டங்களில்

நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டாலும், சூழலியல் பிரச்சனை ஓர் அச்சுறுத்தலாகவே இருக்கிறது. சூழலியல் பற்றிய ஒரு கலாகாரப்புரட்சியை இந்த உலகம் வேண்டி நிற்கிறது. ●



# கவிதைக் கொலுசு

நிலவுமுகமெடுத்து
உலவித்திரிந்தவளே!
வெண்மணல் பூத்த
மண்ணிலும் கூட
நின்று மணங்கமழும்
மல்லிகையே!
அலையை அணைத்து
இதழ்
சுவைக்க நினைத்தனரோ?
அஞ்சி அணையுமென்று
நெஞ்சம் துடித்தனரோ?

அடர்ந்தபோர்ப்புதருக்குள்
இடந்தெரியாமல் போன
அமைதித் தேவதையை



தேடிப்பிடிப்பதற்கு
பொங்குகடல் தாண்டி
இங்கு புகுந்து கொண்ட
ஆஞ்சனேயர்களின்
சேட்டை சரங்களால்
அஞ்சிமனமொடுங்கி
துஞ்சி நெட்டுயிர்த்த
இந்த மண் பேடுகள்
பட்ட துயரெண்ணி
நெஞ்சங் கொதித்தவளே
எப்படி
உனக்கு
இந்தந் துணிவு வந்தது?
நிலாவே,
இந்த மண் தெருக்களில்
உலாவந்த
உனது தரிசனத்தில்
மோகமுள்குத்தி
தாபமெடுத்த கவி ஒன்று
தாவிவந்துன்னை
தீண்டத்துணிந்தபோது
தீட்டுக்கட்டையாய்
உன்தளிக்கரம்
உன்மத்தக்கவியின்
கன்னத்தில் அறைந்தது.

அவமானப்பட்டகவி
திட்டியுனைத்தூஷணித்து
வேட்டுவைத்து
நெஞ்சு தணிந்தது.


வேட்டில் துடித்தாலும்
செத்துப்போகாமல்
தப்பிப்பிழைத்தவளே
உனது வீரம்
இந்த மண்ணின்
கூழாங்கற்களையும்
பட்டொளி வீசச்செய்யும்.
வரலாற்றுப் பக்கத்தில்
வரையப்படாத
இலைமறை காவியமே
இன்னெழில் ஓவியமே
உனது
பொற்பாதங்களுக்கு
எனது
இந்த
கவிதைக்கொலுசை
அணிந்து
நெஞ்சு நிறைகிறேன்.

தமிழினி

## சிறுகதை

# எச்சங்கள்

விசு.சுந்தரராஜன்



கொழும்பு கொட்டாஞ்சேனையில் வானுயர்ந்த கோபுரத்துடன் பரந்து கொலுவிருக்கும் புனித லூசியா தேவாலயத்தின் முன்படிக்கட்டுகளில் அமர்ந்து எதையோ ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தான் பிரகாஷ், அவனுக்கு நெருக்கமான ஒருவர் கூறியது அவன் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

"ஒரு மனிதனின் தன் மானம், ஒழுக்கம், மரியாதை, குண இயல்பு, ஆற்றல் இவைகளை அவனிட மிருந்து பறித்து, அவன் மனித இயல்பைச் சிதைத்துவிட வேண்டுமானால் முதலில் அவனை வேலையற்றவன் ஆக்கிவிட வேண்டும். அதற்குரிய சூழலை உருவாக்கிவிட வேண்டும். அதன்பிறகு அவன் வறுமையில் உழல்வான். தன் உயிர்வாழ்தலுக்காக எதையும் செய்யத் தொடங்குவான். களவு செய்யவும், பொய்சொல்லவும், கொலை செய்யவும், பிச்சை எடுக்கவும், அண்டிப் பிழைக்கவும், அடியாளாகச் செயல்படவும், கடத்தல் காரனாகவும், செயற்பட தயங்கமாட்டான். பெண்ணாக இருந்தால் சோரம்போகவும் துணிவாள். ஏற்கனவே, அவன்மேல் திணிக்கப் பட்டிருக்கும் நால் வர்ணதர்மம், காலம், விதி, கர்மவினை, கடவுள் சித்தம் போன்ற கோட்பாடுகளால் ஆள்கொள்ளப் பட்டிருக்கும் அவன், அநீதிகளைச் சகித்துக் கொள்ளவும், தான் செய்யும் தவறுகளுக்கு நியாயங்கள் கற்பித்துக் கொண்டும் இருப்பான் எந்த வகையிலேனும் மனிதனை மனிதன் சுரண்டிப்பிழைக்கும் காலாவதியா கிப்போன ஒரு சமுதாய அமைப்பி ற்குள், எப்படியோ தன்னைத்தக்க வைத்துக்கொள்வான்"

* * * *

இந்த உபதேசத்தை ஆத்மார்த்தமாய் உள்வாங்கிய படி, பிரகாஷ், அந்தத் தேவாலயவளாகத்தைச் சுற்றிப்பார்க்கிறான்.

தேவாலயத்தின் முன்பக்க வலது மூலையில், குகை போன்ற அமைப்பில் ஒரு "கெபி" மேரிமாதாவின் உருவச் சிலையைச்சுமந்தபடி நிற்கிறது. குகையின் முன்னால் ஒரு சதுரப்பீடம் அமைந்துள்ளது. அதற்குமுன்னால் ஐந்து படிக்கட்டுக்கள். அதன் மூலையில் உயர்ந்து பச்சை இலைகளுடன் குடைபோல்கிளைகள் பரப்பி, மஞ்சள் பூக்கொத்துக்களாய் சிரித்து நிற்கும் ஒருவகை வாகை மரம். தேவாலயத்தின் இடது பக்கத்திலும் பச்சை இலைகள் மதாளித்து நிற்கும் சில மரங்களும், தேவாலயத்தின்முன் எல்லைக்காவல் போல் உயர்ந்து, பருத்து நிற்கும் சில பாம் மரங்களும் உள்ளன.

வாகை மரத்தையும், கெபியையும் ஒட்டினாற்போல் மதிலோடு, உயர்ந்து நிற்கும் கன்னியர்மடம். வாகை மரத்திருந்து சொரிந்த மஞ்சள் பூக்கள் மரத்தின் கீழ் அரைவட்டத்தில் சுற்றிக் கோலம் போட்டிருந்தது. மேரிமாதாவை பூக்களால் தூவி வாழ்த்துவது போல, பீடத்திலும் படிக்கட்டுக்களிலும் மஞ்சள்

பூக்கள் சொரிந்துகிடக்கும் அழகு நெஞ்சை அள்ளும். அந்தப்பூக்களி லிருந்து வீசும் ஒருவித மருத்துவ வாசம் மனதிற்கு இதமாக இருக்கும்.

இரவில், மஞ்சள் ஒளிபொழியும் மின்விளக்குகளால் அழகைச் சுமந்திருக்கும் அந்தத்தேவாலய முன்றலில், காற்று வந்து விளையாடித் தழுவிச்செல்லும் சுகத்தை அனுபவிக்கப் பலர் குடும்பசகிதம் வந்திருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் ரசித்தபடி பிரகாஷ், நேற்று முன்தினம் அதே படிப்பக்கட்டுக்களிலிருந்து தனது நண்பர்கள் பேச்சுவாக்கில் பிச்சைக்காரர் களைப்பற்றித் தர்க்கித்துக் கொண்டதை நினைத்துப்பார்க்கிறான்.

* * * *

" பிச்சைக்காரர் நாட்டின் தொல்லை"

"சோம்பேறி நாய்கள். வேலை செய்யக்கள்ளம். பிச்சை எடுக்கிதுகள்"

"இதுகளுக்கு ஒரு செப்புச்சல்லி கூட குடுக்கக் கூடாது. குடுக்கிற ஆக்கள் இருக்கிறதாலதான் பிச்சை எடுக்குதுகள்"

" பொய், களவு, பிச்சை என்று வங்கியிலும் காசு போட்டு வச்சிருக்கிறாங்கள்"

" இதெல்லாம் அவனவன் கர்மவினை. எது நடக்கவேணுமோ, அது நடக்கிது."

" உன்ர கருத்தை ஏற்கேலாது. பிச்சைக்காரரை வேலைக்கு வரச்சொல்லிக்கேள், வருகிதுகளோ பாப்பம்? வரமாட்டுதுகள். பிச்சை எடுக்கிறது ஒரு சுகமான இலாபந்தரும் தொழில். அதுதான் பிச்சை எடுக்கிதுகள்"

"எடுக்கிறது பிச்சை. கலியாணம் குடும்பம், பிள்ளைப்பெறு, இதுகளுக்கும் குறைச்சல் இல்லை,"

இந்த வார்த்தைகளைக்கேட்டுப் பிரகாசைத் தவிர அவனுடைய மற்ற நண்பர்கள் நக்கலாகச் சிரித்தார்கள். இதுவரை இவற்றையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த பிரகாஷ் நெஞ்சம் கனன்று பேசத்தொடங்கினான்.

"உங்கட பேச்சு அறிவார்த்தமாயில்லை. காரணத்தைக் கண்டு கொள்ளாமல் நிகழ்வுகளை மட்டும் பாக்கிறியள். அதனால பிச்சைக்காரரை இழிவுபடித்திபேசிறியள்."

பிரகாசை இடைமறித்து ஒருவன் கேட்டான்.

" என்ன பெரிய வாகடவாணன் மாதிரி விளாசுறா? நாங்கள் பேசியதில என்ன தவறு? சொல்லு"

"எங்கட பழந்தமிழ் இலக்கியங்களில், குறுஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, எண்டு திணைகள் ஐந்து வகைகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிது. அதில் வாழிற மக்களின் தொழில் பழக்க வழக்கம் நம்பிக்கை இவைகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கு"

இன்னொருவன் தீடீரென்று குறுக்கிட்டு கேட்டான்.

"அது சரி, நீ இப்ப என்ன சொல்லவாறா? பிச்சைக்காரருக்கும், நீ சொல்லுறதுக்கும் என்ன சம்பந்தம்"

" இதில பாலையில வாழிற மக்களுடைய தொழில் கொள்ளையடித்தல் எண்டு சொல்லப்பட்டிருக்கு. பாலைவழியாகச் செல்லும் வழிப்போக்கர்களை, வியாபாரங்களைக் கொன்று கொள்ளை அடிக்கிறதுதான் அவர்கள் பிரதான தொழில். அது அந்தப் பாலை வாழ் மக்களுடைய வாழ்க்கை நெறிதான். அதைப் பிழை எண்டு சொல்லமுடியுமா? மனிதர் என்ன தான் சூழலை வெற்றி கொள்ளப்பார்த்தாலும். சூழலின் கைதிகளாகவே இருக்கிறார்கள். வேற தொழில் இல்லாத காரணத்தினால் அல்லது அந்தச் சூழலில் பிழைப்புக்கான ஆதாரங்கள் அருகிப்போனதால, பாலை வாழ் மக்கள் கொள்ளையடிக்கினம், கொலை செய்யினம். அவர்களைப் பொறுத்த வரையில, அதுதான் தர்மம். அதுசரி எண்டுதான் செய்யினம். நாங்கள் அதைத்தவறெண்டு சொல்ல முடியுமா?"

மற்றொருவன் கிண்டலாகக் கேட்டான்.

" அது சரி, பிச்சைக்காரருக்கும் பாலை வாழ் மக்களுக்கும் என்ன சம்பந்தம்? மொட்டத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடிறியா?"

" இது மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் போடிற முடிச்சில்ல. ஒரு தாய்க்கும், அந்தத் தாயின் தொப்பூள் கொடியை அறுத்துக் கொண்டு பிறந்த பிள்ளைக்கும் உள்ள பந்தம். சமுதாயம் பிச்சைக்காரர்களை உருவாக்கிறது. பிச்சைக்காரர்கள் பிச்சை எடுக்கிறார்கள். இது யாருடைய குற்றம்? பிச்சைக்காரர்களை உருவாக்கிய சமுதாயத்தின் குற்றமா? அல்லது பிச்சை எடுப்பவர்களுடைய குற்றமா? சொல்லு."

பிரகாசின் இந்தக் கனமான கேள்விகளை சகித்துக் கொள்ள முடியாத ஒருவன் சொன்னான்.

"டே பிரகாஷ், இதனாலதானே உன்னை எல்லாரும் "விதண்டாவாதி" எண்டு சொல்லினம், நாங்கள் பிச்சைக்காரரைப்பற்றிப் பேச, நீ எதை எதையெல்லாமோ அலட்டிறா?"

* * * *

விதண்டாவாதி, என்று நண்பன் சூடாகச் சொன்னதை நினைத்துப் பிரகாஷ் தனனுக்குள் சிரித்துக் கொண்டான். கோவிலின் முன்றலில் காற்றுவாங்கப் பெற்றோர்களுடன் வந்த சின்னஞ்சிறார்கள் ஓடிவிளையாடிக் கூச்சல் போட்டுக் கொண்டிருப்பதை இரசித்துக் கொண்டிருந்த பிரகாஷின் மனத்திரையில் மீண்டும் ஒரு முன்நிகழ்வு நகர்வு.

* * * *

சென்றவாரம், தனது நண்பன் ஒருவனுடன் அவனுடைய உறவினரான ஒரு சட்டத்தரணியை பார்ப்பதற்கு பிரகாஷ் துணைப் போயிருந்தான். சுமாரான உயரமும் வழுக்கைதலையும், கறுப்பு நிற முடைய அந்தச் சட்டத்தரணி, அந்த அந்திசாய்ந்த பொழுதில் சிறிது மது அருந்திய தெம்பில் உசாராக இருந்ததைப் பிரகாஷ் அவதானித்தான். அவனுடைய நண்பனும் அந்தச் சட்டத்தரணியும் தங்களுடைய குடும்ப விவகாரங்களைப் பேசிக் கொண்டிருந்த வாக்கில், பிச்சைக்காரர்களைப்பற்றி பேச்சும் வந்தது. அப்போது அந்தச் சட்டத்தரணி உணர்ச்சி வசப்பட்ட வராகப் பேசத் தொடங்கினார். "தம்பி, நீண்ட காலமாக என்ர நெஞ்சைக் குடைச்சு கொண்டிருக்கிற கேள்விகளுக்கு விடைதெரியாமல் தவிக்கிறன். எங்களைப்போல மனிசர் சிலர், தெருத்தெருவாய், வீடுவீடாய்த் திரிஞ்சு, கெஞ்சி மன்றாடிப் பிச்சை எடுத்துச்சீவிக்கிதுகள். இதுகள் என்ன பாவம் செய்ததுகள்? கருணையுள்ள கடவுளின் படைப்பில், இப்படிச்சிலர் ஈனப்பிறவிகளாக இழிவுற்று வாழிறது நியாயமோ? இது கடவுளுக்குச் சித்தமோ? நான் இப்ப இதைப்பற்றி அடிக்கடி நினைச்சு வேதனைப் படுகிறன். சொன்னால் நம்பமாட்டாய் தம்பி, நான் இப்ப பிச்சைக்காரருக்காகக் கடவுளை மன்றாடிறன்."

சட்டத்தரணி தனது இருகைகளாலும் தலையைப் பிடித்தப்படி குனிந்தவாறு மௌனமாக இருந்தார். பிரகாஷ் இதை எதிர்பார்க்கவில்லை. 'ஒரு சட்டத்தரணியா இப்படிக் குமுறுகிறார்,' என்று வியந்து போனான். அவர் பிரிவினைத் திருச்சபையைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவர் என்று பிரகாஷ் அறிந்திருந்தான். "இப்படியும் சில மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்" என்று பிரகாஷ் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான்.

** **

இவற்றையெல்லாம் அந்தத் தேவாலயத்தின் படிக்கட்டுக்களிலிருந்து மீட்டு நெட்டுயிர்த்த பிரகாஷ், தனது வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு உண்மை நிகழ்வை மீட்டுப்பார்க்கிறான். அதைச் சொல்ல வேண்டும் என்று விரும்புகின்றான். அமைதியாகக் கேளுங்கள்.

"அது ஒரு செவ்வாய்க்கிழமை. நேரம் மதியத்தைத் தாண்டியிருந்தது. காற்றும் அடங்கிப்போயிருந்தது. உடலை முறுக்கி வியர்வை பிழியும் வெய்யில். கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் கோவிலின் முன்பாக உள்ள சாலையில் எதிரும் புதிருமாக, சூழலை மாசுபடுத்தியபடி வாகனங்கள் போய்க்கொண்டிருந்தன. விளம்பரப் பலகைகளைச் சுமந்து கொண்டு கடைகள் திறந்திருந்தன. கோவிலின் நேராக நிமிர்ந்து செல்லும் ஜம்பெற்றா வீதியின் இரு மருங்குகளிலும் கடைகள் திறந்திருந்தன. மதியத்தைத் தாண்டிவிட்டதால் சன நடமாட்டம் சற்றுக் குறைந்திருந்தது.

நான் ஒரு புத்தகசாலையில், ராகுலசாங் கிருத்தியாயனின் "சிந்துமுதல் கங்கைவரை" என்ற புத்தகத்தை வாங்கிக் கொண்டு பெற்றா வீதியில் நடந்து வந்து அந்தோனியார் கோவிலின் இடப்பக்கத்தில் உள்ள ஜம்பெற்றா வீதியின் இடது மூலையிலுள்ள கடை ஒன்றின் முன்னால் ஓய்வுக்காக நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது தான் என் நெஞ்சை நெருடிய அந்தச்சம்பவம் நிகழ்ந்தது.

திடீரென்று ஜம்பெற்றா வீதியின் வலது புறமாக, கோவிலை நோக்கி ஒரு ஓட்டோ வண்டி சுமாரான வேகத்தில் வந்து கொண்டிருந்தது. அந்த வண்டியை எப்படியோ இனங்கண்டு கொண்ட பிச்சைக்காரன் ஒருவன், எனது பக்கத்திலுள்ள வீதிக்கரையில் நின்று பாய்ந்து சென்று, ஓடிக்கொண்டிருக்கும் அந்த ஓட்டோவின் கம்பியை பிடித்து அதனுடன் ஓடிக்கொண்டிருந்தான், ஓட்டோவின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத அவன் திடீரென்று விழுந்தான். ஆனால் ஓட்டோவின் கம்பியை மட்டும் பிடித்த கை விடவில்லை. தலை மேலே தொங்க இழுபட்டுக் கொண்டிருந்தான். இதைப் பார்த்துக் கொண்டு நின்ற சில கடைக்காரர்கள் அவலமாகக் கத்தினார்கள். ஓட்டோ தனது வேகத்தைச் சற்றுக் குறைத்துக் கொள்ளவும், அவன் ஓட்டோவின் கம்பிப் பிடியை விடவும் சரியாக இருந்தது. ஓட்டோ, பெற்றா சாலையின் மூலையில் திரும்பி ஒரு பூக்கடைக்கு முன்னால் நின்றது.

ஓட்டோ நின்றதுதான் தாமதம், கோவிலின் முன்பாகவும், மதிலை அண்டியும் நின்ற பிச்சைக்காரர்கள் சிலர், வாகனங்களையும் பொருட் படுத்தாமல் மின்னல் வேகத்தில் பாய்ந்து சென்று, அந்த ஓட்டோவை மொய்த்துக் கொண்டு, கைகளை உள்ளே நீட்டி, முண்டியடித்துக் கொண்டு சோற்றுச் சரைகளை எடுத்துக் கொண்டிருந்தார்கள். வீசி எறியப்படும் உணவுப் பொருள்களைக் கொத்திச் செல்ல, காகக்கூட்டம் அடிபடுவதுபோல அந்தக்காட்சி இருந்தது.

ஒரு சில மணித்துளிகளுக்குள் அந்த நிகழ்வு நடந்து முடிந்தது. ஓட்டோவிற்குள் இருந்த சோற்றுசரைகள் காலியானதும் அதற்குள் இருந்த ஒரு நடுத்தரவயது

மாது, ஓட்டோவிற்கு வெளியே தலையை நீட்டி, கோவிலின் முகப்பிலுள்ள அந்தோனியார் சுருவத்திற்கு ஒரு "ப்பிளையிங்கிஸ்" கொடுத்ததும், ஓட்டோ வேகமாகப் புறப்பட்டுப்போனது.

விழுந்து, இழுபட்டு, உரசல்காயங் களுடன் எழுந்த பிச்சைக்காரன், திட்டித்தூஷணித்துக்கொண்டு அந்தப் பூக்கடையை நோக்கி தாண்டித் தாண்டி நடந்தான். ஒருவேளை உணவுக்காக அவன் நடத்திய ஜீவமரணப் போராட்டமும் கருச்சிதை வாகிப்போனதால், நெஞ்சு நொந்து அவன் திட்டிக்கொண்டு நின்றான்.

நல்லவர்கள், கெட்டவர்களை அவர்களது செயலால் அறிவது போல், ஒரு சமுதாயம் நீதியானதா அநீதியானதா என்பதை, அந்தச் சமுகத்தில் வாழும் பல்வேறு மனிதக் குழுமங்களாகிய எச்சங்களைக் கொண்டுதான் அறிய முடியும். அந்த எச்சங்களுள் ஒன்றாகத்தான் பிச்சைக்காரரையும் கருத வேண்டும். குற்றங்களைப் பிரசவிக்கும் காலாவதியான ஒரு சமுக அமைப்பிற்குள் இருந்து கொண்டு, தர்மம் நீதியென்று நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம்."

****

இரவு ஒன்பது மணிக்கு மேலாகிவிட்டது. பிரகாஷ் கோவில் முன்றிலை நோட்டம் விட்டான். குழுமி நின்றவர்களில் அனேகர் போய்விட்டார்கள். ஒரு சில இளசுகள் மட்டும் அங்கும் இங்குமாக, நின்று கொண்டிருந்தார்கள். வீடு செல்வதற்காக படிக்கட்டுக்களிலிருந்து எழுந்தான் பிரகாஷ்.

●



## மூலவேரைத் தேடல்

ஆணாதிக்கம், முதலாளியம்
ஆகியனகுறித்து நடத்தப்படும்
அருவமான தத்துவவாதங்கள்
காலத்தை வீணடிப்பவையே.
வரவிருக்கும் புரட்சியில் தமது
பங்குகுறித்தும், உலகத்தை
மாற்றும் முக்கிய பணியில்
தலையிடுவது குறித்தும்,
சிந்தனை செய்யும்
கோழைத்தனமான அறிவு
ஜீவிகளுக்கு வேண்டுமானால்,
இவ்விவாதங்கள்
சரியாகத்தோன்றலாம். ஆனால்,
புரட்சிகரநடைமுறைக்கு
நம்மை இட்டுச்செல்லாத
புரட்சித் தத்துவங்கள்,
பயனற்றவைதான்
என்றபோதிலும்,
ஒடுக்குமுறைகளை நாம்
ஒழித்துக்கட்டவேண்டுமானால்,
ஒடுக்குமுறைக்கான
காரணங்களைத் தெளிவாக்கிக்
கொள்ள முயற்சிப்பது
அவசியமாகும்.

மார்க்சியம் — பெண்ணியம்.
உறவும் முரணும்

# அமைதியின் விரிப்பு

சுமந்து வருந்துபவர்கள்
விடியலைத்தேடி
விழிசிந்துகிறார்கள்.
அமைதி நிறை இல்லங்களில்
அச்சமற்ற குடிசைகளில்
ஆழ்ந்து துயில் கொள்ள
அங்கலாய்க்கிறார்கள்
கட்டுண்டவர்களாய்.

பேச்செல்லாம்
காய்ச்சிய பால்சுவை
செயலெல்லாம்
பாகற்காய்ச்சுவை
போலத்தான் சமாதானம்.

பால் கேட்டுப் பிள்ளை அழ
சூப்பியையா கொடுப்பார்?
யாரழுது அமைதிவரும்
பாரழுது கேட்கிறது.
நீதியின்றிப் பூமியிலே
அமைதியுண்டோ?
இம்மியளவேனுமிங்கே
நீதியுண்டோ?
மனக்கிடங்கில்
நீதி வெள்ளம் பாயவிடு
நிலம் தோய வேண்டும்.

நீதிக்குள் அமைதியுண்டு
நிம்மதியும் சகவாழ்வும்
நித்தியமும் உண்டு.

நீதிக்குள் மகிழ்ச்சியுண்டு
மன்னிக்கும் குணமுமுண்டு
நீதிக்குள் அன்பு உண்டு
நிலைத்திடும் அழகும் உண்டு
நெஞ்செல்லாம் நீதியினால்
நிறைகின்ற போது
பாரெல்லாம் சிரிக்கும்
அமைதியின் விரிப்பு.

வி. ஜெகநாதன்

# இலக்கியச் சிந்தனை


# ஒரு புள்ளியிலிருந்து...

"தாமபுத்திரனே, ராஜநீதியில் நிபுணனான எதிரியின் யோசனையை அறிந்தவன்தான் ஆபத்தைத்தாண்டுவான். உலோகத்தினால் செய்யப்படாத கூர்மையான ஆயுதமும் உண்டு. அதைத்தடுக்கும் உபாயத்தை எவன் அறிந்துகொள்கிறானோ, அவன் பகைவர்களால் கொல்லப்படமாட்டான். காடுகளை அழிப்பதும், குளிரைப் போக்குவதுமான ஒரு பொருள் (நெருப்பு) வளைக்குள் வாசம் செய்யும் எலியைத் தீண்டாது. முள்ளம்பன்றி பூமியைத்தோண்டிக் காட்டுத் தீயிலிருந்து தப்பி கொள்ளும். அறிவாளி நட்சத்திரங்களினால் திசையை அறிகிறான்.!"

— மகாபாரதம் —

பாண்டவர்களைக் கொன்றொழிக்கத், துரியோதனால் அஸ்தினாபுரத்தில் ஓர் அரக்கு மாளிகை கட்டப்பட்டது. அந்த அரக்குமாளிகை தீப்பிடித்ததும் விரைவில் எரிந்து சாம்பலாகிவிடும் தன்மையுடையது. அந்த அரக்கு மாளிகையில் குடியிருக்கப்போகும் பாண்டவர்கள் தப்பிப் பிழைப்பதற்காக, விதுரன் தர்மபுத்திரனுக்கு வேற்று மொழியில் சொன்ன எச்சரிக்கை இது.

பிறரால் துன்பத்திற்கோ, தொல்லைக்கோ, அச்சுறுத்தலுக்கோ உள்ளாகியிருக்கும் ஒரு இனமோ, சமூகமோ



விகர்னன்

அல்லது ஒரு தனிநபரோ இந்த எச்சரிக்கையைப் பரிசீலனை செய்யவேண்டும். சமுதாயத்தில் உயர்ந்த அதிகாரத்துவம் மிக்கவர்களால், அவர்களின் நலன்களுக்காக இது சொல்லப்பட்டபோதிலும், இதன் பயன்பாட்டை ஒடுக்கப்படும் ஒரு சமூகம் அல்லது ஒரு தனிநபர், இதை நடைமுறை வாழ்க்கையில் பிரயோகிக்கக் கற்றுக்கொள்வது அவசியம்.

மகாபாரதத்தில் வரும் ஏகலைவன் ஒரு சூத்திரன். வில்வித்தையில் வல்லவன். அதுவும் ஆயிரம் துளையிடும் அஸ்திரவித்தையில் வல்லவன். அவன் அஸ்திரவித்தையில் வல்லவன் மட்டுமல்ல, சிற்பக்கலையில் வல்லவனாகவும் இருந்தான். அதனால்தான் துரோணரால் தனக்கு கற்றுத்தர மறுக்கப்பட்ட அஸ்திரவித்தையைக் கற்பதற்கு, துரோணரைப் போன்ற சிலையை வடித்து, அதை தியானித்து வழிபட்டு, அந்ததியானவழிமுறைகளினால் துரோணரிடமிருந்து அவர் உதவியின்றியே அதைக்கற்றுக்கொண்டவன். துரோணரை மானசீகமான குருவாகக் கொண்டே, அவரிடமிருந்து அஸ்திரவித்தை யைக் கற்றானென்றால், அவன் ஆற்றலை அளவிட வேறு அளவுகோல் வேண்டியதில்லை.

ஒரு நாள் பாண்டவர்கள் காட்டுக்குள் வேட்டையாட வந்திருந்தார்கள். அர்ச்சனனுடைய நாய், ஏகலைவனின் காட்டுப்பகுதிக்குள் சென்று அங்குமிங்கும் உலவியது. இறுதியாக துரோணர் சிலை வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு வந்த அது, தற்செயலாய் துரோணர் சிலைக்கு மூத்திரம் பெய்தது. இதைக் கண்ட ஏகலைவன் மனஞ்சினந்து ஆயிரம் துளையிடும் அஸ்திரவித்தையை நாயின் மேல் பிரயோகித்தான். சல்லடைபோடப்பட்ட அந்த நாய், தள்ளாடிச் சென்று அர்ச்சுனனின் பாதத்தடியில் விழுந்து இறந்தது. பாண்டவர்கள் குறிப்பாக, அர்ச்சுனன் அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்தான். வில்வித்தையில் வல்லவன் என்று பார் போற்றும் தனக்குச் சவாலாக ஒருவன், தோன்றியிருப்பது அவனுக்கு சிம்ம சொப்பமாக இருந்தது.

இதில் இன்னும் ஒரு பெரிய சமாச்சாரம் இருக்கிறது. வில்வித்தையை, அதுவும் ஆற்றல் மிக்க அஸ்திரவித்தையை, சத்திரியர்கள் அன்றி வேறு எவரும், குறிப்பாக, சூத்திரர்கள் கற்கக்கூடாது என்பது அன்றைய தர்மம். கற்கக் கூடாது என்பது மட்டுமல்ல, அவர்களுக்கு வேறு எவரும் கற்பிக்கக் கூடாது. அவர்கள் வேதம் படிக்கக்கூடாது. வேதத்தைப் பிராமணர்கள் ஓதுவதைக்

காதால் கேட்கக்கூடாது. கேட்டால் அது தண்டனைக் குரியகுற்றம். இந்தத் தண்டனைக்குரிய குற்றத்தில் அஸ்திரவித்தை கற்றலும் அடங்கும்.

இவற்றை நெஞ்சில் சுமந்து கொண்டு, அர்ச்சுனன் துரோணரிடம் சென்றான். அவனுக்குத் துரோணர் மேலும் சந்தேகம் ஏற்பட்டது. நடந்தவற்றைத் துரோணரிடம் எடுத்துக் கூறி அவருடன் பிணக்குற்று நின்றான்.

சாதியதர்மம் என்பது இந்தியாவின் பரம்பரைச் சொத்து. அதற்குத் துரோணர் என்ன விதி விலக்கா? நிலமையை ஊகித்துக்கொண்ட துரோணர் ஒரு புன்னகை யோடு அர்ச்சுனனைப் பார்த்தார். அந்தப்பார்வையில் தான் எத்தனை அர்த்தங்கள். "இந்தப் பிரச்சனையை என்னுடன் விட்டுவிடு. நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று சொல்வது போலிருந்தது.

துரோணர் ஏகலைவனிடம் சென்றார். எசமானைக் கண்ட குட்டி நாய்போல, ஏகலைவன் துரோணரைக்கண்டு, பரவசம் கொண்டு, பரபரத்துத்துடித்து அவர்காலடிகளில் வீழ்ந்து வணங்கினான். ஏகலைவனின் மனநிலையைப் புரிந்து கொண்டு, அவனை மெச்சி, குருதட்சனை கேட்டார். "என் உயிரே வேண்டு மானாலும் தருவேன்" என்று ஏகலைவன் வாக்களித்தான். துரோணர் "உன் வலது கைப்பெருவிரலை எனக்குக் குருதட்சணையாகத் தரவேண்டும்" என்று கேட்டார். எந்தவித முன்யோசனையோ, அதிர்ச்சியோ, வருத்தமோ இன்றி, ஏகலைவன், தனது வலதுகைப் பெருவிரலை வெட்டித் துரோணரிடம் குரு தட்சணையாகக் கொடுத்தான். துரோணரின் விவேகம் வென்றது. ஏகலைவனின் மடைமை தோற்றது.

பாண்டவர்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடியதான ஓர் அபாயத்திலிருந்து அவர்களை மீட்ட மனநிறைவோடு துரோணர் ஏகலைவனிடமிருந்து விடை பெற்றார்.

குரு பக்தி என்பது ஆத்மார்த்தமான தாழ்மையும் நன்றியும் கலந்த ஒரு பண்பாட்டு உணர்ச்சி. அது அவசியந்தான். ஆனால் குருபக்திக்குள் தர்ம நியாயங்களை இனங்காண்பது தவிர்க்கப்பட்டுள்ளது. குருபக்தி யாருக்கு அனுகூலமாக இருக்கிறதோ அவர்கள் தர்மநியாயங்களைத் தவிர்த்து விட்டு குருபக்தியின் மேன்மைபற்றிச் சிலாகித்துப் பேசுகிறார்கள். மற்றவர்களை வசீகரித்து விடும்படியாக, அவர்களது புனை கதைகள், கருத்துக்கள் சுவைமிக்கதாக உள்ளன. இந்த இலக்கியச் சுவையுணர்ச்சி, அழகியல் கருத்தோவியங்களுக்கு முன்னால் நியாயங்கள் அடிபட்டுப் போய்விடுகின்றன. ஒரு புன்னகையிலிருந்து மலர்வது சமாதானம் மட்டுமல்ல, வன்முறையுந்தான். இதுதான் துரோணரின் அல்லது அதிகார வர்க்கத்தின் பண்பாடு. "பண்பாடென்பது உயர்ந்தோர் மாட்டு" என்பது இதற்கும் பொருந்தும்.

குருபக்தி என்ற உயிர்த்துடிப்புள்ள பண்பாட்டிற்குள், ஓர் அதிகாரவர்க்கத்தின் கபடத்தனம், காட்டுமிராண்டித்தனம் மிக இலகுவாக மறைக்கப்பட்டு விட்டது. குருபக்தி என்ற போர்வையால் துண்டிக்கப்பட்ட, ஏகலைவனின் வலது கைப்பெருவிரல் மூடப்பட்டுவிட்டது. அங்கே தெரிவது ஒரு வர்க்கத்திற்கு இளைக்கப்பட்ட துரோகத்தனம் அல்ல. பக்தியின் மணிமுடி. புத்திமான் பலவான் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

தேசபக்தி, இனப்பற்று, சமூகப்பற்று, மதப்பற்று, பிரதேசப்பற்று இவைகள் மனிதர்களுக்கு அவசியமானது. ஆனால் இவைகளின் பெயரால் தர்மநியாயங்களை எவ்வாறு ஒடுக்கமுடியும் என்பதற்கு 'குருபக்தி ஒரு நல்ல சான்றாகும். இது அதிகாரத்துவவர்க்கத்தின் தந்திரோபாயம்.' "அசுவத்தாமா இறந்தது மெய்யே, யானை" என்று, யானை என்ற சொல்லை மெல்ல உச்சரித்து தர்மபுத்திரன் பொய் சொல்லத் துணிந்தது, போர்க்களத்தில் வெற்றியை மனங்கொண்டுதான். இராட்சியத்தை, அரசை மீளப் பெறும் எண்ணத்தில் தான். பொல்லாமையை, பொய்மையை இல்லாதொழிக்க பொய்சொல்லலாம். புனைகதைகளை, வதந்திகளை, மீண்டும், மீண்டும், ஏகமனதாகக் கட்டவீழ்த்து விடலாம். தவறில்லை. இது தந்திரோபாயம். ஆனால், மெய்மையை, தர்மநியாயங்களை ஒழித்துக்கட்டவும் இந்தக் கைங்காரியங்களைச் செய்யலாம், செய்யப்படுகின்றது. இது...?

துரோணர் கேட்டகுரு தட்சனை ஒரு வஞ்சனைதான். இந்த வஞ்சனையே இன்றும் சிலாகித்துப் பேசப்படுகிறது. நடைமுறையில் வாய்ப்புப்பார்க்கப்படாத, தர்ம நியாயங்கள் அற்ற எந்தச் சித்தாந்தங்களும், சாஸ்திரங்களும், கருத்தியல்களும் — குருபக்தி குருதட்சணை என்ற வஞ்சனையைப் போன்றவைதான்.

"விதியை மதியால் வெல்லலாம்" என்பது விவேகமுள்ள ஒரு கடுமையான பிரயத்தனத்தின் மேல்வரிச் சட்டம்.

உண்மையான வாழ்க்கைப் போராட்டம் என்பது இதுதான். இதில் புத்தியுள்ளவர்கள், அவர்கள் நல்லவர்களோ, கெட்டவர்களோ வெற்றிபெறுகிறார்கள். **புத்தி, அறிவு, விவேகம், ஞானம் என்று ஒரு பொருள்படும் சொற்கள் உலோகத்தினால் செய்யப்படாத சக்திவாய்ந்த ஆயுதந்தான்.** இது சிந்தனையில் செயல்படுகிறது.

எதிரியைப் புரிந்து கொள்வதென்பது அவனுடைய ஒவ்வொரு அசைவையும் போக்கையும், நோக்கையும் இனங்காண்பதாகும். எதிரியின் பூடகமான திட்டங்களை ஆய்ந்தறிந்து கொள்ளும் விவேகமான நடைமுறைத்தந்திரோபாயமே, அவனிடமிருந்து தப்பித்துக் கொள்ளவும், அவனை முறியடிக்கவும் உதவுகிறது. எதிரியின் பலம், பலவீனம், காலம், இடம், பொருள் இவைகளைப் புரிந்து கொண்டு செயற்படும் திறன்வேண்டும்.

எதிரிகளிடமிருந்து தன்னைத்தற்காத்துக் கொள்வதற்காகப் பச்சோந்தி, இடத்திற்கேற்பத் தன்னுடைய

நிறத்தைமாற்றும் ஆற்றலைப் பிரயோகிக்கிறது. பருந்து போன்ற எதிரிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிடப் பச்சைச் செடிகளுக்குள் தன்நிறத் தையும் பச்சையாக மாற்றிக் கொள்கிறது. தேக பலத்தை விட விவேகபலம் இலக்கைச் சாத்திய மாக்கிறது. இலக்கைவிட்டு விலகாதி ருப்பது, இலக்கை அடை வதும் விவேகப் பலத்தினால் தான் சாத்தியமாகிறது. தேகபலம் அதற்கு உதவு கிறது. இது இலகுவானதல்ல. ஆனாலும் இதை லாவகமாக உபயோகிக்கும் திறன் வேண்டும். விவேகப் பலத்தை, எதிர்விவேகப் பலத்தால் வெற்றி கொள்ளுதல். இதுதான் அந்த உபாயம்.

ஒடுக்கப்படுபவர்களும், சுரண்டப்படுபவர்களும், அடிமைப் படுத்தப் படுபவர்களும் இதை உணர்ந்து செயல் படவேண்டும் அல்லது போகில் ஆதிக்க வர்க்கத்தின் பாரச்சுமையை, அடிமை நுகத்தடியை முறித்தெறிய முடியாது.

புத்திமான் பலவான்



# சமாதானத்தைச் சாத்தியமாக்க..

மீண்டும் சமாதானத்திற்கான குரல்கள் ஒலிக்கத்தொடங்கி விட்டன. நோய்க்கான காரணங்களை ஆராய்ந்து, அதைத்தீர்க்கும் மருந்தாகச் சமாதானச் செயற்பாடுகள் அமைய வேண்டும். வெறுமனே அதிகாரப்பகிர்வு மட்டும் உண்மையான சமாதானத்தை மலரச்செய்து விடாது. மனித உரிமைகள் மற்றும் சனநாயகம் போன்றவைகள் அனைவராலும் அனுபவிக்கப்படும் ஒரு நடைமுறை வேலைத்திட்டமாகவும் சமாதான முன்னெடுப்புக்கள் நகர்த்தப்படவேண்டும். மக்களின் நலன்களிலிருந்து, மக்களுக்காக, அவர்களின் விடிவுக்காகச் சமாதானச் செயற்பாடுகள் முதன்மை பெறவேண்டும்.

ஒரு முடிவிலிருந்து பிரச்சனைகளை ஆராயாமல், பிரச்சனைகளை திறந்த மனதுடன் ஆராய்ந்து, விட்டுக்கொடுக்க கூடியவைகளை விட்டுக் கொடுத்து, விட்டுக்கொடுக்க முடியாதவைகளின் நியாயப்பாடுகளை உணர்ந்து, உணர்த்தி ஒரு நியாயமான முடிவுக்கு வருவதுதான் சாலப் பொருத்தமானதாகும்.

சமாதானம் சமாதானமென்று மேலோட்டமாக மக்களின் இதுவரைகால ரணங்களை ஆற்றிவிட முடியாது. புண்ணுக்குப் புனுகுதடவுவதால் புண் ஆறிவிடப் போவதில்லை. கையிலுள்ள அதிகாரத்தை, பலத்தை – உரிமைகளை, சுதந்திரத்தை, சமாதானத்தை வென்றெடுப்பதற்காக – மூலோபாயம், தந்திரோபாயம் இவைகளைப் பிரயோகிக்க வேண்டும். அதற்கான மனப்பாங்கு சம்பந்தப்பட்டவர்களிடம் இருக்கவேண்டும்.

தேசியத்தனித்துவங்கள் அங்கீகரிக்கப்படவேண்டும். அந்தந்தத் தேசியங்களின் இருத்தல் தளங்கள், சமூக, அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டு அம்சங்கள் போன்றவற்றைப் பேணிப்பாதுகாக்கும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும், இவைகளை இனங்கண்டு, மனங்கொண்டு, திறன்கண்டு செயற்பட்டுச் சமாதானத்தைச் சாத்தியமாக்கவேண்டும்.

*“ சாத்தியமற்றவை எனப்படும்*
*இலட்சிய இன்ப உலகந்தான்*
*உண்மையாகவே சாத்தியப்படக்கூடியவற்றுள்*
*மிகவும் உண்மையாகவே சாத்தியப்படக்கூடியது”*

**கலை இலக்கிய படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் இவைகளைப் புரிந்துகொண்டு துணிவுடன் செயற்பட வேண்டும்.**


*சமாதானத்தைச் சாத்தியமாக்குவோம்!*

*–விமல்பாரதி*


---

**அவசியமில்லாமல் ஒரு மரத்தின் கிளையை வெட்டுவது இயற்கைக்குச் செய்யும் பெரிய தவறு. இது மனித குலத்திற்கு செய்யும் தவறு. இப்படிச் சிந்தித்தபோது நான் திகைப்படைந்தேன்.**

*–கிரேஷியன்.*



# மௌன நாடகங்கள்





சில குறிப்புக்கள்

— கலாஸ்திரன் —

மனிதகுல வரலாற்றில் பேச்சுக்கலை வளர்ச்சியடையாத வரலாற்றிற்கு முந்திய காலகட்டத்தில், மனிதர்கள் தமக்கிடையிலான கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து கொள்ளுவதற்குச் சைகைகள் (mimes) சில பொருள்கள், ஒலி எழுப்புதல் முதலியவற்றைப் பயன்படுத்தினர். ஆனால் மொழிவளர்ச்சியடைந்ததும் சைகைகள், பொருள்கள் மற்றும் ஒலிவழிக்கருத்துப் பரிமாற்றத்திற்கு அவசியம் அற்றுப் போய்விட்டது.

சைகைகள், அடையாளங்கள், குறியீடுகள் முதலியவற்றைப் பயன்படுத்திக் கருத்தைப் புலப்படுத்தும் கலையை நாடகத்தில் பயன் படுத்தும் போது அது மௌன நாடகமாகிறது. ஒரு கருத்தை வெளிப்படையாகச் சொல்லும் சுதந்திரம் அல்லது உரிமைகள் மறுக்கப்படும் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டத்தில், கருத்தை மக்களுக்குப் புலப்படுத்தும் போது பாவனச்சைகை ஓர் அழுத்தமான மொழிவடிவம் பெறுகிறது. இது அந்தச் சூழலின் கருத்துப் பரிமாற்றத்திற்கான ஓர் உத்தியாகவும் இருக்கிறது.

நாடகப்பாணியில் அமைந்த மதச்சடங்குகளும், அதில் பாவிக்கப்படும் பொருள்களும் கட்புலனாகாத கருத்துப் புலப்பாட்டின் அடையாளங்களாகவும், குறியீடுகளாகவும் அமைகின்றன. பேசாமல் பேசும் இந்தச் சைகைகள், குறியீடுகளின் மொழி, மௌனம். "பார்வை ஒன்றே போதுமா, பல்லாயிரம் சொல்வேண்டுமா" என்பதன் அர்த்தம் சைகையை மொழியாகக் கொண்டு பேசுதலாகும். ஒவ்வொரு அசைவும் கருத்துப்புலப்பாட்டின் மொழியாகும்.

மௌன நாடக அரங்கில் நடிக்கும் கலைஞர்கள் பொருத்தமான தெளிவான, கலாபூர்வமான வெளிப்படுத்தல்களில் கைதேர்ந்தவர்களாக இருப்பதும் அவசியம். நடிகர்களின் கலாபூர்வமான மெய்யசைவுகள், முகபாவனைகள், ஒப்பனைகள், ஒலி, ஒளி என்பவைகளின் ஒருங்கிணைந்த வெளிப்பாடு ஒரு மௌன நாடகம், அதன் இலக்கை அடைவதைச் சாத்தியமாக்குகிறது.

கலாபூர்வமான மெய்யசைவுகள் மற்றும் உணர்ச்சி வெளிப்பாடுகள் ஒழுங்கான, கடுமையான பயிற்சியினால் முழுமை பெறுகிறது. மௌன நாடகத்திற்குப் பாவனைச் செய்கையில் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியமானதாகும். பாவனைச் செய்கை என்பது கருத்தைப் புலப்படுத்தும் உயர்ந்த தொழில் நுட்பம் வாய்ந்த கலை. பல்வேறு மரபுவழி அறிவு, சடங்குகள் மற்றும் ஆட்டங்களை வேண்டி நிற்கும் இக்கலை கணிசமானகாலப் பயிற்சியில் தேர்ந்தவர்களாலேயே சிறப்புடன் ஆற்றமுடியும்.

இந்தப் பாவனைச் செய்கையின் பொருத்தமான அழகியல் மெய்யசைவுகள், உணர்ச்சி வெளிப்பாடுகள் கருத்துப் புலப்பாட்டைப் பயனுள்ள முறையில் கற்றுக் கொள்ள உதவுகிறது. மௌன நாடகத்தில் நடிகர்களின் மெய்யசைவு உணர்ச்சி வெளிப்பாடுகள் மிகத் தெளிவானவையாக அமைய வேண்டும். அவசரத்தன்மை, தாறுமாறான, சிக்கலான அசைவுகள்,

செய்கைகள் கருத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாதபடி தடுத்துவிடுகிறது.

மௌன நாடகத்தில் நடிகர்கள் பார்வையாளர்களோடு மெய்ய சைவுகள் மற்றும் உணர்ச்சி வெளிப்பாடுகள் மூலம் பேசுகிறார்கள். அதன் மொழித்திறன் மெய்யசைவுகள் மற்றும் உணர்ச்சி வெளிப்பாடுகளிலேயே தங்கியுள்ளது. ஒவ்வொரு அசைவும் திட்டமிட்ட ஒழுங்கில் அமைய வேண்டும். ஒப்பனை, ஒலி, ஒளி இவைகளுக்குச் சுருதி சேர்க்க வேண்டும். அப்போது தான் பார்வையாளர்களுக்குக் கருத்தைப் புரிந்து கொள்ள இலகுவாயிருக்கும்.

வழமையான அரங்க ஆற்றுகையை விடவும், மௌன நாடக அரங்கு, மிகவும் கனதியானதாகும். ஏனெனில் பார்வையாளர்கள் அனைவரும் ஒரே மாதிரியான அறிவு மற்றும் ரசனைத்தன்மை உடையவர்கள் அல்ல. ஏற்றத்தாழ்வான அனுபவ, அறிவு மற்றும் ரசனைத் தன்மையைக் கொண்டவர்களாக இருப்பதால் புரிந்து கொள்ளமுடியாமை என்ற சிக்கல் ஏற்படுகிறது. மௌன நாடகத்தில் நடன முத்திரைகளைப் பயன்படுத்தலை இங்கு குறிப்பிடலாம். நடனக் கலையில் ஓரளவுக்குப் பரிச்சயம் உள்ளவர்களுக்கே இத்தகைய முத்திரை உத்திகள் விளங்கும். எனவே மௌன நாடகம் சாதாரணமான கலை வடிவம் என்று கொள்ள முடியாது.

ஆனாலும், ஒரு நெருக்கடியான சூழலில் வார்த்தைகள் வலுவிழந்து போகையில் மௌன அரங்கு, கருத்தைப் புலப்படுத்தும் மிகவும் சக்திவாய்ந்த கருவியாகச் செயற்படவல்லது. மௌனத்தையே கலைக்கவல்ல மௌனமொழி. இதுவே மௌன அரங்கின் சிறப்பு.

திருமறைக் கலாமன்றம் 1993 களில் கொழும்பில் அரங்கேற்றிய இரண்டு மௌன நாடகங்களை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். 'அசோகா', 'கி.மு. 3நூற்றாண்டு' ஆகியவற்றைக் கலாபூர்வமாக அரங்கேற்றியது. பிரமாண்டமான இந்த இரு படைப்புக்களும் பலருடைய மௌனங்களைக் கலைத்தன. கலைத்தூது பேரா.சவரிமுத்து அடிகளாரின், கருத்துருவில், கைவண்ணத்தில், நெறியாள்கையில் உருவான இந்த மௌன நாடகங்கள் இலங்கைத்தமிழ் நாடகவரலாற்றில் புதிய தடங்களைப் பதித்தன. போரின் கொடுமையையும், சமாதானத்தின் அவசியத்தையும், இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் காலத்தின் அவசியமாகக்காட்டிய புதிய கண்ணாடி வார்ப்புக்கள். நான் அறிந்தவரை இலங்கைத் தமிழ் நாடகக்கலை வரலாற்றில் இந்த நாடகங்களே முதன்முதலில் அறிமுகம் செய்யப்பட்டன.

இவைகளை மனக்கண் நிறுத்திக் கொண்டு 18-06-2004இல் மகாவலி கலாச்சார அரங்கில், திருமறைக் கலாமன்றக் கொழும்புக்கிளை, பாணந்துறைத் திருமறைக் கலாமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து "கண்ணுக்குத் தெரியாத சுவர்" என்ற மௌன நாடகத்தை அரங்கேற்றியது. ப்பியூக்சர் சமாதான அமைப்பு ஏற்பாடு செய்திருந்த "வன்முறையையும் மோதலையும் எதிர்நோக்கும் வாழ்க்கை" என்ற கருத்தரங்கின்போது இந்த மௌன நாடகம் அரங்கேற்றப்பட்டது. கிட்டத்தட்ட ஐநூறு பேர் அவையில் அமர்ந்திருந்தனர்.

இலங்கையில் சுமூகமான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள், போரை எதிர் கொள்வதும், போரின் இடிபாடுகளுக்குள், தங்கள் இயல்பான வாழ்க்கையை இழந்து துன்பப்படுவதும், பின் போருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து, அதை முறியடித்து மீண்டும் வழமையான வாழ்க்கைக்குத் தங்களைத் தயாரித்துக் கொள்வதையும் நாடகம் சுட்டிக்காட்டியது.

இந்த நாடகத்தில், சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒருங்கிணைந்து வாழ்வதாகக் காட்சி அமைக்கப் பட்டிருந்தாலும், இன அடையாளங்களைப் புரிந்து கொள்ளும் வகையிலான பண்பாட்டு அம்சங்கள் வெளிப் படுத்தப்படவில்லை. உடையலங்காரம் பண்பாட்டு வேறுபாடுகளைப் புரிய வைக்கவில்லை. ஆக, போருக்குப் பின்னான சமூகவாழ்க்கையில் நடனங்களின் போதுமட்டும், கண்டி நடனமும், காவடி ஆட்டமும் இடம் பெறுகிறது.

போரை நடத்தும் ஆதிக்கசக்திகள் இரண்டு மக்களை ஒடுக்கும் காட்சி, ஒடுக்கு முறையின் கொடுமையினை ஆணித்தரமாகப் புலப்படுத்தவில்லை. நடிகர்களின்

மெய்யசைவுகள், உணர்ச்சி வெளிப்பாடுகள், கருத்துச் செறிவுள்ளதாக அமையவில்லை. யுத்தம் என்ற ஒரு பெரும் சுவருக்குள் மக்கள் படும் கஷ்டம் ஓரளவு நெஞ்சில் பதிவை ஏற்படுத்தியது. அந்தக்காட்சியை இன்றும் சிறப்பாகச் செய்திருக்கலாம். ஒரு நீள் சதுரமான சேலையில், **'WAR'** என்று மங்கலான கபில நிறத்தில் எழுதப்பட்டிருந்த போர்ச்சுவரைக் கொண்டு மக்களைச் சுற்றி நசுக்குவதான உத்தி சிறப்பான காட்சியாக அமைந்தது. இதன்பின் மக்கள் அதிகாரசக்திகள் இரண்டையும் அகற்றிவிட்டு, அந்தப் போர்ச்சுவரின் எழுத்துக்களைக் கிழித்தெடுக்கும் காட்சி நடைபெற்றது. அந்தப் போர்ச்சுவரைத்தகர்ப்பதில் ஈடுபட்டிருந்த நடிகர்களிடம் போருக்கு எதிரான உத்வேகம், கிளர்ச்சி பாவனச்சைகைகளில் முழுமையாக வெளிப்படவில்லை. இதன்பின், அந்த போர்ச்சுவர் தகர்க்கப்பட்டு, மக்கள் நொருங்கிப்போன சுவரைத்தாண்டிக் கொண்டு வெற்றியின் மகிழ்ச்சியில் பீறிட்டு எழுவதுடன் நாடகத்தை நிறைவு செய்திருந்தால், நாடகத்தின் பெயருக்கு ஏற்றாற்போல, அதன் கருத்துப் புலப்பாட்டிற்கு ஏற்றாற்போல முழுமை பெற்றிக்கும்.

ஆனால், போர்ச்சுவர் தகர்த்தப்பட்ட பின்பும், மக்கள் இயல்பு வாழ்க்கையை வாழ்வதாகக் காட்ட கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகளைக் காட்ட முற்பட்டது, நாடகத்தின் உள்ளடக்கத்திற்கு வலிமை சேர்க்கவில்லை.

இசையைப் பொறுத்தமட்டில், இடத்திற்கேற்ப, சூழலின் கனதிக்கேற்ப அழுத்தங்களையும், உணர்ச்சிகளையும் ஊட்டவில்லை.


மொத்தத்தில் இந்த மௌன நாடகம் அதன் இலக்கை முழுமை செய்யாவிடினும் பார்ப்பதற்கு ஒரு மன ஆறுதலைத்தரத்தவறவில்லை. மேடையைப் பொறுத்தமட்டில் அது நாடகத்திற்கான மேடை அல்ல. கருத்தரங்கு நடத்துவதற்கான மேடை. அதனால் லாவகமாய்த்திரிந்து நடிப்பதற்கு நடிகர்கள் சிரமப்பட்டதை உணரமுடிந்தது. பின்னணி இசைக்கான மைக் வசதிகள் இருக்கவில்லை. ஒலிநாடாவை நம்பி, பின்னணி இசையைச் சிறப்பாகச் செய் முடியாது. கலைத்துறையில் வளர்ச்சியடைந்த ஒரு மன்றம் திடீரென்று நாடகங்களை மேடையேற்ற அழைக்கப்படும் போது தன்னுடைய தனித்துவத்தையும், கலைத்துவத்தையும் கருத்தில் கொள்ளாது செயற்படுவது அதன் வளர்ச்சிக்கு ஊறு செய்யும் என்பதை மறந்து விடக்கூடாது.

இறுதியாக, மீண்டும் போரா சமாதானமா என்ற சந்தேகம் தலை தூக்கியுள்ள இந்தப் பதட்டமான சூழலில், சிங்கள, தமிழ் கலைஞர்கள் ஒன்றிணைந்து ஒரு மௌன ஆற்றுகை மூலம், போருக்கு எதிரானசெய்தியைக் கூறியது மிகவும் பாராட்டிற்குரியது. கொழும்புத் திருமறைக் கலாமன்றக் கலைஞர்களும் பாணந்துறை திருமறைக் கலாமன்றச் சிங்களக் கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள்●

## பெரிய திருடர்கள் பிரபுக்களாகிறார்கள்

சீனத்தாவோக்களுக்கு (உலாகாயதர்களுக்கு) அரசியல் நிலைப்பாடும் இருந்தது. நிலவுடைமை அமைப்பை, முறையை அவர்கள் எதிர்த்தார்கள். தம் எதிர்ப்பைக் காட்டச் சமூகத்துக்கு வெளியே (காடுகளில்) வாழ்ந்தார்கள். வேதியரை (பிராமணர்கள்) தந்திரர் (உலகாயதர்) விமர்சித்தது போலவே ஆளும் சாதிகளை தாபோக்கள் விமர்சித்தார்கள். "வெட்கம்கெட்டவர்கள் செல்வர்கள் ஆகிறார்கள். வாயாடிகள் அரசியல்வாதிகளாகிறார்கள். குட்டித் திருடர்கள் சிறையில் வாழுகிறார்கள். பெரிய திருடர்கள் பிரபுக்களாகிறார்கள். பிரபுக்கள் வீட்டுப் வாசல்படிகளில் உங்கள் மகா புலவர்கள் மண்டிபோட்டுக் கிடக்கிறார்கள். அறிவாளிகள், முனிவர்கள் என்போர் பெரிய திருடர்களின் காவலர்கள் தானே. கிளிந்த சட்டைதைக்க ஊசி திருடியவனுக்கு மரண தண்டனை. ஒரு நாட்டை அபகரித்தவனுக்கு இளவரசுப் பட்டம்".

நன்றி: உலகாயதம்



# சொல்லப்படாத ரகசியம்

— நிலாவரை மாறன்

அது ஓர் ஒதுக்குப்புறமான பின் தங்கிய குக்கிராமம். அந்தக் கிராமத்தின் பெரும்பான்மையோர் வறிய விவசாயக் கூலிகள். காலபோகப் பயிர் செய்கைக் காலத்தில் மட்டும், இங்குள்ளவர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்குக் குனிந்ததலை நிமிர முடியாத வேலை. மற்றைய நாள்களில் வேலை வாய்ப்பு மிகக்குறைவு. ஒழுங்கானவேலை இல்லாமை, வறுமை அந்தக் கிராமத்தின் ஒட்டிப்பிறந்த இரட்டைப் பிள்ளைகள்.

ஆண்களைப் பொறுத்தவரையில், விவசாயக் கூலியோடு கல்லுடைக்கவும் செல்கிறார்கள். இந்தக் கடுமையான வேலையும் கஷ்டமான வாழ்க்கையும் நிலவும் இந்தக் கிராமத்தில், ஒருசிலர் சிறு அளவிலான சொந்தத் தோட்டம் உள்ளவர்கள். இன்னும் சிலர் வறிய குத்தகை விவசாயிகள். வேறு சிலர் சீவல் தொழில், மேசன் வேலை என்று செய்கிறார்கள்.

இந்தக் கிராமத்தில் இரண்டொரு வீடுகளைத் தவிர மற்றவர்களுக்குக் கழிவறை கிடையாது. இந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள பற்றை பறுகுகளுக்குள், ஆண் பெண் பேதமின்றி இயற்கைக்கடன் கழிக்கிறார்கள். ஒரு சில கிணறுகள் உள்ளன. அதில்தான் எல்லோரும் தங்கள் தண்ணீர்தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கிறார்கள். எழுத்தறிவின்மை, அறியாமை, மூடநம்பிக்கை, சுகாதாரம் இன்மை எல்லாமே இங்கு ஆதிக்கம் செலுத்துகின்றன.

இந்தக் கிராமத்தை ஆய்வு செய்ய வேண்டும் என்று எனக்குத் தகவல் கிடைத்தது. சமூக பொருளாதார, கல்வி, பண்பாடு சம்பந்தமான ஆய்வு. இந்த ஆய்வு முறை எனக்குப் புதியது. அதனால், ஆய்வுக்கான வழிகாட்டல் எனக்கு வழங்கப்பட்டது. அந்தக்கிராமத்திலுள்ளவர்களுக்குச் சொந்தக்காரனும், அயல்கிராமத்தைச் சேர்ந்தவருமான பொன்னம்பலம் என்பவரை ஆய்வுக்குழுவினர் ஒழுங்கு செய்திருந்தனர். அவர் இந்தக் கிராமத்தின் வாசிகசாலைத் தலைவருக்கு என்னை அறிமுகம் செய்து வைக்க ஏற்பாடாக இருந்தது.

ஒருநாள் நானும் பொன்னம்பலமும் இந்தக் கிராமத்தின் வாசிகசாலைத் தலைவரைச் சந்திக்கச் சென்றோம். வாசிகசாலைக்கு முன்னால் செம்மண் ஒழுங்கை கிராமத்திற்குள் ஊடுருவிச் செல்கிறது. அந்த ஒழுங்கையின் வலப்புறத்தில் நீள்வரிசையில் சில தென்னை மரங்கள் இள நீர்க்குலைகளைச் சுமந்து கொண்டு நின்றன. தென்னைமரங்களை அடுத்தாற்போல் சில வாழைமரங்களும் நின்றன. வாசிகசாலையைச் சுற்றிலும் சில மிகச் சிறிய குடிசைகள் இருந்தன. வாசிகசாலையில், அதன் தலைவரை எதிர்பார்த்தபடி நானும் பொன்னம்பலமும் நின்று கொண்டிருந்தோம். பகல் பத்து மணியிருக்கும். வெய்யில் கடுமையாக இருந்தாலும் மெல்லிய காற்றுவீசிக் கொண்டிருந்தது.

அப்போதுதான் வாசிகசாலைக்கு எதிரே கிட்டத்தட்ட ஒரு முப்பதுயார் தூரத்திலுள்ள ஒரு கிணற்றடியில்,

நீளப்பாவாடையை மார்போடு கட்டிக்கொண்டு ஒரு இளம் பெண் சலவைக்கல்லில் உடுப்புகளைத் தோய்த்துக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டிச் சொன்னார்.

" தம்பி அவளைப்பாரும். இராசாத்தி பெயர். அவளுக்கு இப்ப கிட்டத்தட்ட இருபத்தைஞ்சு வயதைத்தாண்டியிருக்கும். இரண்டு ஆண்டு இடைவெளியில் மூண்டு பிள்ளைகள். காஞ்சு கறு கறு எண்டு கறுத்து வெய்யில்ல எரிஞ்ச பூடு மாதிரி இருக்கிறாள். இவள் நல்லாப் படிக்கக் கூடியவள். ஐஞ்சாம் வகுப்பு ஸ்கொலசிப்பில பாஸ் பண்ணியிருக்கிறாள். இண்டைக்கு இந்தக் கோலத்தில நிக்கிறாள்."

அவர் சொல்லிப் பெருமூச்சு விட்டார். நான் அவரை வியப்புடன் பார்த்தேன். அவரது முகத்தில் இலேசான சோகம் ரேகைகளை வரைந்து விட்டிருந்தது. அவருடைய செஞ்சுக்குள் இருப்பதைக் கிண்டி எடுக்கும் ஆவலில் கேட்டேன்:

"ஸ்கொலசிப்பில பாஸ் பண்ணியவள் எண்டு சொல்லிறியள். ஏன் தொடர்ந்து படிக்கேலை? கஷ்டமே?"

"கஷ்டந்தான் தம்பி. பிரச்சனை அதில்லை". என்றவர் ஒரு விரத்திச் சிரிப்போடு தொடர்ந்தார்.

" இவள் படிச்ச பள்ளிக்கூடத்தில, படிப்பிச்சவாத்திமாரெல்லாம் தடிச்சசாதி வெள்ளாளர். அவங்கட ஆதிக்கத்தில இருக்கிற பள்ளிக் கூடத்திலதான் இவள் படிச்சவள். தாழ்த்தப்பட்ட சாதிப்பிள்ளையளைக் கொஞ்சம் ஓரங்கட்டி வைச்சுத்தான் படிப்பிச்சவே. பள்ளிக்கூட கிணத்தில தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தண்ணி அள்ள அனுமதிக்கப்படேல. உயர்சாதிப்பிள்ளையள்தான் தண்ணி அள்ளி ஊத்துவினம். இந்தச் சூழலில் தாழ்த்தப்பட்ட பிள்ளை, ஸ்கொலசிப்பில பாஸ்பண்ணியதை உயர்சாதி ஆசிரியர்களால் பொறுத்துக் கொள்ள முடியேல. இதால சோதினை மறுமொழி வந்ததும், வெளியில தெரியாமல் மறைச்சுப் போட்டினம். அதோட அவள் பெயில் பண்ணிப் போட்டாள் எண்டு கதை அவிட்டு விட்டினம்."

இதைக்கேட்ட என் நெஞ்சம் உள்ளூரப்பதைத்தது. எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும், இந்தக் கொடுமையை வஞ்சனையைச் சீரணித்துக் கொள்ளமுடியாது. என் மனவரம்பை உடைத்துக்கொண்டு என்கண்மணிகளுக்குள் ஈரம் கசிந்தது. கல்தோன்றி மண்தோன்றாக்காலத்திற்கு முன்தோன்றிய மூத்த குடிகளின் பண்பாடு, இதைவிடச்சிறப்பாக உலகத்தின் எந்த இடத்திலும் இருந்திருக்காது. நான் என்னுள் தோன்றிய சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள அவரிடம் கேட்டேன்.

" அதுசரி, எப்படி இந்த விடயம் வெளியில வந்தது?"

" அந்தப்பகிடியை ஏன் கேக்கிறீர்? அந்தப்பள்ளிக் கூடத் தலைமைவாத்தியாருக்கும், உதவித் தலைமை வாத்தியாருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு முத்தி, வாய்த்தற்கமாக வெடிச்ச நேரத்தில, இந்த ஸ்கொலசிப் இருட்டடிப்பும் வெளியில வந்து விழுந்தது."

" பிறகு?"

" பிறகு என்ன? அவங்கள் பலத்தோடையும், அதிகாரத்தோடையும் இருக்கிறாங்கள். எந்த டிப்பாட்மெண்டுக்குப் போனாலும் அவங்கட அதிகாரந்தான். வலுவிழந்தசனம் நிமிர்ந்து நிக்க முடியுமே? அதுகளுக்கும் ஒரு பலமான ஊன்றுகோலிருந்தால் எழும்பி நிக்கலாம். இதைவிடப் பெரிய துயரம் என்னெண்டால், தான்பாஸ்பண்ணியும் தனக்கு இப்படிச் செய்து போட்டாங்களே எண்டு இந்தபெட்டை அழுத அழுகை இருக்கே, அதை இப்ப நினைச்சாலும் எனக்கு நெஞ்சு எரியுது. அதோட பள்ளிக்கூடம் விட்டவள்தான்."

" சாதிக்கொடுமை பெரிய அநீதிதான்"

" தம்பி குருவிகள் உயரப்பறக்கிறதைப் பருந்துகள் அங்கீகரிக்குமா? அங்கீகரிக்காட்டிலும் உயிரோடை விட்டுவைக்குங்களா? எப்பிடி எங்கை எல்லாம் தாழ்த்தப்பட்ட சாதியின் வளர்ச்சியைத் தடுக்கேலுமோ, அதைக் கச்சிதமாகச் செய்வினம். கொலையை விட இந்த ஸ்கொலசிப் இருட்டடிப்புப் பெரிய பாதகந்தான். நாங்கள் எங்கட சாதிப் பெயரைச் சொல்லக் கூச்சப்படுகிறம். அவங்கள் சைவ வெள்ளாளர், உயர் சைவ வெள்ளாளர் எண்டு பெருமையாகப் பேசிறாங்கள். நாங்கள் எதைச் சொல்லிப் பெருமைப்படுகிறது? சைவப்பள்ளர், சைவநளவர், சைவப் பறையர், சைவ அம்பட்டர், சைவ வண்ணார் எண்டோ?"

அவர் இதை மிகவும் லாவகமாக, விகடமாகப் பேசிய பாணியைப்பார்த்து, நான் சிரிப்பை அடக்கமாட்டாது வாய்விட்டுச் சிரிந்தேன். அவர் தொடர்ந்தார்.

"என்ன தம்பி சிரிக்கிறியள்? உண்மையைத்தான் சொல்லிறன். எங்கடை இன்பத்தமிழ், எங்களுக்கு

இன்பத்தைத்தரேல. தெய்வத்தமிழ் எங்களைக் கோவிலுக்குள் போய்க் கடவுளைக் கும்பிட விடேல, தண்டமிழ் எங்களைக் கிணத்தில தண்ணி அள்ளவிடேல. இப்படிக் கனக்கச் சொல்லலாம். இப்படியும் ஒருக்கா நினைச்சுப்பாரும். இந்த வெள்ளைக்காரரும் எங்கட நாட்டிற்கு, வந்திருக்கேலை எண்டா, தாழ்த்தப்பட்ட சனங்களின் நிலைமை எப்படி இருக்கும் எண்டு ஒருக்காக் கற்பனை செய்துபாரும். சைவமதம் எங்களை சிறையில வைச்சிருந்தது. கத்தோலிக்க மதம் எங்களை திறந்த வெளி சிறைச்சாலையில வைச்சிருந்தது. இதுதான் விஷயம்.''

"நல்லாப் பேசிறியள். எப்படி உங்களுக்கு இப்படியெல்லாம் பேச முடியுது?''

"தம்பி நான் ஒரு பழைய கொம்யூனிஸ்ட். இப்ப கொம்யூனிசம் பின்தங்கிப்போச்சு. உங்களை எனக்கு அறிமுகம் செய்து வைச்சவர் எங்கட பழைய தோழர் கௌரிதான். அவர் ஒரு வெள்ளாளர். என்ர வீட்டுக்கு வந்தால் சாப்பிடாமல் போகமாட்டார். அந்தக்காலத்தில, எங்களைப் போலப் படிப்பில்லாத ஆக்களை அறிவூட்டி உருவாக்கிவிட்டது கொம்யூனிற்றுகள்தான். சாதிக்கொடுமைக்கு எதிராகவும் வர்க்கஒடுக்குமுறைக்கு எதிராகவும் எங்களை போராட வைத்ததும் அவையள்தான்.''

அவர் பேசி முடித்து சில மணித்துளிகள் மௌனமாக நின்றார். அப்பொழுது ஒரு மீன் வியாபாரி பெட்டி கட்டிய சைக்கிளில் மீனைக் கொண்டு வந்து அந்த வாசிகசாலைக்கு முன்னால் நிறுத்தினான். அந்தக் கிராமத்தில் பெண்கள் சிலரும், ஆண்கள்சிலரும் மீன் வாங்கவந்து மீன் பெட்டியை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மீன் மணத்தில் சில நாய்களும் காகங்களும் வந்து சேர்ந்தன. அந்த இடம் கலகலப்பாக இருந்தது. கூடவே வாசிகசாலைத் தலைவரும், இரண்டு நிர்வாகசபை உறுப்பினர்களும் வந்து சேர்ந்தார்கள். வாசிகசாலைக்குள் இருந்த வாங்குகளில் உட்கார்ந்து நாங்கள் பேசிக்கொண்டோம்.

1982ம் மே 2ம்திகதிஎன்று நினைக்கிறேன், திட்டமிட்டபடி ஆய்வு வேலையை ஆரம்பித்தேன். நான் அந்தக் கிராமத்திற்குப் புதியவன் என்பதால் அவர்கள் ஆரம்பத்தில் என்னுடன் ஒத்துழைக்கத்தயக்கம் காட்டினார்கள். இருந்தும் என்னுடைய அணுகுமுறை, வெளிப்படையான கலகலப்பான பேச்சு, நடத்தை அவர்களை எனக்கு மிக நெருக்கமாகக் கொண்டுவந்து நிறுத்தியது. ஆண், பெண் பேதமின்றி என்னுடன் ஒத்துழைத்தார்கள். ஆய்வின் போது கடந்தகால நிகழ்ச்சிகள் சிலவற்றைப் பதிவுசெய்துகொண்டேன். மணிஅக்கா என்ற இளம் குடும்பப் பெண், என்னை நம்பி, எவருக்கும் சொல்லக்கூடாது என்ற வாக்குறுதியுடன் அந்தக் கொடுமையான கதையைச் சொல்லதொடங்கினாள்:

"காலபோகப் பயிர்செய்கை காலத்தில் எங்களில சில பெண்கள் ஒண்டாகத்தான், ஒரு தோட்டக்காரனுக்குத்தான் வேலை செய்வம். இங்க பட்டாளம் எண்ட பெரிய தோட்டக்காரன் இருக்கிறான். அவன்ர பட்டப்பெயர் அதுதான். அம்பது வயதுக்குமேல இருக்கும். உயரமானவன், தடியன், பலசாலி. நாங்கள் அவன்ர தோட்டத்தில வேலைசெய்ய ஏற்பட்டாக இருந்தது. அண்டைக்கு ஒரு வெள்ளிக்கிழமை. எங்களில் ஒருத்தியை அவன் தன்ரவீட்டைக் கழுவி விடும்படி சொன்னான். நான் என்ர சிநேகிதி இராத்தியை போகச் சொன்னன்.

அவன்ர வீடு பெரிய வீடு. வளவுக்குள் பூக்கண்டுகள் நட்டு அழகாக வைச்சிருக்கிறான். கறுத்தக்கொழும்பான், விலாட்டு மாமரங்களில் மாங்காயள் குலைகுலையாகக் காச்சிருக்கிறதைப் பாத்தால் ஆசையாகத்தான் இருக்கும். ஒரு பனங்கூடலுக்குள் தனியாக இருக்கிற வீடு. வீட்டைச் சுத்திமதில். வீட்டுக்குள் பைப்புகள் பூட்டி மோட்டரும் போட்டிருக்கிறான்.

இராசாத்தி பட்டாளத்தின் வீட்டுக்கு போனாள். வீட்டில ஒருத்தரும் இல்லை. அவள் குரல் கொடுத்தாள். "வீட்டில ஒத்தரையும் காணல்ல. எங்க போட்டினம்''

இப்போது பட்டாளம் பேசிக்கொண்டு வெளியில வந்தான். "எடி மேன, பிள்ளையள் இரண்டும் பள்ளிக்கூடம் போட்டினம். அம்மா சின்னதுக்கு சுகமில்லை எண்டு உந்த டிஸ்பன்சரிக்குக் கொண்டுபோட்டா. இப்ப வந்திடுவா. நான் வீட்டுக்கதவுகளைத் திறந்து விட்டிருக்கிறன். தொட்டியில தண்ணியும் நிறைச்சு வைச்சிருக்கிறன். இதில தும்புத்தடியும் விளக்குமாறும் இருக்கு. நீ அறைகளைத் துப்பரவாக்கு. எதுக்கும் நான் இந்த பால் மாட்டைக் கொண்டு போய் அங்கால மேயக்கட்டிப்போட்டுவாறன்.''

அவன் சொல்லிக்கொண்டே பால் மாட்டை அவிழ்த்துக் கொண்டுபோனான். அவள் தும்புத்தடியால் அறையைக் கூட்டத்துவங்கினாள். அஞ்சு நிமிசத்தில பட்டாளம் திரும்பி வந்து, அவள்நின்ற அறைக்குள்போய்

திடீரெண்டு கதவைப் பூட்டிக்கொண்டான்.

அவள் ஏங்கிப்போனாள். "ஏன் கதவைப் பூட்டிறியள் ஐயா" எண்டு பதட்டத்துடன் கேட்டாள். அவன் அதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளாமல், அவள் கையை பிடிச்சு இழுத்து இறுக்கிக்கட்டிப்பிடிச்சான். அவள் திமிறினாள். அந்த வீட்டிலிருந்து கத்திக் குழறினாலும் ஆருக்கும் கேளாது. அவள் சம்மதிக்கமாட்டாள் என்டத ஊகித்து கொண்ட அவன் அவளை நிலத்தில் சரித்து பலாத்காரமாகக் கெடுக்கத் துவங்கினான். அவன்ர பலத்துக்கும். முரட்டுத் தனத்துக்கும் ஈடுகொடுக்க முடியாமல் அவள் கத்தினாள். அவன் அவள் வாயை ஒரு கையால் பொத்திக்கொண்டு தன் காமவெறியைத் தீத்துக்கொண்டான். காமத்துக்கு மட்டும் சாதிமேன்மை, தீட்டு, துடக்கு ஒண்டுமில்லையாக்கும். வெளியில சொன்னால் பிரச்சினை, மானக்கேடு. பொம்பிளயளின்ர பக்கத்தில சரியிருந்தாலும் ஆம்பிளயள் பொம்பிளயத்தான் வருத்திறாங்கள், வதைக்கிறாங்கள். இந்த மௌன ஓலத்தை ஆருக்கு சொல்ல."

இந்தக் கதையை மணி அக்கா சொல்லி முடித்த போது அவள் கண்கள் கலங்கியிருந்தன. எனக்கு அவளைப் பார்க்கவே கூச்சமாக இருந்தது. இருந்தும் மணிஅக்கா பாதிக்கப்பட்டவர்களின் பெயரைச் சொல்லவில்லை. எனது வற்புறுத்தலின் பேரில், இதுவரைக்கும் தன்நெஞ்சுக்குள் மட்டும் பொத்தி வைத்திருந்த பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயரை சொன்னான்.

"நீங்கள் எந்த ஸ்கொலசிப்காரிக்காகக் கவலைப் பட்டியளோ, அவள், இிராசாத்திக்குத்தான் இந்தக் கொடுமை நடந்தது. தனக்கு மற்றவனால இழைக்கப்பட்ட அவமானத்தை, கொடுமையை தன்ரமனுசனுக்கு மனந்திறந்து சொல்லிஆறமுடியாத ஒரு துர்ப்பாக்கியம் பெண்கள்மேல சுமத்தப்பட்டிருக்கு. இது எப்பிடிப்பட்ட கொடுமை?"

மணிஅக்கா ஆண்கள்மேல் சாட்டைகொண்டு அடிப்பது போல்பட்டது. அதன்பிறகு அன்று என்னால் தொடர்ந்து ஆய்வு செய்ய முடியவில்லை. நான் அந்தக் கதையுடனே ஆய்வை நிறுத்திக் கொண்டேன். பெண்கள் கணவனுக்கு, பொய் சொல்வதற்கும், நடந்ததை அவனுக்கு மறைப்பதற்கும் ஆணாதிக்க மனோபாவமும் காரணம் என்பதை என்னால் உணரமுடிந்தது.●

## மக்களின் கலகம்

அன்றைய மன்னன் புத்த லட்சியத்தை ஒரு போதும் கடைப்பிடித்ததில்லை. தன் சலனங்களுக்கும், சபலங்களுக்கும் ஆட்பட்டு வரம்பற்ற கொடுங்கோளனாக இருந்தான். தண்டனைகளாலும், வரிகளாலும், சித்திரவதையாலும், கொள்ளையாலும், ஆலையில் கரும்பை நசுக்குவது போல தன் மக்களை நசுக்கினான். கண்ணில் விழுந்த தூசுபோலவும், கையில் குத்திய முள் போலவும், மக்களுக்கு வெறுப்பூட்டுபவனாக இருந்தான். அரசனின் நிஜ குணங்கள் போதை, குரூரம், ஊழல், ஏமாற்று, அயோக்கியத் தனம் இவைகள் தான். அவனுடைய சபையோரோ ஆன்மீக உலக விஷயங்களில் வல்லவர்கள். அவர்கள் அவனின் கொடுங்கோன்மைக்கு நேர் எதிராக இருந்து சமப்படுத்தக் கூடும்.எங்கே இந்த மந்திரிகளும், பூசாரிகளும் அரசனின் அநீதிக்கு துணை போகிறார்களோ அங்கே மக்களின் கலகம் நிச்சயம்.


**நன்றி: உலகாயதம்**

## என் இறுதிப் போர்க்களம்

பல களங்கள்
பலநூறு எதிரிகள்
பல்லாயிரம் தோட்டாக்கள்
மரணம்
என்னை சந்திக்கவில்லை

அது
என் இறுதிப்போர்க்களம்
ஒரு காதல்
ஒரு பெண
ஒரு பதில்
நான் மரணித்தேன்

-தனஞ்சயன்



- மேமன் கவி -

## இணக்கத்தை நோக்கி...

நான் வட்டம்
நீ நீள் சதுரம்
அவர்கள் முக்கோணம்
என்றே
உனதும் எனதும்
அவர்களதும் வடிவங்கள்
வெவ்வேறாய் இருக்கலாம்;

ஆனாலும்
நீயும் நானும் அவர்களும்
சந்திக்கும்
ஓர் இடம் உண்டுதானே?

தத்துவம் அவ்விடத்தினை
இணக்கம் எனச் சொல்லும்
நாம் அதனைச்
சாமாதானம் என்போம்

நான் சிவப்பு
நீ பச்சை
அவர்கள் நீலம்
என்றே
உனதும் எனதும்
அவர்களதும் வர்ணங்கள்
வெவ்வேறாய் அமையலாம்
ஆனாலும்

உனதும் எனதும்
அவர்களதும் சங்கமத்தில்
வர்ணங்கள் பேதங்கள்
தம்மை இழந்து நிற்பதை
கவனித்தாயா?

நான் வட்டம்
நீ நீள் சதுரம்
அவர்கள் முக்கோணம்
என்ற நம்
வடிவங்கள் தான் எவை?


அவை ஒன்றென இருக்கும்
சமாந்தரக் கோட்டின்
சுழற்சிகள் தானே?

பேதங்களை
உருவாக்கும் சுழற்சிகளை
நிறுத்துவோம்;



நம் ஆதிமூலமான
சமாந்தரக் கோட்டினின்
இணக்கத்தின் மையால்
சமாதான எழுத்துக்கள்
எழுதுவோம் வா!

# போர்தான் உன்கவிதை பேனாக்கள் உறங்கட்டும்.



என்றோ ஒரு நாளாவது
வானம் மனமிரங்கி
கருமுகிலை மூச்சிறைத்து
மழை பொழியுமென்று
வானத்தைப் பார்த்தபடி
படர்மெலிந்துகாத்திருக்கும்
கன்னி நிலமே!

இமைக்காத உன்விழிகள்
வடித்த கண்ணீரின்
காய்ந்த சுவடுகள்
கன்னங்களில் கோல மிட
நெஞ்சுக்குள் அடுப்பெரிய
வெற்று நம்பிக்கையை
பொத்திவைத்துக் கொண்டு
வளமான வாழ்வு பற்றி
வண்ணக்கவிதைகளை
சித்திரமாய்த் தீட்டிவைத்தாய்.

சுதந்திரத்தை சுவீகரித்து
சிறகுகளைக் கட்டிக்கொண்டு
வான் வெளியில் வட்டமிட்டு
நீலவான ஓடையிலே
நீந்துகின்ற வெள்ளிகளை
பார்த்துப் பரவசத்தும்
பால்நிலவில் சாமத்திலும்
முற்றத்துக் குளிர்மணலில்
பாடிச்சுதந்திரமாய்
ஆடிமகிழ்ந்த
உன்கவிதைத்தரிசனங்களில்
என் மனது நெகிழ்ந்து போனது.

கன்னிகழியாத வளநிலமே.
கணப்பொழுது கண்ணயர்வின்
உன்கவிதைத் தரிசனங்கள்
பாலைவனம் நெட்டுயிர்க்கும்
கானலாய்க் கரைந்துபோக
வாலைக் குமரி நீ
ஓலைப் பாயில் படுத்தபடி
கண்விழித்தாய்
நிஜங்களின் பிரசவங்களோ
நின்னைஎள்ளி நகைக்கின்றன.

எப்பவுமே இந்தவானம்
தானாகப் பொழியாது
கற்பனை கவிதைகளில்
உற்பத்தியாகும் சுதந்திரவேட்கை
நிஜத்தினில் கனவாய்ப்போக
அதிகரிக்கும் சீதனவெப்பம்
மனிதத்தைத் தின்ன
இன்னமும் இந்த
வானம் பொழியுமென்று
கண் விழித்தா காத்திருப்பாய்?

ஆண்களின் ஆதிக்கத்துள்
சிறைப்பட்டுக்கிடக்குமிந்த
சமுதாய அடித்தளத்தை
மோதித்தகர்த்துப்போட
போர் முரசு கொட்டு!
பூகம்பமாய் வெடி!

அன்பைப் பகிர்ந்து கொள்ளும்
ஜீவன்களைச் செதுக்கும்
போர்தான் உன்கவிதை
பேனாக்கள் உறங்கட்டும்.

**சோலைக்குருவி**

# பாதை திறந்திடு

பாதை திறந்திடு
வாழ்வைத் தொடங்கிடும்
பயணம் தொடர்ந்திடவே - இங்கே
பாதையில் கிடக்கும்
பள்ளம் மேடுகள்
தட்டி நிரப்பிடுவாய்.

பழமை தந்த
பழுவைத் துடைத்து
புதுமை புரிந்திடுவாய் - எழும்
செழுமை நிறைந்த
சிந்தனையாலே
சரித்திரம் மாற்றிடுவாய்.

மானிடரெல்லாம்
ஒருகுலமென்று
சங்கு முழங்கிடுவாய் - இழி
வேற்றுமையாலே
பாரினைக் குழப்பும்
பதர்களை வீழ்த்திடுவாய்.

நீதியை நிலத்தில்
நாட்டுதலாலே
நிந்தைகள் ஏற்றிடுவாய் - எட
நீதியில் விட்டுக்
கொடுப்பனவில்லை
கொள்கையைப் பூண்டிடுவாய்.

தீமையைச் சுட்டு
எரிந்திடும் தீப்பொறி
என்றே எழுந்திடுவாய் - என்றும்
நீதியை நாட்டலில்
நினக்கிலைப் பாசம்
நினைவிலே வைத்திடுவாய்.

கோடி தரினும்
கொள்கையை விட்டுக்
கொடுப்பதற்கில்லையடா - எழு
கொள்கையை விற்றுயிர்
வாழ்வினைப் போக்கிடும்
வீணரை மாய்த்திடவே.

எங்கும் புதுமை
எதிலும் புனிதம்
என்றே எழுந்திடடா - வெறும்
பணத்தைக் கொண்டு
பாசம் அளக்கும்
பிணங்களைச் சுட்டெரிப்பாய்.

வருந்தி உழைப்பவர்
வாழக் கிடப்பது
வானவன் கட்டளையோ - வா
வயிறு புடைத்திட
உண்டு களித்திடும்
வர்க்கத்தைச் சரித்திடவே.

பெண்ணை அடிமைகொள்
பேதையை வீழ்த்திடும்
போரைத் தொடுத்திடுவாய் - உயர்
பொன்னை நிகர்த்திடும்
பெண்ணை மதித்திடும்
பொதுமையை நாட்டிடுவாய்.

காலைப் பிடித்துயிர்
வாழ்க்கை நடத்திடும்
நாய்களை வீழ்த்திடவே - தன்
மான உணர்ச்சியை
மறந்து கிடக்கின்ற
மாக்களை ஓட்டிடுவாய்.

நாங்கள் தமிழர்கள்
நாங்கள் மனிதர்கள்
நாளைய வாழ்வு என்ன? - இன
வாதப் பெரும் புயல்
வந்து அடித்தமை
வீழ்த்திட விட்டிடவோ?

**- செண்பகன் -**

# வாங்கிக்கட்டு ...

வாங்கிக்கட்டு வாங்கிக்கட்டு
ஐக்கியப்பட்டு வாங்கிக்கட்டு
வாழ்க்கை என்ற நெசவினிலே
கஷ்டப்பட்டு நெய்த பட்டு.

கூறுபட்டுப் போனதனால்
நூறு பட்டு மோதியதால்
காயப்பட்டுத் துன்பப்பட்டு
போனவளே வாங்கிக்கட்டு.

மானப்பட்டு ரோசப்பட்டு
மனிசருக்கு வாய்ச்சபட்டு
வாங்கிக்கட்டு வாழ்வு தரும்
ஐக்கியப்பட்டு வாங்கிக்கட்டு.

நீண்ட காலப் பிணக்கிது
தீர்க்க வேணும் சுறுக்கிது
தாமதமே செய்யாது
ஐக்கியப்பட்டு வாங்கிக்கட்டு.



- அகல்யா-

வெளியீடு :

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம், இலங்கை
தொலைபேசி : 021-2222393
E-mail: cpajaffna@eureka.lk